

விவாகச் சட்டங்கள்

1955ம் வருஷ ஹிந்து விவாகச் சட்டமும்

1954ம் வருஷ விசேஷ விவாகச் சட்டமும்.

— தெளிவான விளக்கங்களுடன் —

வேல் புத்தக நிலயம்

விவாகச் சட்டங்கள்

1955-ம் வருஷ ஹிந்து விவாகச் சட்டமும்
1954-ம் வருஷ விசேஷ விவாகச் சட்டமும்

தெளிவான விளக்கங்களுடன்
கூடியது

ஆர். ஜி. ராஜன், பி.எஸ்ஸி., பி.எல்.
எழுதியது

வேல் புத்தக நிலையம்
69, பீட்டர்ஸ் ரோடு :: சென்னை - 6.

முதல் பதிப்பு: செப்டம்பர், 1956.

விலை : ரூ. ஒன்று

அச்சகம்: சண்டே டைம்ஸ் பிரஸ், சென்னை - 6

பதிப்புரை

விவாகம், ஒவ்வொருவரின், ஆண் பெண் ஆகிய இரு பாலரின் வாழ்க்கையிலும், அதிக முக்கியமான சம்பவம். அதன் முக்கியத்துவம் அளவு கடந்தது, ஆகையால் திருமணத்தைச் சின்ன விஷயம் என்ருே அல்லது அலட்சியமாகக் கருதிவிடக் கூடியதென்ருே யாரும் நினைத்து விடுவதற்கில்லை. இதன் முக்கியத்தை உணர்ந்தே எவ்வளவோ சிறப்பாகவும், குதூகலத்தோடும், பக்தியோடும் திருமணங்கள் நடத்தப்படுகின்றன.

விவாகங்கள் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு முக்கியம் அந்த விவாகங்களை ஒழுங்கு படுத்தவும், தாம்பத்ய பாத்தியதைகளை வகுக்கவும் ஏற்பட்ட சட்டங்களும். சமீபத்தில் புதிதாக அமுலுக்கு வந்திருக்கும் விவாகச் சட்டங்கள், இதுவரை இருந்துவந்த சட்டங்களிலும், பழக்க வழக்கங்களிலும் பெரிய மாறுதல்களைச் செய்துவிட்டன. விவாக பந்த நிலையில் புதுப் புரட்சியையும் செய்திருக்கிறது எனலாம்.

ஆகவே அதிக முக்கியமானதான இச் சட்டங்களை எல்லோரும் தமிழில் படித்து அறிந்திருக்கும்படிச் செய்ய வேண்டும் என்பது எமது ஆவல். அதன் பலனே இப்புத்தகம், இச் சட்டங்களின் நுணுக்கங்களை அறிவதில் இது தமிழருக்கு உதவியாயிருக்குமானல் அதுவே எமக்கு ஆனந்தம்.

ரா. வேங்கடராஜுலு,

பதிப்பாசிரியர்.

சொத்தும் சுதந்திரமும்

சொத்தைத் தேடுகிறோம். நமக்குப் பின்னுல் குடும்பத்திற்கு ஆகட்டும் என்று வீடுவாசல் நிலபுலம் முதலியவைகளை வைக்கிறோம்.

ஆனல் நமக்குப் பின்னுல் அது யாருக்குப் போகும் ?

இதற்கு முன்னுலிருந்த சட்டம் வேறு, 1956 ஜூன் 17—ந் தேதி முதல் அமுலில் இருக்கும் சட்டம் வேறு. இப்பொழுது பெண்களுக்கும் சொத்தில் பூரணமான உரிமை வந்துவிட்டது.

அதன் விவ்ரம் என்ன என்பதை எல்லோரும் எளிதில் அறிய உதவுவது,

புதிய ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம்
என்ற புத்தகம்.

புரியும் பாஷையில் சட்டத்தின் மொழிபெயர்ப்பு இதிலுண்டு. அத்துடன் அதன் ஷரத்துக்களுக்கு வெகு தெளிவான விளக்கங்களும் உண்டு.

ஹிந்துச் சட்டம் வளர்ந்த வரலாறும் இதில் கூறப்பட்டிருக்கிறது. இதற்கு முன்னுல் அமுலிலிருந்த வாரிசு உரிமைச் சட்டத்திற்கும் இப் புதிய சட்டத்திற்குமுள்ள பேதங்களும் தெளிவாகக் காட்டப்பட்டிருக்கின்றன.

சட்ட நிபுணர் ஸ்ரீ. ஆர். ஜி. ராஜன்
பி. எஸ். ஸி., பி. எல். எழுதியது.

இதைப் படிப்பவர்களுக்கு ஹிந்துச் சட்ட சரித்திரமேயன்றி பெண்களுக்குச் சொத்துரிமை வளர்ந்த கதையும் வெகு தெளிவாக விளங்கும்.

விலை ரூ. ஒன்று. (தபால் செலவு அணு 4.)

வேல் புத்தக நிலையம்,

69, பீட்டர்ஸ் ரோடு ; சென்னை—6

விவாகச் சட்டங்கள்

பழைய சாத்திரங்களும் சட்டங்களும்

ஆணுக்குப் பெண்ணிடத்திலும், பெண்ணுக்கு ஆணின் பேரிலும் கவர்ச்சி, ஆதியில் மனிதன் தோன்றிய காலத்திலேயே உடன்பிறந்து விட்டது. இது இயற்கையின் நியதி. இந்தக் கவர்ச்சியே காதல் என்றும் அன்பு என்றும் பிறகு வழங்குவதாயிற்று. உலகம் இயங்குவதே இத்தகைய கவர்ச்சியின் அடிப்படையில்தான் என்பது தத்துவ ஞானிகளின் கருத்து. பிராணவாயு ஜலவாயுவைக் கவர்கிறது; இதனுலேயே ஜலமும் இப்பூவுலகில் இருக்கிறது என்பது ஒரு ஜெர்மன் வேதாந்தியின் அபிப்பிராயம். ''காதல் என்பது கவர்ச்சியின் மூலம், ஒரு கல்லேயும் மற்ருேர் கல்லேயும், மண்ணேயும் மண்ணேயும், ஒரு நட்சத்திரத்தையும் மற்ருேர் நட்சத்திரத்தையும் இணைத்து, நாம் இன்றிருக்கும் பிரபஞ்சமாக்கி யிருக்கிறது'' என்றும் அவர் கூறுகிருர்.

ஆகையால் இந்த ஆண், பெண் கவர்ச்சி பிரபஞ்ச அற்புதங்களில் அதிக முக்கியமானது என்பதைப் பற்றி அதிகமாக விவரிக்க வேண்டியதில்லை. இதன் விளைவே ஆணும் பெண்ணும் கூடி வாழ்வது என்பதும், அதன் பலனுகை இன விருத்தியும் பிறவும். மனிதன் நாகரிகம் பெருது காட்டிலும் மலேகளிலும் மிருகங்களோடு மிருகமாக வாழ்ந்து வந்த காலத்தில், வெறும் கவர்ச்சியினுல் மாத்திரம் தூண்டப்பட்ட மனிதன், தன்னிஷ்டம் போல நினைத்த பெண்ணேடு கூடி வேட்கையைத் தீர்த்துக் கொள்ளுவது என்றிருந்தது. பிறகு மனிதர் சிறிது நாகரிகம் பெற ஆரம்பித்ததும், சொத்துடமை வைத்துக் கொள்ளுவது என்பதும் வந்ததும், ஒரு குறிப்பிட்ட ஆணுக்கு ஒரு குறிப்பிட்ட பெண் உடமையா யிருப்பதும், இதன் பலனுகப் பிறக்கும் குழந்தைகளுக்கு அக்குறிப்பிட்ட பெற்ருேரே பராமரிப்பாளராக இருப்பதும் அவசியம் என்ற அறிவும் மனிதனுக்குத் தோன்றியது. குடும்ப வாழ்க்கை என்பது

தோன்றிய கதையே இதுதான் என்பது மனித வர்க்க வரலாற்று ஆராய்ச்சி வல்லவர்கள் கருத்து.

குடும்ப வாழ்வு தோன்றி மனிதன் சமூகமாக வாழ்வது என்பதும் ஏற்பட்ட பிறகு, வாழ்க்கையை அதற்கு ஏற்ற முறையில் செப்பனிட்டுக் கொள்ளுவதற்கு ஆணும் பெண்ணும் சேர்ந்து வாழ்வது என்பதில் சில கட்டு திட்டங்களையும் உண்டாக்கிக் கொண்டனர். இதன் பலனாகத் தோன்றியதே விவாக முறை. இந்த முறையின் வளர்ச்சி வரலாற்றை கவனித்தால் ஒன்று நன்றாக விளங்கும். மனிதன் தன்னை முதலில் எண்ணினான். பிறகு குடும்பம் நிரந்தரமாக இருக்க வேண்டும் என்பதை யோசித்தான். பின்னர் இக்குடும்பம் எந்த சமூகத்தில் அடங்கி யிருக்கிறதோ அந்த சமூகத்தையும் சிந்தித்தான். இவற்றின் நன்மைக்கு விவாக முறை எப்படி இருக்க வேண்டுமோ அதற்கு ஏற்றாற் போல காலத்திற்குக் காலம் அதை மாற்றிக் கொண்டும் வந்திருக்கிறான்.

பொதுவாக எல்லா நாடுகளிலும், எல்லாச் சமூகங்களுக்கிடையேயும் விவாக முறையில் இவ்விதம் மாறுதல்கள் இருந்தே வந்திருக்கின்றன. இந்தியாவிலும் காலத்திற்குக் காலம் இந்த மாறுதல்கள் ஏற்பட்டே வந்திருக்கின்றன. ஆகையால் இப்பொழுது விவாக சம்பந்தமான சட்டங்களில் மாறுதல்கள் செய்யப்பட்டிருக்கின்றவெனின், காலத்தால் மாறுபட்டிருக்கும் நிலைமையையும், சமூகத்தின் நன்மையின் அவசியத்தையும் உத்தேசித்து இந்தச் சட்ட மாற்றங்கள் அவசியமாகின்றன என்றுதான் அர்த்தம். எனவே ஏற்பட்டிருக்கும் மாறுதல்களைக் கண்டு மிரளுகிறவர்கள் உலகத்தின் முன்னேற்றப் போக்கை உணராதவர்களேயாகும்.

இந்நாட்டில் ஹிந்து சமூகம் மிகப் புராதனமானது என்பதில் சந்தேகமில்லை. வெகு காலத்திற்கு முன்னாலிருந்தே இந்த சமூகத்திற்கு விவாக சம்பந்தமாகப் பல பழக்க வழக்கங்களும், பின்னால் அவைகளே சட்டங்களாகவும் இருந்து வந்திருக்கின்றன என்பதும் உண்மை. ஆனால் இந்தப் பழக்க வழக்கங்கள் எல்லாக் காலங்களிலும் ஒரே

மாதிரியாக இருந்ததில்லை. பிற்காலத்தில் அப்பழக்க வழக்கங்களையும் விதிகளையும் ஒட்டி வந்த சட்டங்களும் அடிக்கடி மாறுதலடைந்து வந்திருக்கின்றன. இதன் சம்பந்தமாக ஹிந்து தர்ம சாத்திரங்கள் எடுத்துக் காட்டப்படுகின்றன. இந்த தர்ம சாத்திரங்கள் எனப்படுபவை ஸ்மிருதிகள். ரிஷிகளால் செய்யப்பட்டவைகள் என்று கூறப்படும் இந்த ஸ்மிருதிகள், அந்தந்த ரிஷி வாழ்ந்த காலத்தில் நடைமுறையிலிருந்த பழக்க வழக்கங்களையே ஆதாரமாகக் கொண்டவை. அவர்கள் தாங்கள் குரு மூலம் அறிந்ததையும், நேரில் கண்டதையும் கொண்டு தாங்கள் தெரிந்து கொண்டவைகளையும் வைத்து, ரிஷிகள் அவரவர்களின் காலத்தில் எழுதி வைத்து விட்டுப் போனார்கள். இதனாலேயே இந்த தர்ம சாத்திர விதிகளும் எப்பொழுதும் ஒரே மாதிரியானதாக இல்லாமல் மாறுபட்டு வந்திருக்கின்றன. பிற்காலத்தில் விவாகச்சட்டத்தில் ஏற்பட்ட மாறுதல்களும் இதே போலவே காலத்தையொட்டி மாற்றப்பட்டு வந்திருக்கின்றன. இந்த மாற்றங்களில் சில, நல்லவைகளிலிருந்து தவறானவைகளாக மாறியுமிருக்கின்றன. ஸ்மிருதி வியாக்யான கர்த்தர்களுக்குள் அபிப்பிராய பேதமும் இருந்து வந்திருக்கிறது என்பதற்கு ஒரு உதாரணம், பெண்களின் விவாக வயதைப் பற்றிய விஷயம்.

1929-ல் குழந்தைகள் மணத் தடைச் சட்டம் அமுலுக்கு வரும் வரையில், பெண்கள் மிகச் சிறு குழந்தைகளாக இருக்கும்போதே விவாகஞ் செய்து கொடுத்து விடுவது என்பது பல சாதியாரிடையே வழக்கமாக இருந்து வந்திருக்கிறது என்பதை எல்லோரும் அறிவார்கள். ஆனால் பெண்களின் விவாக வயதைப் பற்றி ஸ்மிருதிகள் என்ன கூறுகின்றன என்பது இச்சந்தர்ப்பத்தில் ருசிகரமானதாகும். யாக்ஞவல்கியா முக்கியமான ஸ்மிருதி கர்த்தா. ஹிந்து சட்டத்திற்கே அடிப்படையானதான மிதாட்சர முறையின் கர்த்தாவே இவர்தான். ஆனால் இவரும் வியாஸரும், "ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து கொடுக்க உரிமை பெற்றவர்கள், அப்பெண் ருதுவாவதற்கு முன்னாலேயே விவாகஞ் செய்து கொடுக்கத் தவறி விடுவார்களானால், அவர்கள் பாபத்தைச் செய்தவர்களாவார்கள். அங்ஙனமில்லாமையில் அப்பெண் தன்னிஷ்டப்படி

கல்யாணம் செய்து கொண்டு விடலாம்,'' என்கிறார்கள். இதே அபிப்பிராயத்தைக் கூறும் கௌதமர், ஒரு பெண்ணை விவாகஞ் செய்து கொடுக்கக் கடமைப்பட்டவர்கள், அப்பெண் தொடர்ந்து மும்முறை விலக்கான பிறகும் விவாகம் செய்து கொடுக்காது தவறி விடுவார்களானால், அப்பெண் தானே ஒரு வரனைத் தேடி மணந்து கொள்ளலாம் என்கிறார். ஆனால் முக்கியமான தர்ம நூல் என்று கருதப் படும் மனுதர்ம சாத்திரத்திலோ, ஒரு பெண் ருதுவாகி மூன்று வருடங்கள் வரையில், தன்னைப் பெற்றோர் விவாகஞ் செய்து கொடுக்கக் காத்திருக்க வேண்டும்; அதன் பிறகும் விவாகஞ் செய்து கொடுக்காமலிருந்து விடுவார்களானால், தானே ஒரு வரனைத் தேடி மணஞ் செய்து கொண்டு விடலாம் என்று கூறப் பட்டிருக் கிறது.

ஆகையால் பெண்களின் கல்யாண வயதில் இந்த ஸ்மிருதிகளுக்குள் ஒரே மாதிரி அபிப்பிராயம் இருந்ததில்லை என்பது மேலே கண்ட விவரத்திலிருந்து தெரிகிறது. மனு ஸ்மிருதி போன்றவை, ருதுவாகி மூன்று வருஷங்களுக்குள் ஒரு பெண்ணை மணம் செய்துகொடுக்கலாம் என்று கூறிய போதிலும், பின்னால் வந்த பழக்கமோ அதற்கு முற்றிலும் மாறாக இருந்தது. இதற்குப் போதுமான ஆதாரம் குழந் தைக் கல்யாணப் பழக்கம் இந்நாட்டில் வழக்கத்திலிருந்து வந்ததேயாகும்.

இந்தவித மாறுபாடுகள் இருந்துவந்தன என்பதற்கு மற்றோர் உதாரணம், விவாக ரத்து, விதவைகள் மணம் ஆகியவைகளைப் பற்றியது. ஒரு ஹிந்துப் பெண் ஒரு கண வனை மணந்துவிட்டால் இறப்பு ஒன்றினால்தான் அந்த மணத்தைப் பிரிக்க முடியுமேயன்றி வேறு எதுவும் அம் மணத்தை ரத்துச்செய்ய முடியாது என்பதே ஹிந்து சமூகத் தில் நீண்டகாலம் பெண்களின் தலைவிதியாக இருந்துவந்தி ருக்கிறது. 1865-ல் ஹிந்து விதவை விவாகச் சட்டம் நிறை வேறிய காலம் வரையில் ஹிந்து விதவைகள் மறுமணம் செய்துகொள்ளக் கூடாது என்பதும் இருந்தது. ஆனால் இந்த விவாக ரத்து, ஹிந்துப் பெண்கள் மறு மணத்தைப் பற்றி ஸ்மிருதிகள் என்ன கூறுகின்றன என்பதைப்பற்றி

கவனிப்போம். பிரிந்து எங்கோ போய்விட்ட கணவனுக்காக ஒரு ஹிந்து மனைவி ஆறு ஆண்டுகள் காத்திருக்க வேண்டும் என்று கௌதமர் கூறுகிறார். ஆனால் மனுவோ, கணவன் நல்ல காரியங்களுக்காக வெளிநாடுகளுக்குப் போயிருந்தால் 8 ஆண்டுகளும், படிப்புக்காகப் போயிருந்தால் 6 ஆண்டுகளும், இன்னுமொரு மனைவியைப் பார்க்கவோ, அதுபோன்ற வேறு காரியங்களுக்காகவோ கணவன் போயிருந்தால் 3 ஆண்டுகளும் மனைவி காத்திருக்க வேண்டும் என்கிறார். இவர்களிருவரும் ஒரு ஹிந்துவின் மனைவி இவ்விதம் கணவனுக்காக இத்தனை வருஷங்கள் காத்திருக்க வேண்டும் என்று குறிப்பிடுவதால், அதற்குப் பிறகு அவள் இன்னுமொருவரை மணந்துகொள்ளலாம் என்றே கருதி இருக்கிறார்கள் என்று யூகிக்க முடிகிறது. ஆனால் பிரஷார் இதைப்பற்றி இன்னும் தெளிவாகக் கூறுகிறார். விவாகமான ஒரு பெண் தன்னுடைய கணவன் இறந்துவிட்டாலோ அல்லது அவன் என்னவானான் என்பது தெரியாமலிருந்தாலோ, துறவியாகவோ, பேடியாகவோ ஆகிவிட்டாலோ, ஒழுக்கங் கெட்டவனாகிவிட்டாலோ, அவள் வேறு ஒரு கணவனை மணந்துகொள்ளலாம் என்கிறார். ஆனால் இவரே இன்னுமொன்றும் கூறுகிறார். ஒரு விதவை பிரமச்சரியம் அனுசரித்தால் சுவர்க்கத்திற்குப் போகலாம் என்றும், இன்னும் இறந்த கணவனுடன் உடன்கட்டை ஏறிவிட்டால் அவளுக்கு சுவர்க்கத்தில் நிரந்தரமாக இடமிருக்கும் என்றும் கூறுகிறார். விவாக ரத்தைப்பற்றி ஸ்மிருதிகள் தெளிவாகக் கூறாவிட்டாலும், விவாக ரத்து என்பதுபோன்ற சட்டச் சடங்குகள் எவையுமில்லாமல் வேறு கணவனை, சில சந்தர்ப்பங்களை யொட்டி, மணந்துகொள்ள ஸ்மிருதிகளும் ஓரளவுக்கு அனுமதித்திருக்கின்றன.

ஸ்மிருதிகள் கூறிய முறைகளே என்றும், எல்லாக் காலங்களிலும் நிரந்தரமாக இருந்து வந்ததில்லை என்பதற்கு, விவாக முறைகளில் ஏற்பட்டுவந்திருக்கும் மாற்றங்களும் மற்றோர் எடுத்துக்காட்டாகும். ஸ்மிருதிகள் 8 வகையான விவாகங்களை குறிப்பிடுகின்றன. அவை வருமாறு:

(1) பிரம விவாகம்: பெற்றோரின் சக்திக்கு ஏற்றபடி ஒரு பெண்ணுக்கு ஆடை ஆபரணங்களை அணிவித்து,

அப் பெற்ருேர்களால் முன்னுடியே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒருவனுக்கு, மணமகன் வீட்டிற்கு அழைத்துக்கொண்டு போய் முறைப்படி சடங்குகளை செய்து மணஞ்செய்து கொடுப்பது என்பது இம்முறை.

(2) ஒரு குருக்கள் செய்த சேவைக்காக அவனுக்கு ஒரு பெண்ணை யாகத்தில் தத்தஞ்செய்து கொடுத்துவிடுவது தெய்வமுறை மணம்.

(3) மாப்பிள்ளையிடமிருந்து ஒரு ஜதை பசுக்களையோ அல்லது எருதுகளையோ வாங்கிக்கொண்டு பெற்ருேர் ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொடுப்பது அர்ஷா விவாக முறை.

(4) மாப்பிள்ளையிடமிருந்தோ அல்லது அவன் வீட்டாரிடமிருந்தோ பெண்ணுக்கு விலையாகப் பணத்தை வாங்கிக்கொண்டு அவளை மணஞ் செய்துகொடுப்பது அசுர விவாக முறை.

(5) ஒரு பெண்ணுடன் ஒருவன் சேர்ந்து கூட்டாக மத சம்பந்தமான சடங்குகளைச் செய்வதில் ஈடுபட்டிருந்து அப்பெண்ணை மணப்பதாக அவன் கோரினல், அவனுக்கு அவளை மணஞ்செய்விப்பது பிரஜாபத்திய விவாக முறை.

(6) ஆணும் பெண்ணும் பரஸ்பரம் காதலர்களாயிருப்பது என்ற பிரதிக்ஞை செய்துகொண்டு இருவரும் கலந்துவிடுவது கந்தர்வ விவாக முறை.

(7) போர்க்களத்திலிருந்தோ அல்லது யுத்தத்திலோ ஒரு பெண்ணை பலவந்தமாக தூக்கிக்கொண்டுபோய் மணந்துகொண்டுவிடுவது ராட்சச விவாக முறை.

(8) ஒரு பெண்ணை திருட்டுத்தனமாகவோ அல்லது ஏமாற்றியோ அல்லது அவள் தூங்கிக்கொண்டிருக்கும் போதோ அல்லது அவள் குடிபோதையி லிருக்கும்போதோ அவளைத் தூக்கிச்சென்று மணந்துகொள்வது பைசாச விவாக முறை.

இவ்விதம் 8 வித விவாக முறைகள் உண்டு என்று ஸ்மிருதிகள் கூறுகின்றன. ஆனல் இவை எல்லாம்

என்றுமே அமுலில் நிரந்தரமாக இருந்துவிடவில்லை. பிரம விவாக முறையே சிறந்தது என்று ஹிந்துச் சட்டம் பின்னுல் அங்கீகரித்தது; அசுர முறையும் ஒப்புக் கொள்ளப்பட்டு வந்திருக்கிறது.

ஆகையால் வெகு காலமாகவே ஹிந்து விவாக முறையும் பழக்க வழக்கங்களும் மாறி வந்திருப்பதோடு இந்தியாவில் பிரிட்டிஷ் ஆட்சி ஏற்பட்டபிறகு இதுவரை ஹிந்துக்களின் விவாக உறவு சம்பந்தமாக அநேக சட்டங்களும் அப்போதைக்கப்போது செய்யப்பட்டும் வந்திருக்கின்றன. இப்புத்தகத்தில் முக்கியமாகக் குறிப்பிடப்பட்டிருக்கும் 1955-ம் வருஷத்திய ஹிந்து விவாக சட்டம், 1954-ம் வருஷத்திய விசேஷ விவாகச் சட்டம் ஆகிய இரண்டின் முக்கியத்தையும் தெரிந்துகொள்வதற்கு, அதற்கு முன்னுல் விவாக உறவைப்பற்றி நிறைவேற்றியிருந்த சட்டங்களையும் அறிவது அவசியமாகையால் அவற்றைச் சுருக்கமாகக் கீழே தருகிறோம்:

(1) உடன்கட்டை ஏறும் வழக்க ஒழிப்புச் சட்டம்: கணவன் இறந்துவிட்டால் புருஷனை சுடுகாட்டில் வைத்துக் கொளுத்தும் தீயில் தானும் உயிருடன் படுத்து இறந்துவிட்டால், அதாவது உடன்கட்டை ஏறிவிட்டால், சுவர்க்கம் போய்விடலாம் என்ற நம்பிக்கையில் ஹிந்துப் பெண்கள் உடன்கட்டை ஏறிவந்தார்கள். இக் கொடிய பழக்கத்தை ஒழிக்க 1829-ம் ஆண்டில் உடன்கட்டை ஏறும் வழக்க ஒழிப்புச் சட்டம் செய்யப்பட்டது.

(2) 1865-ம் வருட ஹிந்து விதவை மறு மணச் சட்டம்: இச் சட்டம், ஒரு ஹிந்து விதவை மறு மணம் செய்து கொள்வது செல்லும் என்று செய்தது. இத்தகைய விவாகத்தின் மூலம் பிறக்கும் குழந்தைகளும் சட்டப்படிப் பிறந்த குழந்தைகளே என்று இச் சட்டம் நிர்ணயித்தது. ஒரு விதவை மைனராக இருந்து, அவளுக்கு முந்திய கணவனுடன் ருதுசாந்தி ஆகாமலிருந்தால், இவள் செய்துகொள்ளும் மறுவிவாகம் செல்லுபடியானதாவதற்கு அவளுடைய பெற்றோர் முதலிய உறவினரின் சம்மதம் வேண்டும். ஆனுல் அந்த விதவை வயது வந்தவளாயிருந்தாலோ அல்லது முந்திய கல்யாணத்தில் ருது சாந்தியுமாகியிருந்

தாலோ, அவள் வேறு ஒருவனை மணஞ் செய்து கொள்ளு வதற்குப் பெற்ருேரின் சம்மதம் தேவையில்லை. முந்திய கணவனின் சொத்தில் வாரிசு உரிமை கொண்டாடும் விஷயத்திலும் அச்சட்டம் விதவையின் உரிமைகளைக் கட்டு திட்டங்களுக்குட்படுத்தியது.

(3) 1866-ம் வருட, மதம் மாறிய சுதேசிகள் விவாக ரத்துச் சட்டம்: ஒரு ஹிந்து ஆணோ அல்லது பெண்ணோ கிறிஸ்தவராகி, அவர் மனைவியோ கணவரோ, இவ்விதம் மதம் மாறிய காரணத்தால் ஒருவர் மற்ருெருவருடன் சேர்ந்து வாழ மறுத்தால், அப்பொழுது அவர்கள் விவா கத்தை ரத்துச் செய்துவிட வந்ததே இச் சட்டம். ஒரு ஹிந்து ஆணோ அல்லது பெண்ணோ மதம் மாறிய பிறகு தன் மனைவியோ அல்லது கணவனோ தன்னுடன் வந்து வாழ 6 மாத காலம் அவகாசம் கொடுக்கவேண்டும். அக் காலத்திற்குள் தன்னுடன் வாழ வராவிட்டால், அப்படிப் பட்டவர்கள் கோர்ட்டில் மனுக் கொடுத்து பிறகு தங்கள் விவாகத்தை ரத்துச் செய்து கொள்ளலாம். அப்படி விவாக ரத்துப் பெற்ற ஆணும் பெண்ணும், தங்களுக் கிஷ்டமான வேறு ஒருவரை மணந்துகொள்ள இச் சட்டம் வசதி செய்தது.

(4) 1872-ம் வருட விசேஷ விவாகச் சட்டம்: இந்தச் சட்டமே 1954-ல் திருத்தப்பட்டுப் புதிதாக்கப்பட்டிருக் கிறது. இப் புதுச் சட்டத்தின் முழு விவரமும் தனியே விளக்கப்பட்டிருப்பதால் இச் சட்டம் முன்னுல் பிறந்த கதையையும் இங்கு குறிப்பிடுவது அவசியமாகும். வங்கா ளத்தில் பிறந்து பல இடங்களிலும் வியாபித்த பிரம சமாஜம் பிரபலமாக இருந்த காலம் அது. அவர்கள் ஹிந்து விவாகச் சடங்குகளை மறுத்தனர். தங்களுக்கென வகுத் துக்கொண்ட புது விவாக முறைப்படி பிரம சமாஜத் தினர் விவாவங்களைச் செய்யலாயினர். ஹிந்து முறைச் சடங்குகளின்படி நடக்காத ஹிந்துக்களின் விவாகங்கள் செல்லா என்று சட்டமிருந்ததால், பிரம சமாஜிகளின் விவா கங்களையும் செல்லுபடியாக்கும் சட்டம் அவசியமானதால், விசேஷ விவாகச் சட்டத்தை 1872-ல் செய்தார்கள். அந்த ஆரம்ப சட்டம், கிறிஸ்தவர், ஹிந்துக்கள், யூதர்கள்,

முகமதியர், பார்ஸிகள், புத்தர்கள், சீக்கியர், ஜெயினர் ஆகியோருக்குச் செல்லாததாக இருந்தது. பிறகு 1923-ல் இச் சட்டத்தைத் திருத்தி ஹிந்துக்கள், புத்தர்கள், சீக்கியர், ஜெயினர்கள் ஆகியோருக்குச் செல்லும்படிச் செய்யப் பட்டது. 18 வயதுக்கு மேற்பட்ட ஆண்களும், 15 வயதுக் குட்பட்ட பெண்களும், குறிப்பிட்ட மதத்தைச் சேர்ந்தவர் கள், இச் சட்டப்படி ரிஜிஸ்டிரார் முன்பு பதிவு செய்து கொண்டு எந்தச் சடங்குகளுமின்றி விவாகஞ் செய்து கொள்ளலாம் என்று இச் சட்டம் விதித்தது. ஆனுல் ஆணே அல்லது பெண்ணே 21 வயதுக்குட்பட்டவரா யிருந்தால் பெற்றோரோ அல்லது போஷகரோ அந்த விவா கத்திற்குச் சம்மதம் தர வேண்டும். இந்த விசேஷ விவாகச் சட்டமே 1954-ல் திருத்தப்பட்டது. இது ஜம்மு, காஷ்மீரம் நீங்கலாக இந்தியாவிலுள்ள எல்லோருக்கும், எல்லா மதத் தினருக்கும் பாகுபாடின்றி செல்லும் என்று இப்பொழுது செய்யப்பட்டிருக்கிறது.

(5) 1937-ம் வருட ஆரியா விவாகச் செல்லுபடிச் சட்டம் : சாதிவிட்டுச் சாதி செய்துகொள்ளும் கல்யாணங் கள் செல்லாது என்றிருந்ததை ஆரிய சமாஜிகள் விஷயத் தில் போக்கியது இந்தச் சட்டம். ஆரிய சமாஜத்தைச் சேர்ந்த தம்பதிகள், ஹிந்துக்களில் வேறு எந்த சாதியைச் சேர்ந்தவர்களாக இருந்தாலும், அல்லது விவாகத்திற்கு முன்னுல் வேறு எந்த மதத்தைச் சேர்ந்தவராக இருந்திருந் தாலும், அவர்கள் ஆரிய சமாஜிகளானுல், அவர்கள் செய்து கொள்ளும் விவாகம் செல்லும் என்று இச் சட்டம் செய் தது.

(6) 1929-ம் வருட குழந்தைகள் கல்யாணத் தடைச் சட்டம்: குழந்தைகள் மணத்தைத் தடுப்பதற்கென்று செய்யப்பட்டது இச் சட்டம். இச் சட்டத்தைச் சாரதா சட்டம் என்பதுமுண்டு. 18 வயதுக்குட்பட்ட ஆணும், 15 வயதுக்குட்பட்ட பெண்ணும் குழந்தைகள் என்று இச் சட்டப்படி கருதப்பட்டனர். இச் சட்டத்தை மீறி குழந்தைகளுக்குக் கல்யாணம் செய்த பெற்ரோர் முதலிய வர்கள் தண்டனைக்குள்ளாவார்களே யன்றி கல்யாண மாகும் குழந்தைகள் அச்சட்டப்படி பாதிக்கப்படுவதில்லை.

(7) 1946-ம் வருட ஹிந்து மண கஷ்டங்கள் நிவர்த்திச் சட்டம்: ஹிந்துச் சட்டத்தின்படி மற்றவைகளிலெல்லாம் ஒரு விவாகம் செல்லுபடியானதாக இருந்தாலும், மணத் தம்பதிகள் ஒரே கோத்திரத்தைச் சேர்ந்தவர்கள், ஒரே சாதியின் பல உட்பிரிவுகளைச் சேர்ந்தவர்கள் என்பதற்காக ஹிந்துச் சட்டத்தின்படி அந்த விவாகம் செல்லாது என்ற கஷ்டமிருந்தது. இக் கஷ்டத்தை நிவர்த்திப்பதற்காக வந்ததே இச் சட்டம். ஒரு குறிப்பிட்ட உறவு முறைக் குட்பட்டவர்கள் விவாகஞ் செய்துகொள்ளக்கூடாது என்று தர்ம சாத்திரங்கள் விதித்திருந்த தடையை இச் சட்டம் போக்கிவிட்டது.

(8) 1949-ம் வருட சென்னை ஹிந்து (இருதாரத் தடை) விவாக ரத்துச் சட்டம்; 1946-ம் வருட பம்பாய் பல தாரமணத்தடை; 1947-ம் வருட பம்பாய் ஹிந்து விவாக ரத்துச் சட்டம்: சென்னை சட்டசபை 1949-ல் செய்த இச் சட்டத்தின்படி, அம் மாகாணத்தைச் சேர்ந்த எந்த ஹிந்துவும் ஒரு தாரமிருக்க மறுதாரம் மணஞ் செய்துகொள்ளக் கூடாது. 1946-ம் வருட பம்பாய் சட்டமும் அதையே செய்தது. பம்பாய் சட்டமும், சென்னை சட்டமும் ஹிந்துக்களுக்கு குறிப்பிட்ட நிபந்தனைகளின் பேரில் விவாக ரத்துச் செய்யவும் உரிமை யளித்தன.

1954-ம் வருடம் வரையில் மேற்கண்டவாறு ஹிந்து விவாக சம்பந்தமாகப் பல சட்டங்கள் செய்யப்பட்டிருந்த போதிலும் 1955-ல் நிறைவேற்றப் பட்டிருக்கும் ஹிந்து விவாகச் சட்டம், மேலே குறிப்பிட்டிருக்கும் சட்டங்கள் பலவற்றை ரத்துச் செய்துவிட்டது.

புது விவாகச் சட்டங்களின் விளக்கம்

புதிய விசேஷ விவாகச் சட்டம் 1955 ஜனவரி 1-ந் தேதியிலிருந்து அமுலுக்கு வந்திருக்கிறது. ஹிந்து விவாகச் சட்டமோ, 1955 மே 18-ந் தேதி முதல் அமுலுக்கு வந்துவிட்டது. இந்த இரண்டு சட்டங்களும் வெவ்வேருனவை. இவ்விரண்டுக்கும் பல அம்சங்களில் ஒற்றுமை உண்டெனினும் சில மாறுபாடுகளும் உண்டு. ஆகையால் இவ்விரு சட்டங்களின் விளக்கங்களையும் அறிவதற்கு முன்னுல் இரண்டிற்குமுள்ள பேதங்களைப் புரிந்து கொள்ள வேண்டியது அவசியம்.

ஹிந்து விவாகச் சட்டம், சடங்குத் திருமணம் பற்றியது. விசேஷ விவாகச் சட்டத்தின்படி கல்யாண சடங்கு எதுவும் நடக்க வேண்டும் என்ற அவசியமில்லை. சர்க்காரால் நியமிக்கப்படும் விவாக ரிஜிஸ்டிராரிடம் போய் தம்பதிகள் தங்கள் விவாகத்தைப் பதிவு செய்து கொண்டாலே போதும். அத்திருமணம் செல்லுபடியானதாகி விடும். ஆகவே இதைப் பதிவுத் திருமணச் சட்டம் என்றும் சொல்லலாம்.

விசேஷ விவாகச் சட்டம், காஷ்மீரம், ஜம்மு தவிர இந்தியாவின் எல்லாப் பகுதியிலுமுள்ள எல்லா மதங்கள், ஜாதியினருக்கும் எந்தவித வித்தியாசமுமின்றி செல்லும். ஆகவே ஹிந்துக்களும் இந்தச் சட்டத்தின்படி விவாகஞ் செய்து கொள்ளலாம்; அதாவது பதிவுத் திருமணம் செய்து கொள்ளலாம். அப்பொழுது, இத்தகைய தம்பதிகளின் விவாக உறவு இச்சட்டத்தின்படி உள்ளதாக இருக்கும். ஆனுல் இதில் முக்கியமாக கவனிக்க வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. ஒரு ஹிந்து தம்பதிகள், விசேஷ விவாகச் சட்டத்தின்படி விவாகம் செய்து கொண்டால், அவர்களுடைய சொத்துரிமையில் பெரிய மாறுதல் உண்டாகி விடும். அதாவது இவர்கள் எந்தத் தேதியில் விசேஷ விவாகச் சட்டத்தின்படி தங்கள் மணத்தை ரிஜிஸ்டர் செய்து கொள்ளுகிருர்களோ அந்தத் தேதியிலிருந்து, அவர்கள்

அதற்கு முன்னால் பிரிவினையாகாத ஒரு ஹிந்து அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களாக இருந்தால், பிறகு அக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அல்ல என்றாகி விடுவார்கள். எனவே வாரிசு உரிமையைப் பொறுத்த வரையில் இவர்கள் அந்த அவிபக்த குடும்பத்தைச் சேராதவர்களாகி விடுவார்கள். இத்தகைய பதிவுத் திருமணம் செய்து கொள்ளும் ஹிந்து தம்பதிகளுக்கு 1956-ம் வருஷ ஹிந்து வாரிசு உரிமைச் சட்டம் அமுலாகாது. இத் தம்பதிகளின் சொத்து, வாரிசு உரிமை முதலியன 1925-ம் வருஷ இந்திய வாரிசு உரிமைச் சட்டத்தின்படி அமுலில் இருக்கும்.

வெளி நாட்டில் இருந்தாலும்

ஒரு இந்தியப் பிரஜையோ அல்லது இந்தியப் பிரஜையான ஒரு ஹிந்துவோ தற்காலிகமாக வெளி நாட்டிலிருந்தாலும், விசேஷ விவாகச் சட்டமாயினும், ஹிந்து விவாகச் சட்டமாயினும் அவர் விஷயத்திலும் செல்லும். தற்காலிகமாக வெளி நாட்டில் இருக்கிறார் என்பதனால் அவர் விவாக விஷயத்தில் இந்த சட்டத்தின் ஷரத்துக்களை மீறி எதுவுமே செய்துவிட முடியாது. அப்படி வெளி நாட்டில் மீறினாலும் அது இச்சட்டங்களின்படி குற்றமேயாகும். ஆகையால் ஒருவர் இந்தியாவைவிட்டு வெளியிலிருந்தாலும், அவர் இந்தியப் பிரஜையா யிருந்தால், அவர் விசேஷ விவாகச் சட்டப்படி பதிவுத் திருமணம் செய்து கொண்டிருந்தால் அச்சட்டமும், ஹிந்து, சீக்கியர், ஜெயினரா யிருந்தால் ஹிந்து விவாகச் சட்டமும், அவருடைய விவாக உறவு சம்பந்தமான சட்டங்களாக இருந்து வரும்.

முன்னால் நடந்த மணங்கள்

ஹிந்து விவாக சம்பந்தமான சட்டங்களைத் தொகுத்து திருத்தி வகுத்து ஒரு ஒழுங்குபடுத்துவதற்காகச் செய்யப்பட்டிருப்பதே ஹிந்து விவாகச் சட்டம். இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் ஹிந்து விவாக சம்பந்தமாக இருந்து வந்த சட்டங்கள், பழக்க வழக்கங்கள் முதலியவைகளையெல்லாம், அவை இச்சட்டத்தின் ஷரத்துக்களுக்குப்

பொருந்தாதவைகளாக இருந்தால், அவற்றை யெல்லாம் இச்சட்டம் ரத்துச்செய்து விடுகிறது. இச்சட்ட விஷயத்தில் இதே சமயத்தில் கவனிக்க வேண்டிய மற்ரோர் விஷயமும் உண்டு. கல்யாணங்களை பற்றிய வரையில். இச்சட்டம் அமுலுக்கு வந்த பிறகு நடக்கும் திருமணங்களை மாத்திரமே, கல்யாண காரியம் சம்பந்தமான இச்சட்டத்தின் ஷரத்துக்கள், ஒழுங்குபடுத்தும், கட்டுப்படுத்தும். ஆனால் இந்த ஹிந்து விவாகச் சட்டத்தின் மற்ற ஷரத்துக்களோ, விவாக ரத்து, பலதார மணம், தாம்பத்திய உரிமையை ஏற்படுத்துவது, பிரிந்திருப்பது போன்றவைகளில், இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் நடந்த விவாகங்களையும் இது கட்டுப்படுத்தும். ஆகையால் இச்சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் மணமானவர் என்ற காரணத்தினால், தாரமிருக்க அவர் மறுமணம் செய்து கொண்டுவிடுவதோ அல்லது நியாயமான காரணமிருந்தும் மனைவிக்கு விவாக ரத்து உரிமையை அளிக்க மறுத்து விடவோ இச்சட்டப்படி முடியாது.

சாதிபேதம் போயிற்று

ஹிந்துக்கள் என்போர், ஒரு சாதியினர் மற்ரோர் சாதியினரை விவாகஞ் செய்து கொள்ளுவது ஹிந்துச் சட்டப்படி செல்லாதென்று முன்பு இருந்தது என்பதை முந்திய அத்தியாயத்தில் கவனித்தோம். இவ்விதமிருந்த கலப்பு சாதி மணத் தடையை புதிய ஹிந்து விவாகச் சட்டம் அடியோடு போக்கி விட்டது. ஹிந்து என்பது யார் என்பதற்கு ஹிந்து விவாகச் சட்டத்தின் 1 (1)-வது ஷரத்து தெளிவான விளக்கம் கொடுத்திருக்கிறது (33-ம் பக்கம் பார்க்கவும்). கல்யாண சமயத்தில் தம்பதிகளில் யாருக்கும் முந்திய மனைவியோ கணவனோ இல்லாதிருந்தால், இருவரில் யாரும் முட்டாளாகவோ பைத்தியமாகவோ இல்லாதிருந்தால், விவாக காலத்தில் மணமகனுக்கு 18 வயதும் மணமகளுக்கு 15 வயதும் பூர்த்தியாகி யிருந்தால், இருவருக்கும் உறவு முறை வழக்கத்திலில்லாமல் தடுக்கப்பட்ட உறவு முறையுள்ளவர்களாக இல்லாதிருந்தால், மணப்பெண் 18 வயதை அடையாதிருந்தால் அவளுடைய பெற்ரோர் சம்ம

தித்தால், எந்த இரு ஹிந்துக்களும் விவாகம் செய்து கொள்ளலாம் என்று ஹிந்து விவாகச் சட்டத்தின் 5-வது ஷரத்து கூறுகிறது. (37-ம் பக்கம் பார்க்கவும்). எனவே ஒரு சாதியைச் சேர்ந்த இந்து, அந்த சாதியைச் சேர்ந்த மற்ருேர் இந்துவையே விவாகஞ் செய்து கொள்ளலாம் என்றிருந்தது போய் எந்த இந்துவும் எந்த இந்து சாதியிலும் கல்யாணம் செய்து கொள்வது செல்லுபடியாகும் என்று செய்யப் பட்டிருப்பது இச்சட்டத்தின் ஒரு முக்கியமான அம்சம்.

விசேஷ விவாகச் சட்டப்படியோ, இந்நாட்டுப் பிரஜையாயிருக்கும் யாரும் எந்த சாதி மாத்திரமல்ல, எந்த மதத்தையும் சேர்ந்த பெண்ணையும், மேலே சொன்ன சட்டத்தில் கண்ட சில நிபந்தனைகளின்படி விவாகஞ் செய்து கொள்ளலாம் என்று விதிக்கிறது.

விவாக வயது

ஹிந்து விவாகச் சட்டத்தின்படி மணமகனுக்கு 18 வயதும், மணமகளுக்கு 15 வயதும் நிரம்பியிருக்க வேண்டும். மணமகளுக்கு 18 வயது நிரம்பி யிருந்தால் அவளுடைய விவாகத்துக்கு வேறு எவருடைய சம்மதத்தையும் பெற வேண்டிய அவசியமில்லை. ஆனால் 18 வயது பூர்த்தியடையாமலிருந்தால், அவளுடைய விவாகத்துக்கு அவளுடைய் தகப்பனுர், தாயார் அல்லது அவள் எந்த உறவினருடைய பராமரிப்பில் இருந்து வருகிருளோ அவருடைய சம்மதம் பெற்றிருக்கவேண்டும். ஒரு பெண்ணுக்கு யார் யார் எந்த வரிசைக் கிரமத்தில் பராமரிப்பாளராக (கார்டியனுக) இருக்கமுடியும் என்ற விவரம் இந்தச் சட்டத்தின் 6-வது பிரிவில் கொடுக்கப்பட்டிருக்கிறது. இதன்படி, முதலில் தகப்பனுரும், பிறகு தாயாரும், இவ்விருவருக்கும் பிறகு தந்தை வழிப் பாட்டனுரும், தந்தை வழிப் பாட்டியும் வருகிருர்கள். இதில் தாய் வழிப் பாட்டனுருக்கு 9-வது இடமும், தாய் வழிப் பாட்டிக்கு 10-வது இடமும் கொடுக்கப்பட்டிருப்பது இங்கு குறிப்பிடத் தக்கது.

விசேஷ விவாகச் சட்டத்தின் கீழ், மணமகனுக்கு 21 வயதும், மணமகளுக்கு 18 வயதும் நிரம்பியிருக்க

வேண்டும். ஆகவே பராமரிப்பாளரின் சம்மதம் பெற வேண்டிய அவசிய மெதுவும் இதில் கிடையாது.

விவாக நிபந்தனைகள்

ஹிந்துக்களின் விவாகம், விவாக ரத்து சம்பந்தமாக, புதிய ஹிந்து விவாகச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னுலிருந்த ஹிந்துச் சட்டங்கள், பழக்கங்கள் ஆகிய வைகளை யெல்லாம் இச் சட்டம் ரத்துச் செய்துவிடுகிறது என்பதை முன்னுடியே கூறியிருக்கிறோம். சாதி வித்தியா சங்களைப் பொருட்படுத்தாமல் எந்த இரு ஆணும் பெண் ணும் விவாகம் செய்து கொள்ளுவதும் செல்லும் என்றும் இந்தச் சட்டம் விதிக்கிறது. ஆனால் இதற்குச் சில நிபந் தனைகளும் கூறப்பட்டிருக்கின்றன. அவைகளில் முக்கிய மானவை: (1) மணமக்களில் எவருக்கும் முன்னுடியே விவாகமாகியிருந்து, அந்தக் கணவன் அல்லது மனைவி அப் பொழுது உயிரோடிருக்கக் கூடாது. அதாவது தாரமிருக்க மறு தாரம் மணக்கக் கூடாது. (2) மணமக்கள் தடுக்கப் பட்ட உறவு முறைக்கு உட்பட்டவர்களாக இருக்கக் கூடாது. தடுக்கப்பட்ட உறவு முறை என்ன என்பது இந்த இரண்டு புது விவாகச் சட்டங்களிலுமே தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றன. (ஹிந்து விவாகச் சட்டம் 3 (9) ஷரத்தையும், விசேஷ விவாகச் சட்டம் முதலாவது ஷெட் யூலையும் பார்க்கவும்).

அத்தை, மாமன் மகள்

யார் தடுக்கப்பட்ட உறவு முறையினராவர் என் பதைப் பற்றி ஹிந்து விவாகச் சட்டம் வருமாறு கூறு கிறது: (1) விவாக தம்பதிகளில் ஒருவர், மற்றேருவருக்கு முந்திய சந்ததியாயிருந்தால் (2) விவாக தம்பதிகளில் ஒருவர், மற்றெருவரின் முந்திய அல்லது பிந்திய சந்ததியின் மனைவி அல்லது கணவராயிருந்தால் (3) இவர்களில் ஒரு வர், சகோதரர், தகப்பன், அல்லது தாய் மாமனின் அல்லது பாட்டனின் அல்லது பாட்டியின் சகோதரனின் மனைவியா யிருந்தால் (4) மணத் தம்பதிகள் இருவரும் சகோதரர் சகோதரியாகவோ, மாமன், சகோதரி மகளாகவோ, அத்தை

மருமகனுகவோ அல்லது சகோதரர்களின், சகோதரிகளின் குழந்தைகள், அல்லது இரு சகோதரர்கள், சகோதரிகளின் குழந்தைகளாகவோ இருந்தால், அது தடுக்கப்பட்ட உறவு முறை என்று சட்டம் கூறுகிறது. இதன்படிப் பார்த்தால் ஒரு பெண், தாய்மாமனைக் கல்யாணம் செய்து கொள்வதும், ஒருவர் அத்தை மகளைக் கல்யாணம் செய்து கொள்வதும் தடுக்கப்பட்ட உறவு முறையாகிறது. ஆனல் தென்னுட்டைப் பொறுத்தவரை சகோதரி மகளை மணப்பதும், அத்தை மகளை மணப்பதும் வழக்கத்தி லிருந்துவருவதால், ஹிந்து விவாகச் சட்டம் வழக்கத்திலிருக்கும் இம்முறையை அனுமதிப்பது முக்கியமானதாகும். இத்தகை விவாகம் ஒரு குடும்பத்தில் தொன்றுதொட்டு வழக்கமாக இருந்தால் சட்டம் இதை அனுமதிக்கிறது. ஆனுல் சகோதரி மகளையோ, அத்தை மகளையோ விவாகஞ் செய்து கொள்ளுகிறவர்கள் விசேஷ விவாகச் சட்டத்தின்கீழ் தங்கள் மணங்களைப் பதிவு செய்துகொள்ள முடியாது. ஏனெனில் ஹிந்து விவாக சட்டத்தைப்போல அச் சட்டம் இத்தகைய விவாகங்களுக்கு விதிவிலக்கு அளிக்கவில்லை.

தாரமிருக்க மணந்தால் தண்டனை

விவாக தம்பதிகளில் யாருக்காவது இதற்குமுன்னுல் விவாகமாகி, முந்திய கணவனே அல்லது மனைவியோ உயிருட னிருந்தால், மறுதாரம் விவாகம் செய்துகொள்வதை ஹிந்து விவாகச் சட்டமும் விசேஷ விவாகச் சட்டமும் கடுமையான குற்றமாக்குகின்றன. இத்தகைய விவாகங்களைச் செல்லாததாக்க இச்சட்டங்கள் விதிப்பதுடன் இக் குற்றத்தைச் செய்தவருக்கு தண்டனையும் விதிக்கிறது. முந்திய மனைவியோ அல்லது கணவனே உயிருடனிருக்கையில் மறுதாரம் விவாகஞ் செய்துகொண்டுவிடுகிறவர் மீது வழக்குத் தொடரலாம். சட்ட விரோதமாக மறுதாரம் செய்துகொண்டுவிட்டவர் இவ்வழக்குச் செலவு தொகையையும் ஜீவனும்சத்தையும் பாதிக்கப்பட்ட மனுதாருக்குக் கொடுக்க சட்டத்தில் இடம் வைக்கப்பட்டிருக்கிறது. மறுதாரமாக மணக்கப்பட்டவருக்கே யன்றி இந்த மணத்தால்

பிறக்கும் குழந்தைகளுக்குப் பராமரிப்புச் செலவுகளைக் கொடுக்கவும் கோர்ட்டு இச்சட்டத்தின்படி உத்தரவிடும்.

ஹிந்து விவாகச்சட்டம், விசேஷ விவாகச்சட்டம் ஆகிய இரண்டுமே தாரமிருக்க மறுதாரம் விவாகஞ் செய்து கொண்டவருக்கு இந்தியன் பீனல் சட்டம் 494, 495-வது பிரிவுகள் பிரயோகமாகும் என்று கூறுகின்றன. அந்த 494, 495-வது பிரிவுகள் கூறுவதாவது:

> 494-வது பிரிவு— ஒரு மனைவியோ அல்லது கணவனோ உயிரோடிருக்கும்போது, இவர்கள் உயிரோடிருப்பதால் செய்துகொள்ளும் மறு விவாகம் செல்லுபடியானதாகாது என்றிருந்தும் இன்னொருவரை ஒருவர் விவாகஞ் செய்துகொள்வாரானால், 7 வருஷங்கள் வரையில் நீடிக்கப்படக்கூடிய சிறைத் தண்டனைக்கு அவர் உள்ளாவதோடு அவருக்கு அபராதமும் விதிக்கப்படும்.
>
> விலக்கு—முந்திய கணவன் அல்லது மனைவியுடன் செய்துகொண்ட விவாகம் செல்லாது என்று தகுதியுள்ள ஒரு கோர்ட்டு தீர்ப்பளித்திருந்தால், அப்படிப் பட்டவர்களை இந்த விதி பாதிக்காது. முந்திய கணவனோ அல்லது மனைவியோ உயிரோடிருந்தாலும், மறுவிவாகம் செய்துகொள்ளும்காலத்தில், தொடர்ந்து 7 வருஷகாலம் அப்படி மறுமணம் செய்துகொள்கிறவர்களுடன் இல்லாதிருந்தால், உயிருடன் இருக்கிறார்கள் என்பதைப்பற்றியே அந்தக்காலத்தில் கேள்விப் படாமலிருந்து மறுவிவாகம் செய்துகொள்கிற நபர், இந்த விவாகம் நடப்பதற்கு முன்னாலேயே அந்த விஷயத்தைப்பற்றி தனக்குத் தெரிந்தவைகளை தான் யாரை மணஞ் செய்துகொள்ளப் போகிறாரோ அவருக்கு அறிவித்திருந்தால், அவரையும் இந்த விதி பாதிக்காது.
>
> 495-வது பிரிவு— தனக்கு முன்னால் கல்யாணமாகியிருக்கிறது என்ற உண்மையை, தான் பின்னால் விவாகம் செய்துகொண்டவரிடம் சொல்லாமல் மறைத்து மேலே கண்ட பிரிவின்கீழ் யாராவது குற்

றஞ் செய்துவிட்டால் 10 வருஷங்கள் வரையில் நீடிக் கப்படக்கூடிய காலத்திற்குச் சிறைத் தண்டனைக்கு ஆளாவதுடன் அபராதமும் விதிக்கப்படுவார்.

மற்ற நிபந்தனைகளை மீறினால்?

ஹிந்து விவாகச் சட்டத்தின் 5-வது பிரிவில், ஹிந்துக் களில் இருவர் செய்து கொள்ளும் விவாகம் எந்த நிபந்தனை களின் பேரிலிருந்தால் செல்லுபடியானதாகும் என்று விதிக்கப்பட்டிருக்கிறது. அவற்றில் 3-வது விதி, விவாகத் தின்போது மணமகனுக்கு 18 வயதும் மணமகளுக்கு 15 வயதும் நிரம்பி யிருக்க வேண்டும் என்று கூறுகிறது. இதை மீறி யாராவது மேற்கண்ட வயது வருவதற்கு முன் னால் விவாகஞ் செய்து கொண்டு விட்டால் அதற்கு 15 நாட்கள் வரையில் வெறுங் காவல் சிறைத் தண்டனையோ, ஆயிரம் ரூபாய் வரையில் அபராதமோ, அல்லது இரண்டு மோ விதிக்கப்படும் என்று ஹிந்து விவாகச் சட்டத்தின் 18 (a) பிரிவு கூறுகிறது.

பழக்கம் அத்தகைய விவாகத்தை இருவரிடையே அனு மதிப்பதாக இருந்தாலன்றி தடுக்கப்பட்ட உறவின் முறைக் குள் விவாகஞ் செய்து கொள்ளக்கூடாது என்பது 5 (4)- வது ஷரத்து. பழக்கம் அனுமதித்தாலன்றி தம்பதிகளில் ஒருவருக்கொருவர் சபிண்டர்களாக (சிரார்த்தங்களில் பிண்டம் போடும் உறவிலுள்ள தாயாதிகளாக) இருக்கக் கூடாது என்று அந்த ஷரத்தின் அடுத்த விதி கூறுகிறது. இந்த விதிகளை மீறி யாராவது விவாகஞ் செய்து கொண்டு விட்டால், ஒரு மாத காலம் வரையில் வெறுங் காவல் தண் டனையோ, ரூ. ஆயிரம் வரையில் அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

மணமகளுக்கு 18 வயது நிரம்பாமலிருந்தால் அந்த விவாகத்திற்கு அப்பெண்ணின் பராமரிப்பாளர் (கார்டி யன்) சம்மதம் பெற வேண்டும் என்பது ஹிந்து விவாகச் சட்டத்தின் 5-வது ஷரத்தில் கண்ட ஒரு நிபந்தனை. இதை மீறி யாராவது ஒரு பெண்ணைக் கல்யாணம் செய்து விட் டால் ரூ. ஆயிரம் வரையில் அபராதமுண்டு.

கணவனுக்கு ஜீவனும்சம்

புதிய ஹிந்து விவாகச் சட்டத்தில் அடங்கி யிருக்கும் புது மாதிரியான விதி, சில சந்தர்ப்பங்களில் மனைவி கணவனுக்கு ஜீவனும்சமும் செலவு தொகையும் கொடுக்க வேண்டும் என்று கோர்ட்டு உத்தரவிடலாம் என்றிருக்கும் ஷரத்தேயாகும். தாரமிருக்க மறுதாரம் மணப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பதை முன்பே கவனித்திருக்கிறோம். ஒரு மனைவி, தனது முந்திய கணவன் உயிரோடிருந்தும் இன்னுமொருவரை விவாகஞ் செய்து கொண்டு விட்டால், அந்த விவாகம் செல்லாதென கோர்ட்டு தீர்ப்புக் கூறி விடுவதுடன் மறுதார மணஞ் செய்து கொண்ட குற்றத்திற்கு தண்டனையும் உண்டு என்பதோடு விஷயம் முடிந்து விடாது. பாதிக்கப்பட்ட கணவனுக்கு, தன்னைப் பராமரித்துக் கொள்வதற்குப் போதுமான சொந்த வருமானம் எதுவும் இல்லாதிருந்தால், மறுமணம் செய்து கொண்டு விட்டதற்கு மனைவிமீது வழக்குத் தொடருவதற்குச் செலவுக்குப் பணமும், கணவனுக்கு நிரந்தர நஷ்டஈடும் ஜீவனும்சமாக தொகையும் மனைவி கொடுக்க வேண்டுமென்று கோர்ட்டு உத்தரவிடலாம் என்று ஹிந்து விவாகச் சட்டம் கூறுகிறது. (சட்டத்தின் 24-வது விதியைப் பார்க்கவும். பக்கம் 50).

விவாக முறை

ஹிந்துக்களின் விவாகம் இன்ன முறையில், இன்ன சடங்குகளின் படித்தான் நடக்க வேண்டும் என்று ஹிந்து விவாகச் சட்டம் விதிக்கவில்லை. ஹிந்துக்களிடையே நடைபெறும் ஒரு விவாகம், மணமக்களில் ஒருவருடைய ஆசாரப்படியான சடங்குகளையும் கிரியைகளையும் அனுசரித்துச் செய்து வைக்கப்படலாம். இந்தச் சடங்குகளும் கிரியைகளும் எவை என்பது சட்டத்தில் விவரிக்கப்படவில்லை. ஆனால், "சப்தபதி" என்று சொல்லப்படும் ஒரு சடங்கும் அவற்றில் அடங்கியதாக இருந்தால், அதன்படி ஏழாவது அடி எடுத்து வைக்கப்பட்டவுடன், அந்த விவாகம் பூர்த்தியானதாகவும், விவாக தம்பதிகள் இருவரையும்

அந்த விவாகம் கட்டுப்படுத்துவதாகவும் ஆகி விடுகிறது என்பதாக ஹிந்து விவாகச் சட்டத்தின் 7 (2) பிரிவில் கூறப்பட்டுள்ளது. (''சப்தபதி'' என்பது மணமகனும் மணமகளும் கரம்பற்றி, அக்னியைச் சுற்றி ஏழு அடி எடுத்து வைப்பது).

ஹிந்து விவாகங்களைப் பதிவு செய்து கொள்வதற்கும், அதாவது ஆசாரப்படியான சடங்குகளின்படி நடைபெற்ற திருமணங்களைக் கூட, இந்தச் சட்டத்தில் வசதி செய்யப் பட்டிருக்கிறது. இதற்கென 'ஹிந்து விவாக ரிஜிஸ்தார்' ஒன்று ஏற்படுத்தப் பட்டிருந்தால், ஒரு விவாகம் நடைபெற்றது என்பதற்கு ஒரு அத்தாட்சியாக, அந்த விவாகம் பற்றிய விவரங்களை அந்த ரிஜிஸ்தரில் பதிவு செய்து கொள்ள லாம். அவ்வாறு பதிவு செய்து கொள்ள வேண்டுமென்ற கட்டாயமெதுவுமில்லை. அவ்வாறு பதிவு செய்து கொள்வ தால், இந்தச் சட்டத்தின் மூலம் மற்றவர்களுக்குக்கிட்டாத விசேஷமான சலுகைகள் அல்லது வசதிகள் எவையும் மண மக்களுக்கு இச்சட்டப்படி அளிக்கப்படவில்லை.

விசேஷ விவாகச் சட்டத்தின் கீழ், விவாக ரிஜிஸ்தரில் பதிவு செய்து கொண்டால்தான் விவாகம் நிறைவேறியதாகக் கருதப்படும். விசேஷ விவாகச் சட்டத்தின் கீழ் சாஸ்திர பூர்வமான சடங்கு எதுவும் கிடையாது. தங்களுக்கு இஷ்டமான எந்த விவாகச் சடங் கையும் அவர்கள் மேற்கொள்ளலாம். ஆனால் தம்பதிகள் இருவரும் விவாக ரிஜிஸ்டிரார், மூன்று சாட்சிகள் முன் னிலையில், ''நான்...(இன்னாரை)...சட்டப்படியான மனைவியாக (அல்லது கணவனாக) ஆக்கிக் கொள்ளு கிறேன்'' என்று கூறிய பிறகே அந்த விவாகம் நிறைவேறி யதாகக் கருதப்படும் என்று விசேஷ விவாகச் சட்டம் கூறுகிறது. விவாகம் செய்து கொள்ள முடிவு செய்துள்ள நபர்கள் இருவரும், தங்கள் விருப்பத்தை எழுத்து மூல மாக, அந்த ஜில்லாவின் விவாக அதிகாரிக்குத் தெரியப் படுத்த வேண்டும். அந்த அதிகாரி, தாம் வைத்திருக்கும் **விவாக அறிவிப்புப் புத்தகத்தில்** அதைப் பதிவு செய்து கொள் வார். அந்த விவாகத்தை எவரேனும் ஆட்சேபிப்பதாக இருந்தால், அவர்கள் தங்கள் ஆட்சேபனையை, முப்பது

நாட்களுக்குள் அந்த அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அவ்வாறு ஆட்சேபனை எதுவும் வரவில்லையென்றால், அந்த அதிகாரி, மூன்று சாட்சிகளின் முன்னிலையில் அந்த விவாகத்தை நிறைவேற்றி வைத்து, அந்த விவரத்தை விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் (Marriage Certificate Book) பதிவு செய்ய வேண்டும். மணமக்களும், மூன்று சாட்சிகளும் அதில் கையெழுத்திட வேண்டும்.

ஆட்சேபனை ஏதாவது இருந்தால் அதுபற்றி விவாக அதிகாரி தீர விசாரித்து முடிவு செய்ய வேண்டும்.

விசேஷ விவாகச் சட்டத்தின் கீழ் அல்லாமல் வேறு முறைப்படி விவாகம் செய்து கொண்டுள்ளவர்களும், தங்கள் விவாகத்தை இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்து கொள்ளலாம். இதற்கு விதிக்கப்பட்டுள்ள 6 நிபந்தனைகளில் முக்கியமாகக் குறிப்பிட வேண்டியது, பதிவு செய்து கொள்ளும்போது மணமக்கள் இருவருக்கும் 21 வயது நிரம்பியிருக்க வேண்டும் என்பதாகும். அப்போது அந்த விவாகம், மற்றெல்லாக் காரியங்களுக்கும், விசேஷ விவாக சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்டதொரு விவாகமாகவே கொள்ளப்படும்.

கணவன் மனைவி பிணக்குகள்

கணவனுக்கும் மனைவிக்குமிடையே தகராறுகள் ஏற்படும்போது தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொள்வது, சட்டபூர்வமாகப் பிரிந்துவிடுவது, விவாகம் நிபந்தனைகளை மீறி சட்டத்துக்கு விரோதமாக நடைபெற்றதாக இருந்தால் விவாகத்தை செல்லாததாக்குவது, விவாக ரத்து ஆகிய விஷயங்களில் ஹிந்து விவாகச் சட்டம் விசேஷ விவாகச் சட்டம் ஆகிய இரண்டிலுமே ஷரத்துக்கள் அனேகமாக ஒரே மாதிரியே உள்ளன.

தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக்கொடுப்பது:— தம்பதிகளில் ஒருவர் நியாயமான காரணமின்றி மற்றவரிடமிருந்து பிரிந்துபோய் தனியாக வசித்துவந்தால், பாதிக்கப்பட்டவர் மனைவியோ, கணவரோ, தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி அதாவது அந்த தம்

பதிகளில் மற்றவர் (கணவரோ, மனைவியோ) தம்முடன் மீண்டும் கூடிவாழ வேண்டுமென்று உத்தரவிடவேண்டுமென்று கோரி ஜில்லாக் கோர்ட்டுக்கு மனுக் கொடுக்கலாம்.

சட்டபூர்வமாகப் பிரிந்துவிடுவது: கணவனோ மனைவியோ பின்வரும் காரணங்களில் ஏதேனுமொன்றைக் காட்டி, தங்களை சட்டபூர்வமாகப் பிரித்துவிடும்படி கேட்டுக்கொண்டு ஜில்லா கோர்ட்டுக்கு மனுச்செய்துகொள்ளலாம்: ஒருவர் மற்றவரைக் கைவிட்டுவிட்டாலும், (ஹிந்து விவாகச் சட்டத்தின்படி 2 வருஷகாலமும், விசேஷ சட்டத்தின்படி 3 வருஷகாலமும்); கொடுமையாக நடத்தினாலும்; குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருந்தாலும் (ஹிந்து விவாக சட்டத்தின்படி ஒருவருஷம், வி. வி. சட்டத்தின்படி 3 வருஷம்); மேகவியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும் (விசேஷ சட்டத்தின்படி 3 வருஷம்); சித்த சுவாதீனமற்றவராக இருந்தாலும் (ஹிந்து விவாகச் சட்டத்தின்படி 2 வருஷம், விசேஷ விவாக சட்டத்தின்படி 3 வருஷம்); வேறொருவருடன் கள்ளநட்புக் கொண்டிருந்தாலும், தங்களை சட்டபூர்வமாகப் பிரித்துவிடும்படி கோரி கணவனோ மனைவியோ ஜில்லாக் கேர்ட்டுக்கு மனுச் செய்துகொள்ளலாம்.

விவாகம் செல்லாமல் போவது

ஹிந்து விவாகச் சட்டத்தின்படி நடைபெற்ற ஒரு விவாகம் விஷயத்தில்: விவாகம் நடைபெற்ற சமயத்தில் மணமக்களில் எவருக்கும் மனைவியோ அல்லது கணவரோ ஒருவர் ஏற்கனவே இருந்தாலும்; மணமக்கள் தடுக்கப்பட்ட உறவு முறைக்குட்பட்டவர்களாக இருந்தாலும், சபிண்டர்களாக இருந்தாலும் அந்த விவாகம் செல்லாது. இந்தச் சட்டம் அமுலுக்கு வந்தபிறகு நடைபெற்ற விவாகங்களுக்கு மாத்திரமே இது பொருந்தும்.

விசேஷ விவாகச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றப்பட்ட ஒரு விவாகத்தின் விஷயத்திலும், விவாகம் நடைபெற்ற சமயத்தில் மணமக்களில் எவருக்கும் ஒரு மனைவி அல்லது கணவன் இருந்தாலும், மணமக்களில் ஒருவர் பைத்தியமாகவோ முட்டாளாகவோ இருந்தாலும், மணமகனுக்கு

21 வயதும் மணமகளுக்கு 18 வயதும் நிரம்பாமலிருந்தாலும், மணமக்கள் தடுக்கப்பட்ட உறவுமுறைக் குட்பட்டவர்களாக இருந்தாலும், மணமக்களில் ஒருவர் விவாகம் நடைபெற்ற சமயத்தில் நபும்சகராக இருந்தாலும், அந்த விவாகம் செல்லாது.

செல்லத்தகாதவை யென அறிவிக்கப்படக்கூடிய விவாகங்கள்: ஹிந்து விவாகச் சட்டத்தின்படி தம்பதிகளில் ஒருவர் விவாகம் நடைபெற்ற சமயத்தில் நபும்சகராக இருந்திருந்தாலும்; பைத்தியமாகவோ முட்டாளாகவோ இருந்திருந்தாலும்; விவாகத்துக்கான சம்மதம் மோசடியாகவோ நிர்ப்பந்தமாகவோ பெறப்பட்டிருந்தாலும்; மனைவி, விவாகம் நடைபெற்ற சமயத்தில் வேறு ஒருவரால் கர்ப்பமாக இருந்திருந்தாலும், அந்த விவாகம் செல்லத்தகாததென அறிவிக்கும்படி கோரி தம்பதிகளில் எவரும் ஜில்லாக் கோர்ட்டுக்கு மனுச் செய்துகொள்ளலாம். இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னால் நிறைவேற்றப்பட்ட விவாகங்களுக்கும் இது பொருந்தும்.

விசேஷ விவாகச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்ட ஒரு விவாகத்தின் விஷயத்தில் தம்பதிகளில் ஒருவர் வேண்டுமென்றே மறுத்துவருவதால் விவாகம் பூர்த்தி செய்விக்கப்படாமலிருந்தாலும், விவாகம் நடைபெற்ற சமயத்தில் மனைவி வேறொருவர் மூலமாகக் கற்பவதியாக இருந்தாலும், விவாகத்துக்கான சம்மதம் நிர்ப்பந்தமாகவோ, மோசடியாகவோ பெறப்பட்டிருந்தாலும் அந்த விவாகத்தை செல்லத்தகாததாக அறிவித்து கலைத்துவிட வேண்டுமென்று கோரி ஜில்லாக் கோர்ட்டுக்கு விண்ணப்பித்துக்கொள்ளப்படலாம். (இவை விஷயத்தில் ஒரு சில நிபந்தனைகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஹி. வி. ச. 12. (2)-வது பிரிவு, வி. வி. ச. 25-வது பிரிவுகளைப் பார்க்கவும்).

விவாக ரத்து

ஹிந்து விவாகச் சட்டத்தின்கீழ் நடைபெற்ற ஒரு விவாகத்தின் விஷயத்தில், அந்த விவாக தம்பதிகளில் எவரும்—மனைவியோ, கணவரோ—பின் வரும் காரணங்களில் எதையேனும் ஆதாரம் காட்டி, விவாக ரத்துக்

கோரலாம். அவையாவன ; (1) மற்றவர் வேருெருவருடன் கள்ள நட்புக் கொண்டிருக்கிருர் ; (2) வேறு ஒரு மதத்துக்கு மாறிவிட்டார் ; (3) மூன்று ஆண்டு காலமாக சித்த சுவாதீனமற்றவராக இருக்கிருர் ; (4) மூன்ருண்டுகளாக குஷ்டரோகத்தால் பீடிக்கப்பட்டிருக்கிருர் ; (5) மூன்ருண்டுகளாக மேகவியாதியால் பீடிக்கப்பட்டிருக்கிருர்; (6) சந்நியாசி யாகிவிட்டார் ; (7) உயிரோடு இருப்பதாக ஏழாண்டுகளாகத் தகவல் கிடைக்கவில்லை ; (8) சட்டபூர்வமாகப் பிரிந்துபோய் டிக்ரி (மற்றவருக்கு எதிராகப்) பிறப்பிக்கப்பட்ட பிறகு, இரண்டு வருஷ காலத்துக்கு மேலாக அவர் தாம்பத்ய வாழ்க்கையை மீண்டும் தொடங்கவில்லை; (9) தாம்பத்ய உறவை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான டிக்ரி ஒன்று பிறப்பிக்கப்பட்ட பிறகு இரண்டு வருஷங்களுக்கு மேலாக அதை நிறைவேற்றிவைக்கத் தவறி விட்டார்.

மனைவி, மேலும் இரண்டு காரணங்களைக் கொண்டும் விவாக ரத்துக் கோரலாம். (1) இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததற்கு முன்னுல் நடைபெற்ற ஒரு விவாகத்தின் விஷயத்தில், கணவர் இந்தச் சட்டம் அமுலுக்கு வந்ததற்குப் பின்னுல் மறுபடியும் விவாகம் செய்து கொண்டிருந்தாலும் அல்லது சட்டம் அமுலுக்கு வந்ததற்கு முன்னுல் விவாகம் செய்துகொண்டிருந்த மனைவி ஒருவர், இந்த விவாகம் நடைபெற்ற சமயத்தில் உயிரோடிருந்திருந்தாலும் ; (2) விவாகம் நடைபெற்ற பிறகு கணவர் பிறரிடம் பலவந்தப் புணர்ச்சிக் குற்றம் செய்திருந்தாலும் அல்லது மிருகத்தனமான இச்சையுடன் நடந்து கொண்டிருந்தாலும், விவாக ரத்து கோரி மனுச் செய்துகொள்ளலாம்.

இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னுல் நடைபெற்ற விவாகங்களுக்கும் இது பொருந்தும்.

விசேஷ விவாகச் சட்டத்தின்கீழ்: தம்பதிகளில் ஒருவர், (1) விவாகமான பிறகு வேருெருவருடன் கள்ள நட்புக் கொண்டிருந்தாலும், (2) மூன்று வருஷமாகக் கைவிட்டிருந்தாலும், (3) ஏழு வருஷ சிறை தண்டனை விதிக்கப்பட்டிருந்து அதில் மூன்று வருஷம் கழிந்திருந்தாலும், (4) மற்றவரை கொடுமையாக நடத்தி வந்திருந்தாலும்,

(5) மூன்று வருஷ காலமாக சித்த சுவாதீனமற்றவராக இருந்தாலும், (6) மூன்று வருஷமாக மேக வியாதியால் பீடிக்கப்பட்டிருந்தாலும், (7) மூன்று வருஷமாக குஷ்ட ரோகத்தால் பீடிக்கப்பட்டிருந்தாலும், (8) ஏழாண்டு களுக்கு மேலாக, உயிரோடிருப்பதாகத் தகவல் கிடைக்க வில்லை யென்றாலும், (9) சட்ட பூர்வமாகப் பிரிந்துபோய் டிக்ரி மற்றவருக்கு எதிராகப் பிறப்பிக்கப்பட்டிருந்து, அதற்குப் பிறகு இரண்டு வருஷங்களுக்கு மேலாக அவர் தாம்பத்ய வாழ்க்கையை மீண்டும் தொடங்காமலிருந்தா லும்,(10) தாம்பத்ய வாழ்க்கையை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான டிக்ரி ஒன்று பிறப்பிக்கப்பட்ட பிறகு, இரண்டு வருஷங்களுக்கு மேலாக அதை நிறைவேற்றி வைக்கத் தவறி யிருந்தாலும், மற்றவர் விவாக ரத்துக் கோரி மனுச் செய்துகொள்ளலாம். மனைவி, கணவர் பிறரை பலவந்தப் புணர்ச்சிக் குற்றஞ் செய்தார் அல்லது மிருக இச்சையுடன் நடந்துகொண்டார் என்ற காரணங் களின் பேரிலும் விவாக ரத்துக் கோரலாம்.

பரஸ்பர சம்மதத்தின் பேரில் விவாக ரத்து

விசேஷ விவாகச் சட்டத்தின் கீழ் : கணவரும் மனைவியும், தாங்கள் ஒரு வருஷத்துக்கு மேலாக பிரிந்து தனித் தனியாக வாழ்ந்து வருவதாகவும், கூடி வாழத் தங்களால் இயலவில்லை யென்றும், விவாகம் கலைத்துவிடப்படவேண்டு மென்று தாங்கள் இருவரும் விரும்புவதாகவும் காரணம் காட்டி, விவாக ரத்துக்கோரி கூட்டாக மனுச் செய்து கொள்ளலாம். (ஹிந்து விவாகச் சட்டத்தின் கீழ் இந்த ஏற்பாடு இல்லை).

ஹிந்து விவாகச் சட்டம், விசேஷ விவாகச் சட்டம் இரண்டின் கீழும், விவாகமாகி மூன்றுண்டுகளுக்குள் விவாக ரத்துக்கு மனுச் செய்துகொள்ள முடியாது. ஆன போதிலும், நிலைமை மிக மோசமாக இருப்பதாக கோர்ட்டு கருதினல் அத்தகைய மனுவை அனுமதிக்கலாம்.

ஜீவனும்சம், விவாகத்துக்கு விதிக்கப்பட்டுள்ள நிபந் தனைகளை மீறி விவாகம் செய்துகொள்பவர்களுக்கு விதிக்

கப்படக்கூடிய தண்டனைகள், கோர்ட்டின் அதிகாரம், விசாரணை நடத்தும் முறை முதலிய விஷயங்கள் பற்றிய விவரங்கள் இவ்விரு கட்டங்களின் மற்றப் பிரிவுகளில் அடங்கியுள்ளன.

ரகசியமாகக் கோர்ட்டு விசாரணை

ஹிந்து விவாகச் சட்டத்தின் இன்னுமொரு ஷரத்தையும் முக்கியமாகக் குறிப்பிட வேண்டும். விவாகச் சட்ட சம்பந்தமாக கணவன், மனைவி, கோர்ட்டுகளில் தொடுக்கும் வழக்குகளை, சம்பந்தப்பட்ட கட்சிக்காரர்களில் ஒருவர் விரும்பினாலோ அல்லது ரகசியமாக விசாரிப்பதே சரி என்று கோர்ட்டு கருதினாலோ அப்படி ரகசியமாக விசாரிக்கலாம் என்று இச் சட்டத்தின் 22-வது ஷரத்து கூறுகிறது. இத்தகைய கோர்ட்டு விசாரணை நடவடிக்கைச் சம்பந்தமான தகவல்கள், விவரங்கள் எதையும், முன் கூட்டி கோர்ட்டாரின் அனுமதியைப் பெற்றிருந்தாலன்றி, யாரும் அச்சிடவோ அல்லது பிரசுரிக்கவோ கூடாது. விசேஷ விவாகச் சட்டமும் இப்படியே விசாரணையை ரகசியமாக நடத்தலாம் என்று அதன் 34-வது ஷரத்தில் கூறுகிறது. இதை மீறி யாராவது ஒரு விவாகச் சட்ட சம்பந்தமான வழக்கு நடவடிக்கைகளைப் பிரசுரித்தாலோ அல்லது அச்சிட்டாலோ, ரூபாய் ஆயிரம் வரையில் அபராதம் விதிக்கப்படலாம் என்று ஹிந்து விவாகச் சட்டத்தின் 22 (1)-வது ஷரத்து கூறுகிறது. ஆகவே இச் சட்டத்தின்படி விவாக ரத்து, சட்டப்படி பிரிந்திருப்பது, தாம்பத்திய உரிமையைக் கோருவது ஆகியவைகள் சம்பந்தமாக கோர்ட்டில் வழக்குத் தொடர விரும்புகிறவர்கள், இத்தகைய வழக்கு நடவடிக்கைகள் பத்திரிகைகள் முதலியவைகளில் பிரசுரமாகிவிடுமோ என்று அஞ்சி சும்மா இருந்துவிடவேண்டிய அவசியமில்லை.

சட்டத்தின் முக்கியாம்சம்

முந்திய ஹிந்து விவாகச் சட்டங்களின்படி, ஹிந்து விவாகம் பின்னால் ரத்துச் செய்ய முடியாத தெய்வீகமான தொன்று என்றிருந்ததை புதிய ஹிந்து விவாகச் சட்டம்

போக்கி விட்டது. விவாகத்தை இச்சட்டம், தம்பதி களுக்குள் செய்து கொள்ளும் ஒரு வாழ்க்கை ஒப்பந்த மாக ஆக்கியிருக்கிறது. இந்தச் சட்டம் அமுலுக்கு வருவதற்கு முன்னுல் செய்யப்பட்டதான ஒரு விவாக விஷயத்திலும், அந்த விவாகம் செல்லாதெனை இச் சட்டத்தின்படி இருந்தால், அப்படிக் கோர்ட்டு உத்தரவை 12—வது ஷரத்துப்படி பெற்றுவிட முடியும். முன்னுடியே விவாகஞ் செய்துகொண்டுவிட்டவர்களும் 10 – வது ஷரத் தின்படி சட்டப்படி பிரிந்திருந்து வாழவும், 13—வது ஷரத்தின்படி விவாக ரத்துப்பெறவும் கோர்ட்டின் தீர்ப்பைப் பெறலாம். சட்டப்படிப் பிரிந்து வாழ ஒரு கோர்ட்டின் தீர்ப்பைப் பெறுவதால் தம்பதிகளின் விவாக அந்தஸ்து பாதிக்கப்படாது.

ஹிந்துக்களின் விவாகம் புதிய சட்டத்தின்படி ஒரு ஒப்பந்தம் போன்றதாகவே செய்யப்பட்டிருந்தும், மற்ற ஒப்பந்தங்களைப்போல இந்த விவாக ஒப்பந்தத்தை யாரும் அவ்வளவு சுலபமாக மீறிவிட முடியாது. விவாகம் செல்லுபடியானதாகாது என்றோ, சட்டப்படி தனியாகப் பிரிந்து வாழ்வதற்கோ, அல்லது விவாக ரத்து அளித்து விடுவதற்கோ கோர்ட்டில் வழக்குகள் தொடரப்படு மானுல், அத்தகைய தீர்ப்பு அளிப்பதற்கு ஆதாரங்கள் இருந்தாலும், கோர்ட்டுகள் இச் சட்டத்தின்படி அவ்வித தீர்ப்புகளைச் சுலபமாக அளித்துவிடா. வழக்கின் இரு தரப்பாரும் தங்களுக்குள் ரகசிய ஏற்பாடு செய்துகொண்டு வழக்குத் தொடுத்திருக்கிருர்களா, ஒரு தரப்பு இதில் நிர்ப்பந்தப்படுத்தப்பட்டிருக்கிறதா, நடவடிக்கையைத் தொடருவதில் அனுவசியமான காலதாமதம் செய்யப்பட்டி ருக்கிறதா, பிராதில் கோருவதை மறுப்பதற்கு சட்ட ரீதி யான ஆதாரமிருக்கிறதா என்பதை யெல்லாம் கோர்ட்டு தீரப் பரிசீலனை செய்ய வேண்டும் என்று ஹிந்து விவாகச் சட்டத்தின் 23—வது ஷரத்து கூறுகிறது. இச்சட்டம் இன்னுமொன்றும் கூறுகிறது. பிராதில் கோரப்படும் விவாக ரத்தைக் கோர்ட்டு அளிப்பதற்கு முன்னுல், ஒவ்வொரு வழக்கின் சந்தர்ப்பத்தையும் அனுசரித்து, இரு தரப்பாருக்குமிடையே, அதாவது கணவனுக்கும்

மனைவிக்குமிடையே, சமரசத்தை உண்டாக்குவதற்கான சந்தர்ப்பங்களையும் கோர்ட்டு கவனிக்க வேண்டும் என்றும் சட்டம் கூறுகிறது. இஷ்டப்படி யெல்லாம் விவாக ரத்து முதலியன ஏற்பட்டுவிடாமலிருப்பதற்கு மற்றொன்றும் தடையாக இருக்கும்படி சட்டம் செய்கிறது. மறுமணம் செய்து கொண்டுவிடும் வரையில் விவாகரத்துச் செய்துகொள்ளும் அல்லது சட்டப்படி தனித்து வாழும் கணவன், அம்மனைவிக்கு தன்னுடைய சொத்து வசதியைப் பொறுத்து மொத்தமாகவோ அல்லது மாதாமாதமோ கோர்ட்டு நிர்ணயிக்கும் ஜீவனும்சத்தைக் கொடுத்துவரவேண்டும் (ஹிந்து விவாகச் சட்டம் 25 — வது ஷரத்து). அம் மணத்தினுல் ஏற்பட்ட மைனர் குழந்தைகளிருந்தால் அவற்றின் பராமரிப்பு, படிப்பு முதலியவைகளுக்கும் செலவுக்குத் தரவேண்டும். புதிய ஹிந்து வாரிசு உரிமைச் சட்டத்தின்படி பெண்களுக்கும் சொத்துரிமை ஏற்படுவதால் பெண்களுக்கும், கணவருக்கு ஜீவனும்சம், குழந்தைகள் பராமரிப்புச் செலவுகள் போன்ற பொருளாதார பளுக்கள் இருக்கும். ஆகையால் தோன்றியபடி யெல்லாம் விவாக ரத்து, சட்டப்படி பிரிந்து வாழ்வது ஆகியவைகளுக்குக் கோர்ட்டுக்குப்போக கணவன், மனைவி ஆகிய இருவரையுமே தயங்கும்படிச் செய்யக்கூடியவை இச்சட்டத்தின் இந்த ஷரத்துக்கள்.

ஹிந்து விவாகச் சட்டத்தின் முழு ஷரத்துகள் விவரங்களை 33-ம் பக்கத்திலிருந்தும், விசேஷ விவாகச் சட்டத்தின் ஷரத்துக்கள் விவரங்களை 54—வது பக்கத்திலிருந்தும் பார்க்கவும்.

1955-ம் வருஷ ஹிந்து விவாகச் சட்டம்

1955-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட 25-வது சட்டம்

ஹிந்துக்களிடையே விவாகம் சம்பந்தமான சட்டத்தைத் திருத்தி ஒழுங்குபடுத்தித் தொகுப்பதற்கான சட்டம்.

இந்தியக் குடியரசின் ஆருவது ஆண்டில் பார்லிமென்டால் பின்வருமாறு சட்டமியற்றப்பட்டது:—

பீடிகை

1. பெயரும், வியாபகமும்.—*(1) இந்தச் சட்டம் 1955-ம்ஹுத்திய ஹிந்து விவாகச் சட்டம் எனப் பெயர் பெறும்.*

(2) இது ஜம்மு-காஷ்மீர் ராஜ்யம் நீங்கலாக, இந்தியா முழுவதிலும் வியாபிக்கும். மேலும் இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களைத் தாயகமாகக் கொண்டு அப் பிரதேசங்களுக்கு வெளியில் வசித்துவருகிற ஹிந்துக்களுக்கும் இந்தச் சட்டம் பிரயோகமாகிறது.

சட்டத்தின் பிரயோகம்.—*(1) இந்தச் சட்டமானது—*

(a) *வீர சைவர்கள், லிங்காயத்துக்கள், அல்லது பிரம்ம சமாஜம் அல்லது பிரார்த்தனை சமாஜம் அல்லது ஆரிய சமாஜத்தைச் சேர்ந்தவர்களாக உள்ளவர்கள் உட்பட, ஹிந்து மதத்தின் அமைப்புகளில் அல்லது விரிவுகளில் எதிலாவது அம் மதத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கும் எந்த நபருக்கும்,*

(b) *புத்த மதம், அல்லது ஜைன மதம் அல்லது சீக்கிய மதத்தைச் சேர்ந்த எந்த ஒரு நபருக்கும்,*

(c) *இச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களைத் தாயகமாகக் கொண்டுள்ளவராய், மதத்தில் ஒரு முஸ்லிமாக, கிறிஸ்தவராக, பார்ஸியாக அல்லது யூதராக இராத வேறு எந்த ஒரு நபர், இச்சட்டம் நிறைவேற்றப்படாதிருந்தால் இதில் கண்டுள்ள விஷயங்களில் எந்த ஒன்றின் சம்பந்தமாகவாவது, ஹிந்து சட்டத்துக்காவது, அச் சட்டத்தின் ஒரு பகுதியான எந்த ஒரு ஆசாரம் அல்லது வழக்கத்துக்காவது உட்பட்டிருந்திருக்க*

மாட்டார் என்று மெய்ப்பிக்கப்பட்டாலொழிய, அத்தகைய தொரு நபருக்கும் பிரயோகமாகிறது.

விளக்கம்.—அடியிற்கண்ட நபர்கள், சந்தர்ப்பத்துக்கேற்ப, ஹிந்துக்கள், பௌத்தர்கள், ஜைனர்கள் அல்லது சிக்கியர்களா வார்கள் :—

(a) பெற்ருேர் இருவரும் மதத்தில் ஹிந்துக்களாய், பௌத்தர்களாய், ஜைனர்களாய் அல்லது சிக்கியர்களாய் இருந்து, அவர்களுக்கு விவாக மூலமாய் அல்லது மற்றப்படிப் பிறக்கும் எந்தக் குழந்தையும் ;

(b) பெற்ருேர்களில் ஒருவர் ஹிந்துவாய், பௌத்தராய், ஜைனராய் அல்லது சிக்கியராய் இருந்து, அவர்களுக்கு விவாக மூலமாகவோ மற்றப்படியோ பிறந்திருந்து, அத்தகைய பெற்ருேர் எந்த இனம், சமூகம், தொகுதி அல்லது குடும்பத்தைச் சேர்ந்தவராயிருக்கிருரோ அல்லது சேர்ந்தவராயிருந்தாரோ அந்த இனம், சமூகம், தொகுதி அல்லது குடும்பத்தில் ஒருவராக வளர்க்கப்பட்டு வருகிற எந்தக் குழந்தையும் ;

(c) ஹிந்து, பௌத்த, ஜைன அல்லது சிக்கிய மதத்துக்கு (1) மதம் மாறிய, புதிதாக அல்லது மீண்டும் மாறிய எந்த நபரும் ;

(2) உட்பிரிவு (1)ல் என்ன கூறப்பட்டிருந்தபோதிலும், மத்திய அரசாங்கத்தார் ராஜாங்கக் கெஜட்டில் விளம்பரம் பிரசுரித்து அதன் மூலமாக வேறே விதமாய் கட்டளையிட்டாலொழிய, இந்தச் சட்டத்தில் கண்டுள்ள எதுவும், இந்திய அரசியலமைப்புச் சட்டத்தைச் சேர்ந்த 366-வது பிரிவு (25) வது ஷரத்தின் பொருண்மைக்குட்பட்ட ஷெட்யூல் ஜாதி எதையும் சேர்ந்த எந்த நபருக்கும் பிரயோகப்படமாட்டாது.

(3) இந்தச் சட்டத்தின் எந்தப் பகுதியிலும் " ஹிந்து " என்ற சொல்லுக்கு, மதத்தில் ஹிந்துவாயிராதபோதிலும், இந்தப் பிரிவில் அடங்கியுள்ள ஷரத்துக்களின்படி இந்தச் சட்டத்தின் பிரயோகத்துக்குட்பட்டவராக இருக்கிற ஒரு நபர் என்பதும் அதில் அடங்கியுள்ளதாகவே பொருள் கொள்ளப்பட வேண்டும்.

3. வியாக்யானம்.—சந்தர்ப்பத்திஞல் வேறு பொருள் ஏற்படுவதாக இருந்தாலன்றி இந்தச் சட்டத்திலே,—

(a) " ஆசாரம், " " வழக்கம் " என்னும் சொற்கள் நெடுங்காலமாகவும் தொடர்ச்சியாகவும் ஒரே விதமாகவும் அனுஷ்டிக்கப்பட்டு வந்திருப்பதனுல் எந்த ஒரு பிரதேசத்தையாவது

இனத்தையாவது சமூகத்தையாவது, தொகுதியையாவது, குடும்பத்தையாவது சேர்ந்த ஹிந்துக்களிடையே ஒரு சட்டத்துக்கு உள்ள அதிகாரத்தைப் பெற்றிருக்கிற எந்த ஒரு விதியையும் குறிப்பிடுவனவாகும்;

ஆனால், அந்த விதியானது, நிச்சயமானதாக இருக்கவேண்டும்; நியாயமற்றதாகவாவது, பொதுக் கொள்கைக்கு மாறுனதாகவாவது இருக்கக் கூடாது;

மேலும், ஒரு குடும்பத்துக்கு மாத்திரமே பிரயோகப்படுவதாக இருக்கிற ஒரு விதியின் விஷயத்தில், அந்த விதியானது அந்தக் குடும்பத்தாரால் அனுஷ்டிக்கப்படாமல் விடப்பட்டு விட்டதாக இருக்கக் கூடாது.

(b) "ஜில்லா கோர்ட்" என்பது, நகர ஸிவில் கோர்ட் இருக்கிற ஒரு பிரதேசத்தில் அந்தக் கோர்ட் என்றும், வேறு எந்த ஒரு பிரதேசத்திலும் அசல் விசாரணையதிகாரமுள்ள பிரதம ஸிவில் கோர்ட் என்றும் பொருள்படும். ராஜ்ய அரசாங்கத்தார் ராஜாங்கக் கெஜட்டில் அறிவிப்பதன் மூலம், இந்தச் சட்டத்தில் கண்டுள்ள விஷயங்கள் சம்பந்தமாய் விசாரணை அதிகாரம் வகிப்பதாக குறிப்பிடுகிற வேறு எந்த ஒரு ஸிவில் கோர்ட்டும் இதில் அடங்கியதே.

(c) "முழு ரத்தக் கலப்பு", "பாதி ரத்தக் கலப்பு"— இரண்டு நபர்கள் பொதுவான ஒரு மூதாதையின் ஒரே மனைவி மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களாயிருந்தால் அவர்கள் ஒருவருக்கொருவர் முழு ரத்தக் கலப்புள்ள உறவினரென்றும், பொதுவான ஒரு மூதாதையின் வெவ்வேறு மனைவிகள் மூலமாய் ஏற்பட்ட சந்ததிகளில் தோன்றியவர்களாயிருந்தால் பாதி ரத்தக் கலப்புள்ள உறவினரென்றும் சொல்லப்படுவார்கள்.

(d) "கர்ப்பாசய ரத்தக் கலப்பு"—இரண்டு நபர்கள் பொதுவான ஒரு பெண் மூதாதையின் வெவ்வேறு கணவர்கள் மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களாயிருந்தால்; அவர்கள் ஒருவருக்கொருவர் கர்ப்பாசய ரத்தக் கலப்புள்ள உறவினரென்று சொல்லப்படுவர்.

விளக்கம்.—(c), (d) பகுதிகளில் "மூதாதை" என்பதில் தகப்பனும், "பெண் மூதாதை" என்பதில் தாயாரும் அடங்கியவை.

(e) "நிர்ணயிக்கப்பட்ட" என்பது, இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளினுல் நிர்ணயிக்கப்பட்ட எனப் பொருள்படும்.

(f) (i) எந்த ஒரு நபர் சம்பந்தமாகவும் "சபிண்ட உறவு" என்பது, தாய் வழியிலே முன்னோர் வரிசையில் மூன்றுவது (அந்தத் தலைமுறை உட்பட) தலைமுறை வரையிலும், தந்தை வழியிலே முன்னோர் வரிசையில் ஐந்தாவது (அந்தத் தலைமுறை உட்பட) தலைமுறை வரையிலும் வியாபிக்கும். ஒவ்வொரு விஷயத்திலும், பிரஸ்தாப பரம்பரையை சம்பந்தப்பட்ட நபரிலிருந்து ஆரம்பித்து மேல் நோக்கிக் கணக்கிட வேண்டும்; அந்த நபரை முதலாவது தலைமுறையாகக் கருத வேண்டும்.

(ii) இரண்டு நபர்களில் ஒருவர் மற்றொருவருக்கு சபிண்ட உறவு வரையறைக்குள் பரம்பரை மூதாதையாக இருந்தாலும் அல்லது அவர்களுக்குப் பொதுவான ஒரு பரம்பரை மூதாதை இருந்து அவர்கள் ஒவ்வொருவர் சம்பந்தமாகவும் இந்த மூதாதை சபிண்ட உறவு வரையறைக்குள் இருந்தாலும், மேற்படி இரண்டு நபர்கள் ஒருவருக்கொருவர் 'சபிண்டர்கள்" என்று சொல்லப்படுவார்கள்.

(g) "தடுக்கப்பட்ட உறவு முறை"—இரண்டு நபர்களில்—

(i) ஒருவர் மற்றொருவருக்குப் பரம்பரை மூதாதையாக இருந்தாலும்,

(ii) ஒருவர் மற்றொருவருடைய பரம்பரை மூதாதையின் அல்லது சந்ததியின் மனைவியாகவோ, கணவராகவோ இருந்தாலும்,

(iii) ஒருவர் மற்றொருவருடைய சகோதரரின் அல்லது தகப்பனர் அல்லது தாயாரது சகோதரரின் அல்லது பாட்டனர் அல்லது பாட்டியாரது சகோதரரின் மனைவியாக இருந்தாலும்,

(iv) இருவரும் சகோதரனும் சகோதரியுமாகவோ, தாய் தந்தையரின் சகோதரனும் உடன் பிறந்தாரின் புத்திரியுமாகவோ, தாய் தந்தையரின் சகோதரியும் உடன் பிறந்தாரின் புத்திரனுமாகவோ, சகோதர சகோதரியின் குழந்தைகளாகவோ, இரண்டு சகோதரர்களின் அல்லது இரண்டு சகோதரிகளின் குழந்தைகளாகவோ இருந்தால், அவர்கள் "தடுக்கப்பட்ட உறவு முறைக்கு" உட்பட்டவர்கள் எனச் சொல்லப்படுவார்கள்.

விளக்கம்.—(f), (g) பகுதிகளின் காரியங்களுக்காக, உறவு என்பது—

(i) பாதி ரத்தக் கலப்புள்ள அல்லது கர்ப்பாசய ரத்தக் கலப்புள்ள உறவு என்பதும், முழு ரத்தக் கலப்புள்ள உறவு என்பதும்,

(ii) விவாக மூலமாகவும், விவாக மூலமாக அல்லாமல் மற்றப்படியும் ஏற்பட்ட ரத்தக் கலப்புள்ள உறவு என்பதும்,

(iii) ஸ்வீகாரம் மூலமாகவும், ரத்தக் கலப்பு மூலமாக வும் ஏற்பட்ட உறவு என்பதும் அடங்கும்.

மேலும், அந்தப் பகுதிகளில் உறவு முறை என்பது பற்றிய சகல சொற்றொடர்களுக்கும் இந்தப் பிரகாரமே அர்த்தம் கொள்ளவேண்டும்.

4. சட்டத்தின் ரத்து அதிகாரம்.—இந்தச் சட்டத்திலே வேறே விதமாய் குறிப்பிட்டுக் கூறப்பட்டிருந்தாலொழிய—

(a) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு உடன் முன்னால் அமுலிலிருந்த ஹிந்துச் சட்டத்தின் எந்த ஒரு வாசகமும், விதியும் அல்லது வியாக்யானமும் அல்லது அந்தச் சட்டத்தின் ஒரு பகுதியாக உள்ள எந்த ஒரு ஆசாரமும் அல்லது வழக்க மும், இந்தச் சட்டத்தில் கண்டுள்ள எந்த ஒரு விஷயம் சம்பந்த மாகவும், செல்லுபடியற்றதாக ஆகிவிடும்.

(b) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு உடன் முன்னால் அமுலிலிருந்த வேறு எந்தச் சட்டமும், இந்தச் சட்டத்தில் கண்டுள்ள எந்த ஒரு ஷரத்துக்கும் பொருத்தமற்றதாக இருந் தால், அந்த அளவுக்கு அந்தச் சட்டம் செல்லுபடியற்றதாக ஆகிவிடும்.

ஹிந்து விவாகங்கள்

5. ஒரு ஹிந்து விவாகத்துக்குள்ள நிபந்தனைகள்.— அடியிற்கண்ட நிபந்தனைகள் நிறைவேற்றப்பட்டிருந்தால், எந்த இரண்டு ஹிந்துக்களுக்கேனும் விவாகம் செய்விக்கலாம். அவையாவன :—

(i) விவாகமாகும் காலத்தில் மணமக்களில் எவருக்கும் உயிரோடுள்ள கணவராவது மனைவியாவது இருக்கக்கூடாது;

(ii) விவாகமாகும் காலத்தில் மணமக்களில் எவரும் முட் டாளாகவாவது பைத்தியக்காரராகவாவது இருக்கக் கூடாது;

(iii) விவாகமாகும் காலத்தில் மணமகனுக்குப் பதினெட்டு வயதும் மணமகளுக்குப் பதினைந்து வயதும் பூர்த்தியாகி யிருக்க வேண்டும்;

(iv) மணமக்கள் ஒவ்வொருவரும், எந்த ஆசாரம் அல்லது வழக்கத்துக்குட்பட்டிருக்கிறார்களோ அந்த ஆசாரம் அல்லது வழக்கம் அவர்களுக்கிடையில் விவாகத்தை அனுமதித்தாலன்றி

மண மக்கள் தடுக்கப்பட்ட உறவு முறைக்கு உட்பட்டவர்களா யிருக்கக்கூடாது;

(v) மண மக்கள் ஒவ்வொருவரும் எந்த ஆசாரம் அல்லது வழக்கத்துக்கு உட்பட்டிருக்கிறுர்களோ அந்த ஆசாரம் அல்லது வழக்கம் அவர்களுக்கிடையில் விவாகத்தை அனுமதித் தாலன்றி மண மக்கள் ஒருவருக்கொருவர் ஸபிண்டர்களாக இருக்கக்கூடாது;

(vi) மண மகளுக்குப் பதினெட்டு வயது பூர்த்தியாகாம லிருந்தால், அவளுடைய விவாக சம்பந்தமான சம்ரட்சகர் எவ ரேனுமிருந்தால், அவருடைய சம்மதத்தை அந்த விவாகத்துக் குப் பெற்றிருக்கவேண்டும்.

6. **விவாக விஷயத்தில் சம்ரட்சகரா யிருப்பது.**—(1) இந்தச் சட்டத்தின்படி, விவாக விஷயத்தில் சம்ரட்சகராயிருப் பவருடைய சம்மதம் தேவையா யிருக்கிற இடங்களிலெல்லாம், அந்தச் சம்மதத்தைக் கொடுக்கப் பாத்தியதையுள்ள நபர்கள் கீழே குறிப்பிட்டுள்ள வரிசைக்கிரமப்படி அடியிற் கண்ட நபர் களாவார்கள்; அந்த வரிசைக்கிரமமாவது:—

(a) தகப்பனுர்;

(b) தாயார்;

(c) தந்தை வழிப் பாட்டனுர்.

(d) தந்தை வழிப் பாட்டியார்;

(e) முழு ரத்தக் கலப்புள்ள சகோதரர்; சகோதரர்களுக் கிடையில் மூத்தவரையே சிலாக்கியமாகக் கொள்ள வேண்டும்;

(f) பாதி ரத்தக் கலப்புள்ள சகோதரர்; பாதி ரத்தக் கலப்புள்ள சகோதரர்களுக்கிடையில் மூத்தவரையே சிலாக்கிய மாகக் கொள்ள வேண்டும்.

ஆனுல், மணமகள் அவரோடு வசித்துக் கொண்டு வருபவ ளாகவும் அவரால் வளர்க்கப்பட்டு வருபவளாகவும் இருக்க வேண்டும்.

(g) முழு ரத்தக் கலப்புள்ள பெரிய தகப்பனுர் அல்லது சிறிய தகப்பனுர்; இவர்களுக்கிடையில் மூத்தவரைச் சிலாக்கிய மாகக் கொள்ள வேண்டும்;

(h) பாதி ரத்தக் கலப்புள்ள பெரிய தகப்பனுர் அல்லது சிறிய தகப்பனுர்; மூத்தவரைச் சிலாக்கியமாகக் கொள்ள வேண்டும்:

ஆனல், மணமகள் அவரோடு வசித்துக்கொண்டு வருபவளாகவும், அவரால் வளர்க்கப்பட்டு வருபவளாகவும் இருக்க வேண்டும்;

(i) தாய்வழிப் பாட்டனர்;

(j) தாய்வழிப் பாட்டியார்;

(k) முழு ரத்தக் கலப்புள்ள தாய் மாமன். தாய் மாமன்களுக்கிடையில் மூத்தவரையே சிலாக்கியமாகக் கொள்ள வேண்டும்:

ஆனல், மணமகள் அவரோடு வசித்துக் கொண்டு வருபவளாகவும் அவரால் வளர்க்கப்பட்டு வருபவளாகவும் இருக்க வேண்டும்.

(2) ஒருவருக்கு இருபத்தொரு வயது பூர்த்தியாகி யிருந்தாலொழிய இப் பிரிவில் கண்ட ஷரத்துக்களின்படி விவாக விஷயத்தில் சம்ரட்சகராய்ச் செயலாற்ற பாத்தியதையுடையவராகமாட்டார்.

(3) மேற்கண்ட ஷரத்துக்களின்படி விவாக விஷயத்தில் சம்ரட்சகரா யிருக்க பாத்தியதையுள்ள ஒரு நபர் அந்தப்படிச் செயலாற்ற மறுத்தாலும், எந்த ஒரு காரணத்தினலாவது அந்தப்படிச் செயலாற்ற முடியாதவராகவாவது தகுதியற்றவராகவாவது இருந்தாலும், வரிசைக் கிரமத்தில் அடுத்தபடியுள்ள நபர் சம்ரட்சகரா யிருக்கப் பாத்தியதையுள்ளவராவார்.

(4) உட்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள எந்த நபரும் இராவிட்டால், இந்தச் சட்டத்தின்படிக்கான ஒரு விவாகத்துக்கு சம்ரட்சகர் ஒருவரின் சம்மதம் அவசியமாகமாட்டாது.

(5) எந்த மணமகளின் விவாகத்துக்கு சம்மதம் வேண்டியிருக்கிறதோ அந்த மணமகளின் நன்மையை உத்தேசித்து தடை உத்தரவு மூலமாய் உத்தேசிக்கப்பட்டுள்ள விவாகத்தைத் தடுப்பது அவசியமென்று கோர்ட்டுக்குத் தோன்றினல், அப்படித் தடுக்க ஒரு கோர்ட்டுக்குள்ள அதிகாரத்தை இச் சட்டத்தில் கண்டது எதுவும் பாதிக்காது.

7. ஒரு ஹிந்து விவாகத்துக்குரிய சடங்குகள்.—(1) மணமக்களில் எந்த ஒருவரின் ஆசாரப்படியான கிரியைகளையும் சடங்குகளையும் அனுசரித்து ஒரு ஹிந்து விவாகத்தைச் செய்யலாம்.

(2) அப்படிப்பட்ட கிரியைகளிலும் சடங்குகளிலும் சப்தபதி (அதாவது, ஹோமாக்கினிக்கு முன்னல் மணமகனும்

மணமகளும் சேர்ந்து ஏழு அடி எடுத்து வைப்பது) அடங்கி யிருந்தால், ஏழாவது அடி எடுத்து வைத்ததும் அந்த விவாகம் பூர்த்தியானதாகவும் கட்டுப்படுத்துவதாகவும் ஆகிறது.

8. **ஹிந்து விவாகங்களைப் பதிவு செய்வது.**—(1) ஹிந்து விவாகங்கள் நடந்தன என்று மெய்ப்பிப்பதைச் சுலபப்படுத்தும் காரியத்துக்காக, அத்தகைய யாதொரு விவாகத்தில் சம்பந்தப்பட்ட மணமக்கள் தங்கள் விவாக சம்பந்தமான விவரங்களை, சர்க்கார் நிர்ணயிக்கும் முறைப்படியும் நிபந்தனைகளுக்குட்பட்டும், இந்தக் காரியத்துக்காக வைத்திருக்கப்படுகிற ஹிந்து விவாக ரெஜிஸ்டர் ஒன்றில் பதிவு செய்வித்துக் கொள்ளலாமென ஷரத்துக் கண்டு ராஜ்ய அரசாங்கத்தார் விதிகள் செய்யலாம்.

(2) உட்பிரிவு (1)-ல் என்ன சொல்லியிருந்த போதிலும், பிரஸ்தாப ராஜ்ய அரசாங்கத்தார் அடியிற் கண்டபடி செய்வது அவசியமென அல்லது யுக்தமெனக் கருதினால், உட்பிரிவு (1)-ல் குறிப்பிட்டுள்ள விவரங்களைப் பதிவு செய்வது, எல்லா விவாகங்கள் விஷயத்திலானாலும் சரி அல்லது குறிப்பிட்ட சிலவற்றின் விஷயத்திலானாலும் சரி, அந்த ராஜ்யத்தில் அல்லது அந்த ராஜ்யத்தின் ஏதாவதொரு பகுதியில் கட்டாயமாகுமென விதி செய்யலாம். அப்படிப்பட்டதொரு கட்டளை பிறப்பிக்கப்பட்டிருந்து இது விஷயமாகச் செய்யப்பட்டுள்ளதொரு விதியை எவரேனும் மீறினால், அவருக்கு இருபத்தைந்து ரூபாய் வரையில் அபராதம் விதிக்கப்படத் தக்கதாகும்.

(3) இப் பிரிவின்படிச் செய்யப்பட்ட விதிகளெல்லாம் அவை செய்யப்பட்ட பிறகு கூடிய விரைவில் பிரஸ்தாப ராஜ்யச் சட்ட சபைகளின் முன்னிலையில் வைக்கப்பட வேண்டும்.

(4) ஹிந்து விவாக ரெஜிஸ்டரானது எவரும், நியாயமான எல்லாக் காலங்களிலும், பார்வையிடும்படியாக இருக்க வேண்டும். அதில் கண்டுள்ள தகவல்களின் உண்மையைப் பற்றி அது சாட்சியமாக ஏற்றுக் கொள்ளப்படத் தக்கதாகும். அதில் கண்டுள்ள விவரங்களின் அத்தாட்சி பெற்ற நகல்களை, நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பம் செய்து கொள்வதின் பேரில் ரெஜிஸ்டிராரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

(5) இந்தப் பிரிவில் என்ன சொல்லியிருந்த போதிலும் எந்த ஒரு ஹிந்து விவாகமும் பதிவு செய்யாமல் விடப்பட்டது காரணமாக சட்ட சம்மதமற்றதாக ஆகிவிடாது.

தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக்கொடுப்பதும் சட்டபூர்வமாகப் பிரிந்துவிடுவதும்

9. தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பது.—(1) கணவராவது மனைவியாவது, நியாயமான காரணமின்றி ஒருவர் மற்றொருவருடைய சேர்க்கையினின்றும் விலகி விட்டிருந்தால், பாதிக்கப்பட்ட நபர் தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி ஜில்லா கோர்ட்டுக்கு மனு மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ளலாம். அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் உண்மையானவையென்றும், அந்த விண்ணப்பத்தை அனுமதிக்கக் கூடாதென்பதற்குச் சட்ட ரீதியான காரணம் எதுவுமில்லையென்றும் சந்தேகமறத் தெரிந்து கொண்ட பிறகு அந்தக் கோர்ட்டு, தாம்பத்திய உரிமைகளை மீண்டும் அப்படியே ஏற்படுத்திக் கொடுக்க டிக்ரி பிறப்பிக்கலாம்.

(2) சட்ட பூர்வமாகப் பிரிந்து விடுவதற்கான அல்லது விவாகத்தை செல்லத் தகாததாகச் செய்வதற்கான அல்லது விவாக ரத்துக்கான ஏதுவாயிராத எந்த வாதத்தையும், தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்காகச் செய்து கொள்ளப்பட்ட மனுவுக்கு எதிராக வாதிக்கக் கூடாது.

10. சட்ட பூர்வமாகப் பிரிந்து விடுவது.—(1) விவாகம் இச்சட்டம் தொடங்கியதற்கு முன்பு செய்து கொள்ளப்பட்டிருந்தாலும் சரி, இந்தச் சட்டம் தொடங்கியதிற்குப் பிறகு செய்துக் கொள்ளப் பட்டிருந்தாலுஞ்சரி, அதற்குரிய தம்பதிகளில் ஒருவர், தம்மிடம் மற்றவர் அடியிற்கண்டபடி இருப்பது காரணமாக சட்ட பூர்வமாகப் பிரிந்து போவதற்கான டிக்ரியைக் கோரி ஜில்லா கோர்ட்டுக்கு ஒரு மனுச் செய்து கொள்ளலாம்:—

(a) மனுச் செய்து கொள்வதற்கு அடுத்து முந்தி தொடர்ச்சியாக இரண்டு வருஷ காலத்துக்குக் குறையாமல் மனுதாரரைக் கைவிட்டிருக்கிறார் என்பது; அல்லது

(b) மனுதாரர் அந்த மற்றொருவருடன் வாழ்வது அபாயகரமானது அல்லது தீங்கானது என்று நியாயமானதொரு அச்சத்தை மனுதாரரின் மனதில் உண்டு பண்ணக்கூடிய அளவுக்கு அவர் மனுதாரரைக் கொடூரமாய் நடத்தியிருக்கிறார் என்பது; அல்லது

(c) மனுச் செய்து கொள்வதற்கு அடுத்து முந்திய ஒரு வருஷ காலத்துக்குக் குறையாமல் கொடிய குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பது; அல்லது

(d) மனுச் செய்து கொள்வதற்கு அடுத்து முன்பு, தொத்திக் கொள்ளத்தக்க மேக வியாதியினால் பீடிக்கப்பட்டிருக்கிறார் என்பது. ஆனால், வியாதி மனுதாரரிடமிருந்து தொத்திக் கொண்டதாக இருக்கக்கூடாது; அல்லது

(e) மனுச் செய்து கொள்வதற்கு அடுத்து முந்திய இரண்டு வருஷ காலத்துக்குக் குறையாமல் தொடர்ச்சியாக சித்த சுவாதீனமற்றவரா யிருந்திருக்கிறார் என்பது; அல்லது

(f) விவாகம் செய்து கொண்ட பிறகு, அவர் தமது கணவனாயிராத அல்லது மனைவியாயிராத மற்றொரு நபருடன் சம்போகம் செய்திருக்கிறார் என்பது.

விளக்கம்.—இந்தப் பிரிவிலே "கைவிட்டிருப்பது" என்னும் சொற்றொடரும் அதன் இலக்கண வேறுபாடுகளும், அதற்குச் சம்பந்தப்பட்ட சொற்றொடர்களும், தம்பதிகளில் ஒருவர் மனுதாரரை நியாயமான காரணமில்லாமலும், அவருடைய சம்மதம் பெறாமலும், அல்லது அவருடைய விருப்பத்திற்கு விரோதமாகவும் கைவிடுவது என்று பொருள்படும். மேலும் அதில், தம்பதிகளில் ஒருவர் மனுதாரரை வேண்டுமென்றே அலட்சியம் செய்வது என்பதும் அடங்கும்.

(2) சட்ட பூர்வமாகப் பிரிந்து விடுவதற்கான ஒரு டிக்ரி நிறைவேற்றப் பட்டிருந்தால், பிரதிவாதியுடன் மனுதாரர் அதன்பின் கூடிவாழ வேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. ஆனால், தம்பதிகளில் ஒருவர் மனு மூலமாக கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரிலும், அந்தக் கோர்ட்டானது அந்த மனுவில் சொல்லி யிருக்கிற விஷயங்கள் உண்மையானவைதானா என்று சந்தேகமறத் தெரிந்து கொண்ட பிறகு, நேர்மையானதென்றும் நியாயமானதென்றும் கருதினால், அந்த டிக்ரியை ரத்து செய்யலாம்.

விவாகத்தையும் விவாக ரத்தையும் இறுதி செய்வது

11. செல்லாத விவாகங்கள்.—இச் சட்டம் தொடங்கிய பிறகு நிறைவேற்றப்பட்ட விவாகம் 5-வது பிரிவின் (i), (iv), (v) ஷரத்துக்களில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளில் எந்த ஒன்றை மீறினாலும் அந்த விவாகம் செல்லாது. மேலும், அந்த விவாக தம்பதிகளில் ஒருவர் மனுச் செய்துகொள்வதன்பேரில்,

ஒரு டிக்ரி பிறப்பித்து அந்த விவாகம் செல்லாததெ‌ன அறிவிக்கப்படலாம்.

12 செல்லாமல் போகத்தக்க விவாகங்கள்.—(*1*) இச் சட்டம் தொடங்கியதற்கு முன்போ பிறகோ நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு விவாகமும் கீழ்க்கண்ட காரணங்களுக்காகச் செல்லாததாகச் செய்யப்படத் தக்கதாகும். மேலும், அடியிற் கண்ட காரணங்களில் எதன் பேரிலும் செல்லத்தகாதென அறிவிக்கும் டிக்ரி ஒன்றைப் பிறப்பித்து, அதன் மூலமாக இறுதி செய்யப்படலாம். அக் காரணங்களாவன :—

(a) விவாகமான காலத்தில் பிரதிவாதி நபும்சகராய் இருந்தாரென்பதும், பிரஸ்தாப நடவடிக்கை தொடரப்பட்ட காலம் வரையில் அவ்வாறே தொடர்ந்து இருந்து வந்தாரென்பதும்; அல்லது

(b) அந்த விவாகமானது, 5-வது பிரிவைச் சேர்ந்த (ii) ஷரத்தில் குறிப்பிட்டிருக்கிற நிபந்தனையை மீறியிருக்கிறதென்பது ; அல்லது

(c) மனுதாரருடைய சம்மதமாவது, அல்லது விவாக விஷயத்தில் மனுதாரருடைய விவாக சம்ரட்சகரின் சம்மதம் 5-வது பிரிவின்படி வேண்டியதாயிருந்தால், அத்தகைய சம்ரட்சகருடைய சம்மதமாவது பலவந்தமாகவோ, மோசடியாகவோ பெறப்பட்டதென்பது ; அல்லது

(d) விவாக காலத்தில் பிரதிவாதி மனுதார் அல்லாத வேறொரு நபரால் கர்ப்பமாகி யிருந்தாரென்பது.

(*2*). உட்பிரிவு (*1*)ல் என்ன சொல்லியிருந்தபோதிலும்—,

(a) ஒரு விவாகத்தை ரத்து செய்யவேண்டுமென உட்பிரிவு (*1*)—ன் (c) ஷரத்தில் குறிப்பிட்டுள்ள காரணத்தின் பேரில் செய்துகொள்ளப்படுகிற எந்த ஒரு மனுவின் விஷயத்திலே—

(i) ஷை பலவந்தம் அற்றுப்போன பிறகு அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, ஒரு வருஷத்துக்கு அப்பால் ஷை மனு செய்துகொள்ளப்பட்டாலும்,

(ii) ஷை பலவந்தம் அற்றுப்போன பிறகு அல்லது சந்தர்ப்பத்துக்கேற்ப ஷை மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மனுதாரர் தமது பூரண சம்மதத்துடனே ஷை விவாக தம்பதி

களில் மற்றொருவருடன் கணவனாக அல்லது மனைவியாக வாழ்ந்திருந்தாலும்,

அத்தகைய மனு எதையும் ஏற்றுக்கொள்ளக் கூடாது.

(b) ஒரு விவாகத்தை ரத்து செய்யவேண்டுமென உட்பிரிவு (1)—ன் (d) ஷரத்தில் குறிப்பிட்டுள்ள காரணத்தின் பேரில் செய்துகொள்ளப்படுகிற எந்த ஒரு மனுவின் விஷயத்திலே—

(i) புகார் செய்துள்ள விஷயங்கள் விவாக காலத்திலே மனுதாரருக்குத் தெரியாதென்றும்,

(ii) இச் சட்டம் தொடங்கியதற்கு முன் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு விவாகத்தின் விஷயத்தில் சட்டம் தொடங்கியதிலிருந்து ஒரு வருஷத்துக்குள்ளும், இச் சட்டம் தொடங்கிய பிறகு நிறைவேற்றப்பட்ட விவாகங்களின் விஷயத்தில் அவ் விவாகம் நிறைவேறிய தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள்ளும் நடவடிக்கைகள் தொடரப்பட்டிருக்கின்றனவென்றும்,

(iii) டிக்ரி பிறப்பிப்பதற்கான காரணங்கள் இருப்பதை மனுதாரர் தெரிந்துகொண்டதிலிருந்து மனுதாரரின் சம்மதத்துடன் சம்போகம் நடக்கவில்லையென்றும்;

கோர்ட்டு சந்தேகமறத் தெரிந்துகொண்டாலொழிய அத்தகைய மனு எதையும் ஏற்றுக்கொள்ளக்கூடாது.

13. விவாக ரத்து.—(1) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன்போ பிறகோ நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு விவாகமும் அதற்குரிய தம்பதிகளில் ஒருவர் மனுச் செய்துகொண்டதன்பேரில், கீழ்க்கண்ட காரணங்களில் எதனாலேனும் விவாக ரத்து டிக்ரி ஒன்றின் மூலமாக கலைத்துவிடப்படலாம். அவை யாவன :—

(i) விபசாரம் செய்துகொண்டிருக்கிறார் என்பது; அல்லது

(ii) தம்பதிகளில் ஒருவர் வேறொரு மதத்தில் மாறிவிட்டதனால் ஹிந்துவாயில்லை என்பது ; அல்லது

(iii) தம்பதிகளில் ஒருவர் மனுச் செய்துகொண்டதற்கு அடுத்து முன்னதாய் மூன்று வருஷத்துக்குக் குறையாத தொடர்ச்சியான காலத்துக்கு தீராத சித்த சுவாதீனமற்றவராயிருந்திருக்கிறாரென்பது; அல்லது

(iv) தம்பதிகளில் ஒருவர், மனுச் செய்து கொண்டதற்கு அடுத்து முன்னதாக மூன்று வருஷத்துக்குக் குறையாத

தொடர்ச்சியான காலத்துக்கு தீராத கொடிய குஷ்டரோகத்தி ஞல் பிடிக்கப் பட்டிருந்திருக்கிருரென்பது; அல்லது

(v) தம்பதிகளில் ஒருவர், மனுச் செய்து கொண்டதற்கு அடுத்து முந்திய மூன்று வருஷங்களுக்குக் குறையாத காலத் துக்கு, தொத்திக் கொள்ளத்தக்க மேக வியாதியால் பிடிக்கப் பட்டிருந்திருக்கிருரென்பது; அல்லது

(vi) துறவறத்தை மேற்கொண்டு இந்த உலகப் பற்றை விட்டு விட்டிருக்கிருரென்பது; அல்லது

(vii) தம்பதிகளில் ஒருவர் உயிரோடிருந்திருந்தால், அதைப்பற்றி எந்த நபர்கள் இயற்கையாகவே கேள்விப்பட்டி ருப்பார்களோ அந்த நபர்கள் அவர் உயிரோடிருப்பதாக ஏழு வருஷம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையில் கேள் விப்படாதிருந்திருப்பது; அல்லது

(viii) சட்ட ரீதியாய்ப் பிரிந்து செல்ல தம்பதிகளில் ஒருவருக்கு விரோதமாக ஒரு டிக்ரி பிறப்பிக்கப்பட்ட பிறகு இரண்டு வருஷ காலத்துக்காவது அதற்கு மேற்பட்டாவது அவர்களில் மற்ருெருவர் மண வாழ்க்கைக்குரிய சேர்க்கையை மறுபடியும் தொடங்கவில்லை என்பது; அல்லது

(ix) தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒரு டிக்ரி பிறப்பிக்கப்பட்ட பிறகு தம்பதி களில் ஒருவர் அதை இரண்டு வருஷ காலத்துக்கோ அதற்கு மேற்பட்டோ அனுசரிக்கத் தவறி விட்டிருக்கிருரென்பது.

(2) ஒரு மனைவியும் பின் கூறப்பட்டுள்ள காரணங் காட்டி, விவாகரத்து டிக்ரி ஒன்றின் மூலமாகத் தமது விவாகத் தைக் கலைத்துவிட வேண்டுமென்று மனுச் செய்து கொள்ள லாம். அந்தக் காரணமாவது ;

(i) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன் நிறைவேற் றப்பட்ட எந்த ஒரு விவாகத்தின் விஷயத்திலும், சட்டம் தொடங்கியதற்கு முன்னுல் கணவர் மீண்டும் விவாகம் செய்து கொண்டிருக்கிருர், அல்லது சட்டம் தொடங்கியதற்கு முன்னுல் விவாகம் செய்து கொண்ட வேறு ஒரு மனைவி மனுதாரரின் விவாகம் நடைபெற்ற காலத்தில் உயிரோடிருந்தார் என்பது;

மேலே கூறப்பட்ட இரு நிலைமைகளிலும், மனுச்செய்து கொள்ளப்படும் காலத்தில் அந்த வேற்று மனைவி உயிரோடி ருக்க வேண்டும்; அல்லது

(ii) விவாகம் ஆன பிறகு, கணவர், பலாத்காரமாய் கற்பழிக்கும் அல்லது பும்மைதுன அல்லது மிருக வெறி இச்சை கொண்ட குற்றம் செய்திருக்கிருர் என்பது.

14. விவாகமான மூன்று வருஷத்துக்குள் விவகாரத்துக்கான மனுச் செய்துக்கொள்ளக் கூடாது.—(1) இந்தச் சட்டத்தில் என்ன சொல்லியிருந்தபோதிலும், விவாக ரத்து டிக்ரி ஒன்றின் மூலமாக ஒரு விவாகத்தைக் கலைத்துவிடுமாறு கோரி மனுச் செய்துகொள்ளப்படுகிற தேதியன்று, விவாகமாகி மூன்று வருஷம் கடந்துவிட்டிருந்தாலொழிய அத்தகைய மனு எதையும் ஏற்றுக்கொள்ள எந்தக் கோர்ட்டுக்கும் அதிகாரம் கிடையாது.

ஆனல், அந்தக் கோர்ட், இதன் பொருட்டு ஹை கோர்ட் செய்யக்கூடிய விதிகளை அனுசரித்து, தன்னிடம் விண்ணப்பம் செய்துகொள்ளப்படுவதன் பேரில், பிரஸ்தாப விஷயம் மனுதாரருக்குப் பெரிதும் துன்பம் தருவதாயிருக்கின்றது அல்லது பிரதிவாதிமோசமான துர்நடத்தையுள்ளவராக இருக்கிறுர் என்னும் காரணத்தினல், விவாகத்தின் தேதியிலிருந்து மூன்று வருஷம் கடந்துபோவதற்கு முன்பே மனுச் செய்துகொள்ளப்படுவதற்கு அனுமதியளிக்கலாம். ஆனல், அந்தக் கோர்ட் அந்த மனுவை விசாரிக்கையில், பிரஸ்தாப விஷயத்தின் தன்மையைக் குறித்து மனுதாரர் தவறுதலாகச் சொல்லியோ அல்லது மறைத்தோ அந்த மனுவைச் செய்துகொள்வதற்கு அனுமதி பெற்றிருக்கிறுரென கோர்ட் அபிப்பிராயப்பட்டால், அந்தக் கோர்ட் டிக்ரி ஒன்றைப் பிறப்பிப்பதாயிருந்தால், விவாகத் தேதியிலிருந்து மூன்று வருஷம் கடந்துபோகிற வரையில் அந்த டிக்ரி அமுலுக்கு வரக்கூடாதென்னும் நிபந்தனைக்குட்பட்டு அவ்வாறு டிக்ரி பிறப்பிக்கலாம்; அல்லது அந்த மனுவுக்கு ஆதாரமாகக் காட்டப்பட்ட அதே விஷயங்களைக்கொண்டு அல்லது பெரும்பாலும் அதே விஷயங்களைக்கொண்டு மேற்சொன்ன மூன்று வருஷம் கடந்துபோன பிறகு செய்துகொள்ளப்படக் கூடிய எந்த ஒரு மனுவுக்கும் பாதகமில்லாதபடி அந்த மனுவைத் தள்ளிவிடலாம்.

(2) விவாகத் தேதியிலிருந்து மூன்று வருஷம் கடப்பதற்கு முன் விவாக ரத்துக்கான மனு ஒன்றைச் செய்துகொள்ள அனுமதி கோரி இப் பிரிவின்படிச் செய்துகொள்ளப்படுகிற ஒரு விண்ணப்பத்தைப் பைசல் செய்கையில், ஷை விவாகம் மூலமாகப் பிறந்த குழந்தைகளின் நலனையும், மேற்சொன்ன மூன்று வருஷம் கடப்பதற்குமுன் தம்பதிகளிடையே சமரசம் ஏற்படுவதற்கு நியாயமான சாத்தியம் ஏதாகிலும் இருக்கிறதா என்பதையும் அக் கோர்ட் கவனித்துப் பார்க்கவேண்டும்.

15. விவாக ரத்தானவர்கள் எப்போது மறுமணம் செய்துகொள்ளலாமென்பது.—விவாக ரத்து டிக்ரி மூலமாக

ஒரு விவாகம் கலைக்கப்பட்டிருந்து, அந்த டிக்ரியை எதிர்த்து அப்பீல் செய்துகொள்வதற்கான உரிமை இல்லாதிருந்தால், அல்லது அப்பீல் செய்துகொள்வதற்கான அத்தகைய உரிமையொன்று இருந்து அப்பீல் ஒன்று செய்துகொள்ளப்படாமலேயே அப்பீல் செய்துகொள்வதற்கான காலம் கடந்துபோயிருந்தால், அல்லது ஓர் அப்பீல் செய்துகொள்ளப்பட்டிருந்து அது தள்ளிவிடப்பட்டிருந்தால் ஷை விவாகத்துக்குரிய தம்பதிகளில் ஒவ்வொருவரும் மறுபடியும் விவாகம் செய்துகொள்வது சட்ட சம்மதமானதாகும்.

ஆனால், முதல் கோர்ட்டிலே டிக்ரி பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து குறைந்தது ஒரு வருஷமாவது ஷை விவாகத் தேதியன்று கழிந்துவிட்டிருந்தாலொழிய ஷை தம்பதிகளில் எவரும் மீண்டும் விவாகம் செய்துகொள்வது சட்ட சம்மதமானதாகாது.

16. செல்லாத விவாகங்கள் மூலமாகவும் செல்லாமல் போகத்தக்க விவாகங்கள் மூலமாகவும் பிறந்த குழந்தைகள் கிரமப்படி பிறந்தவர்கள் ஆவார்கள்:—எந்த ஒரு விவாகம் சம்பந்தமாகவாவது, அவ்விவாகம் செல்லாதென அறிவிக்கும் டிக்ரி ஒன்று 11-வது அல்லது 12-வது பிரிவின்படி கொடுக்கப்படுகிறபோது, அந்த டிக்ரி கொடுக்கப்பட்டதற்கு முன்னால் பிறந்ததும் அல்லது அப்போது கர்ப்பத்திலிருந்ததும், அவ்விவாகமானது செல்லாததாக ஆக்கும் டிக்ரி ஒன்றினால் ரத்து செய்யப்பட்டதற்குப் பதிலாக அல்லது செல்லாததென அறிவிக்கப்பட்டதற்குப் பதிலாக கலைத்துவிடப்பட்டிருக்குமானால், அந்த தம்பதிகளுக்கு முறைப்படி பிறந்ததாகக் கொள்ளப்பட்டிருக்கக் கூடியதுமான எந்த ஒரு குழந்தையும், செல்லாததாக ஆக்கும் டிக்ரி கொடுக்கப்பட்டிருந்தபோதிலும், அவர்களுக்கு முறைப்படி பிறந்த குழந்தையாகவே கருதப்படவேண்டும்.

ஆனால், டிக்ரி ஒன்றினால் ரத்துசெய்யப்பட்டிருக்கிற அல்லது செல்லாததென அறிவிக்கப்பட்டிருக்கிற விவாகம் மூலமாய் பிறந்த ஒரு குழந்தை, இந்தச் சட்டம் நிறைவேற்றப்படாதிருக்குமானால், தனது பெற்றோர்களுக்கு முறைப்படியாகப் பிறந்த குழந்தையாக இராதது காரணமாக அதன் பெற்றோர்கள் தவிர வேறு எந்த ஒரு நபருடைய சொத்திலும் அல்லது சொத்துக்கு எத்தகைய உரிமைகளிலும் சுவாதீனம் செய்துகொள்ள அல்லது அமைந்திருக்க முடியாதோ, அத்தகைய உரிமைகள் எவற்றையும் இந்தப் பிரிவில் கண்டுள்ளதெதுவும் அக்குழந்தைக்கு அளிப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது.

17. இரு தார விவாகத்திற்குத் தண்டனை.—இந்தச் சட்டம் தொடங்கியதற்குப் பிறகு இரண்டு ஹிந்துக்களிடையே நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு விவாகத்தின் விஷயத்திலும் அவ்விவாகம் நடைபெற்ற தேதியன்று அவர்களில் ஒருவருக்கு உயிரோடிருக்கிற கணவனோ, மனைவியோ இருந்தால், அந்த விவாகம் செல்லாது; மேலும், (1860-ம் ஆண்டு XLV.வது சட்டமாகிய) இந்திய பினல் கோடின் 494-வது, 495-வது பிரிவுகளின் ஷரத்துக்கள் அவ்விஷயத்தில் பிரயோகமாகும்.

18. ஹிந்து விவாகத்துக்கான வேறு சில நிபந்தனைகளை மீறுவதற்குத் தண்டனை.—இச்சட்டத்தின்கீழ் 5-வது பிரிவைச் சேர்ந்த (iii), (iv), (v), (vi) ஷரத்துக்களில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளை மீறி தமது விவாகம் நிறைவேற்றப்படும்படிச் செய்கிற ஒவ்வொரு நபரும்—

(a). 5-வது பிரிவைச் சேர்ந்த (iii) ஷரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையை மீறுகிற விஷயத்தில், பதினைந்து நாட்கள் வரையில் வெறுங்காவல் தண்டனையாவது ஆயிரம் ரூபாய் வரையில் அபராத தண்டனையாவது இவ்விரு தண்டனைகளுமாவது,

(b). 5-வது பிரிவைச் சேர்ந்த (iv) அல்லது (v) ஷரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையை மீறுகிற விஷயத்தில், ஒரு மாதம் வரையில் வெறுங் காவல் தண்டனையாவது ஆயிரம் ரூபாய் வரையில் அபராத தண்டனையாவது இவ் விரு தண்டனைகளுமாவது,

(c). 5-வது பிரிவைச் சேர்ந்த (vi) ஷரத்தில் குறிப்பிட்டுள்ள நிபந்தனையை மீறுகிற விஷயத்தில், ஆயிரம் ரூபாய் வரையில் அபராத தண்டனையாவது விதிக்கப்படத் தக்கவராவார்.

விசாரணை அதிகாரமும் நடைமுறையும்.

19. மனுச் செய்துகொள்ளவேண்டிய கோர்ட்.—இந்தச் சட்டத்தின்படிக்கான ஒவ்வொரு மனுவும் எந்த ஜில்லாக் கோர்ட்டின் சாதாரண அசல் ஸிவில் விசாரணையதிகாரப் பிரதேச எல்லைகளுக்குள் விவாகம் நிறைவேற்றப்பட்டதோ அல்லது கணவரும் மனைவியும் வசிக்கிறார்களோ அல்லது சேர்ந்து கடைசியாக வசித்தார்களோ, அந்தக் கோர்ட்டாருக்கு மனுச் செய்துகொள்ளப்பட வேண்டும்.

20. மனுக்களில் கண்ட விஷயங்களும் அம் மனுக்களை சரிபார்ப்பதும்.—(*1*) இந்தச் சட்டத்தின்படிச் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு மனுவிலும் பரிகாரம் கோருவதற்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டுள்ள விஷயங்களை, மேற்படி தாவாவின் தன்மை அனுமதிக்கும் அளவுக்குத் தெளிவாய்க் கூறவேண்டும். மேலும், மனுதாரருக்கும் அந்த தம்பதிகளில் மற்றொருவருக்குமிடையே எத்தகைய ரகசிய ஒப்பந்தமும் கிடையாது என்றும் அந்த மனுவில் சொல்லியிருக்கவேண்டும்:

(2) இந்தச் சட்டத்தின்படிச் செய்துகொள்ளப்படும் ஒவ்வொரு மனுவிலும் கண்டுள்ள வாக்குமூலங்கள் நபர் ஒருவரால் மனுதாரர் அல்லது இதர தகுதி வாய்ந்த பிராதுகளைச் சரிபார்ப்பதற்குச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விதமாக சரிபார்க்கப்பட்டிருக்கவேண்டும்: மேலும், விசாரணையின்போது அவை சாட்சியமாகக் குறிப்பிடப்படலாம்.

21. 1908-ம் ஆண்டு V-வது சட்டம் பிரயோகப்படுவது.—இந்தச் சட்டத்தில் கண்ட இதர ஷரத்துக்களுக்கும், இதன் பொருட்டு ஹை கோர்ட் செய்யக்கூடிய விதிகளுக்கும் உட்பட்டு, இந்தச் சட்டத்தின்படிக்கான சகல நடவடிக்கைகளும் சாத்தியமாயுள்ள அளவுக்கு (*1908-ம் ஆண்டு V-வது சட்டமாகிய*) *1908-ம்* ஆண்டிய ஸிவில் வழக்குமுறைச் சட்டத்தினுல் ஒழுங்கு படுத்தப்பட வேண்டும்.

22. நடவடிக்கைகளை ரகசியமாக நடத்தலாம் அவை அச்சிடப்படாமல் அல்லது பிரசுரிக்கப்படாமல் இருக்கலாம்.—(*1*) இந்தச் சட்டத்தின்படிக்கான ஒரு நடவடிக்கை ரகசியமாக நடத்தப்பட வேண்டுமென தம்பதிகளில் எவராகிலும் விரும்பினுலும் அல்லது அப்படிச் செய்வது தகுதியென கோர்ட் கருதினுலும் அது ரகசியமாக நடத்தப்படவேண்டும். அத்தகைய தொரு நடவடிக்கை சம்பந்தப்பட்ட எந்த விஷயத்தையும் கோர்ட்டின் முன் அனுமதியுடனின்றி மற்றப்படி எந்த நபரும் பிரசுரிப்பது அல்லது அச்சிடுவது சட்ட விரோதமாகும்.

(2). உட்பிரிவு (*1*)-ல் கண்டுள்ள ஷரத்துக்களை மீறி எவரேனும் எந்த ஒரு விஷயத்தையும் பிரசுரித்தால் அல்லது அச்சிட்டால் அவருக்கு ஆயிரம் ரூபாய் வரையில் அபராத தண்டனை விதிக்கப்படத்தக்கதாகும்.

23. நடவடிக்கையில் டிக்ரி.—(*1*) இந்தச் சட்டத்தின்படிக்கான எந்த ஒரு நடவடிக்கையிலும் எதிர் தரப்பில் வாதம்

செய்தாலும் செய்யாவிட்டாலும், அத்தகைய நடவடிக்கை யிலே—

(a) பரிகாரமளிப்பதற்கான காரணங்கள் எவையே னும் இருக்கின்றனவென்றும், மனுதாரர் ஷை பரிகாரம் பெறும் காரியத்துக்காக தமது தவறையோ அல்லது அசக்ததையையோ எவ்விதத்திலும் பயன்படுத்திக் கொள்ளவில்லையென்றும்,

(b) மனு செய்துகொண்டதன் காரணம் 10-வது பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (f) ஷரத்தில் அல்லது 13-பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (i) ஷரத்தில் குறிப்பிட்டுள்ள காரணமாக இருந்து, புகார் செய்யப்பட்டுள்ள காரியம் அல்லது காரியங்களுக்கு மனுதாரர் எவ்விதமாகவேனும் உடந்தையாயிருக்கவில்லையென்றும் அல்லது அதைக் கண்டும் காணாதது போலிருக்கவில்லையென்றும், அல்லது மன்னித்துவிடவில்லை என்றும், அல்லது மனுச் செய்துகொண்டதன் காரணம் கொடுமையாக நடத்தப்பட்டமை என்று சொல்லப்பட்டிருந்தால், மனுதாரர் அக் கொடுமையை எவ்விதமாகவேனும் மன்னிக்கவில்லையென்றும்,

(c) அத்த மனுவானது பிரதிவாதியுடன் ரகசிய ஒப்பந்தம் செய்துகொண்டு கொடுக்கப்படவில்லை அல்லது நடத்திக்கொண்டு போகப்படவில்லை என்றும்,

(d) நடவடிக்கையைத் தொடர்ந்ததில் அனுவசியமாகவோ அக்கிரமமாகவோ எவ்விதக் காலதாமதமும் ஏற்படவில்லையென்றும்,

(e) பரிகாரம் அளிக்கக்கூடாதென்பதற்குச் சட்டரீதியான காரணம் வேறு எதுவும் இல்லையென்றும்,

கோர்ட் சந்தேகமறத் தெரிந்துகொண்டால், அப்போது அத்தகைய ஒரு விஷயத்திலே, அவ்வாறு பரிகாரம் அளிக்கும்படி கோர்ட் டிக்ரி பிறப்பிக்கவேண்டுமேயன்றி வேறுவிதமாக இருந்தால் அல்ல.

(2) இச் சட்டத்தின்படி எவ்வித பரிகாரமும் கொடுக்கத் தொடங்குவதற்கு முன், ஷை விஷயத்தின் தன்மையையும் சந்தர்ப்பத்தையும் அனுசரித்து தம்பதிகள் இருவருக்குமிடையே சமரசம் ஏற்படுத்துவது சாத்தியமா யிருக்குமானால், அதற்கான எல்லா முயற்சியையும் ஒவ்வொரு வழக்கிலும் முதலில் செய்வது ஷை கோர்ட்டினுடைய கடமையாகும்.

24. வழக்கின் முடிவு தெரியும் வரையில் ஜீவனும்சமும் நடவடிக்கைகளின் செலவும்.—இந்த சட்டத்தின்படி எடுத்துக்

கொள்ளப்படும் ஒரு நடவடிக்கையிலே, சந்தர்ப்பத்துக்கேற்ப மனைவிக்கு அல்லது கணவனுக்கு தமது ஜீவனத்துக்கும், நடவடிக்கைக்குப் பிடிக்கும் அவசியமான செலவுகளுக்கும் தனிப்பட்ட வருமானம் எதுவுமில்லை என்று கோர்ட் அபிப்பிராயப்பட்டால், அந்த மனைவி அல்லது கணவன் விண்ணப்பம் செய்து கொள்வதன்பேரில், நடவடிக்கைகளுக்குப் பிடிக்கும் செலவுகளையும், மனுதாரரின் வருமானத்தையும் பிரதிவாதியின் வருமானத்தையும் கவனிக்கும்போது நியாயமானதென்று கோர்ட்டுக்குத் தோன்றக்கூடிய தொகையை நடவடிக்கையின் போது மாதந்தோறும், அந்த பிரதிவாதி அந்த மனுதாரருக்குக் கொடுக்கவேண்டுமெனக் கோர்ட் உத்தரவிடலாம்.

25. நிலையான மொத்த ஜீவனம்சமும் குறித்த காலத்துக்கொருமுறை கொடுக்கப்படுகிற ஜீவனம்சமும்.—(1) இந்தச் சட்டத்தின் விசாரணை அதிகாரம் செலுத்துகிற ஒரு கோர்ட், ஒரு டிக்ரி பிறப்பிக்கும் போதாவது அதற்குப் பிறகு எப்போதாவது, சந்தர்ப்பத்துக்கேற்ப மனைவியாகிலும் கணவராகிலும் தங்களுக்கு விண்ணப்பம் செய்துகொள்வதன் பேரில், பிரதிவாதியின் சொந்த வருமானம், இதர சொத்து ஏதேனுமிருந்தால் அச்சொத்து, விண்ணப்பதாரரின் வருமானம், சொத்து ஆகியவைகளையும், தம்பதிகளின் நடத்தையையும் வைத்துப் பார்த்து நியாயமானதெனக் கோர்ட்டுக்குத் தோன்றக்கூடிய மொத்த தொகையாக, அல்லது விண்ணப்பதாரின் ஆயுட்காலத்துக்கு மேற்படாத கால அளவுக்கு மாதாந்தர அல்லது குறிப்பிட்ட காலத்துக்கொருமுறை கொடுக்கப்படுகிற தொகையை, விண்ணப்பதாரர் மறு விவாகம் செய்துகொள்ளாதிருக்கிற வரையில், பிரதிவாதியானவர் விண்ணப்பதாரரின் பராமரிப்புக்கும் ஆதரவுக்குமாக விண்ணப்பதாரருக்கு கொடுக்கவேண்டுமென உத்தரவிடலாம். அவ்வாறு தொகை கொடுப்பதற்கு ஜாமீனாக, அவசியமானால் பிரதிவாதியின் ஸ்தாவர சொத்தின்பேரில் பொறுப்பேற்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1)-ன் படி உத்தரவு ஒன்றைப் பிறப்பித்த பிறகு எப்போதாகிலும் தம்பதிகளில் எவருடைய நிலைமைகளிலாகிலும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று அக்கோர்ட்டுக்குச் சந்தேகமறத் தெரியவந்தால், தம்பதிகளில் எவருடைய கோரிக்கையின் பேரிலாகிலும் அக்கோர்ட் நியாயமெனக் கருதக்கூடிய வகையில் அப்படிப்பட்ட உத்தரவை வேறுபடுத்தலாம், மாற்றலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(3) யாருக்குச் சாதகமாக இப் பிரிவின்படி ஓர் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறதோ அவர் மறுவிவாகம் செய்து கொண்டிருக்கிருரென்ருவது அவர் மனைவியாக இருந்தால் அந்த மனைவி கற்பொழுக்கமில்லாமல் இருந்துவிட்டிருக்கிருரென்ருவது, அவ கணவனுக இருந்தால், அக் கணவன் தனது மனைவியாயிராத வேறொரு பெண்ணுடன் சம்போகம் செய்திருக்கிருரென்ருவது கோர்ட்டுக்குச் சந்தேகமறத் தெரியவந்தால், அவ் வுத்தரவை ரத்துச் செய்யவேண்டும்.

26. குழந்தைகளைப் பாதுகாப்பது.—இந்தச் சட்டத்தின் படியானதொரு நடவடிக்கையில், யுக்த வயது அடையாத குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி இவை சம்பந்தமாக, சாத்தியமானபோதெல்லாம் அவர்களுடைய விருப்பத்துக்குகந்தபடி, கோர்ட் நியாயமானதென்றும் சரியானதென்றும் கருதக்கூடிய இடைக்கால உத்தரவுகளை அப்போதைக்கப்போது பிறப்பிக்கலாம். டிக்ரியில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். மேலும், அக் கோர்ட்டானது ஷை டிக்ரியைப் பிறப்பித்த பிறகு இதன்பொருட்டு மனுமூலமாக விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன்பேரில், ஷை டிக்ரியைப் பெறுவதற்கான நடவடிக்கை பைசலாகாமல் இன்னும் நடந்து கொண்டிருந்தால், ஷை குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி ஆகியவை சம்பந்தமாக ஷை டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக்கூடிய சகல உத்தரவுகளையும், ஏற்பாடுகளையும் அப்போதைக்கப்போது ஏற்படுத்தலாம்; மேலும், அந்தக் கோர்ட் ஏற்கனவே செய்துள்ள உத்தரவுகளையும் ஏற்பாடுகளையும் அவ்வப்போது ரத்து செய்யலாம், அல்லது சிறிது காலம் நிறுத்திவைக்கலாம் அல்லது மாற்றலாம்.

27. சொத்தைப் பைசல் செய்வது.—இந்தச் சட்டத்தின் படியானதொரு நடவடிக்கையிலே, விவாகத்தின் போதாவது ஏறக்குறைய அச் சமயத்திலாவது வெகுமதியாகக் கொடுக்கப்பட்டதும், கணவன் மனைவி இருவருக்கும் கூட்டாகச் சொந்தமாயிருக்கக்கூடியதுமானதொரு சொத்து விஷயமாகக் கோர்ட் தனக்கு நியாயமென்றும் சரியென்றும் தோன்றுகிற ஏற்பாடுகளை டிக்ரியில் செய்யலாம்.

28. டிக்ரிகளையும் உத்தரவுகளையும் அமுல் நடத்துவதும் அவைகள் பேரில் அப்பில் செய்துகொள்வதும்.—இந்தச் சட்டத்தின்படியானதொரு நடவடிக்கையில், கோர்ட்டால் பிறப்பிக்கப்படும் சகல டிக்ரிகளும் உத்தரவுகளும்,

அக் கோர்ட்டாரின் அசல் ஸிவில் விசாரணை அதிகாரத்தைக் கொண்டு அவர்களால் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளும் உத்தரவு களும் எவ்விதமாக அமுல் நடத்தப்படுமோ அவ்விதமாக அமுல் நடத்தப்படவேண்டும். மேலும், பிரஸ்தாப காலத்தில் அமுலிலிருந்து வருகிற எந்த சட்டத்தின்படியேனும் அவற்றின் பேரில் அப்பீல் செய்து கொள்ளலாம் :

ஆனல் செலவுத் தொகைகளுக்காக மாத்திரம் அப்பீல் செய்துகொள்ள முடியாது.

விலக்கும், ரத்தும்.

29. விலக்கு.—(1) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன்பு ஹிந்துக்களிடையே நிறைவேற்றப்பட்டதும் மற்றப்படி செல்லுபடியாவதுமான தொரு விவாகமானது, அதற்குரிய மணமக்கள் ஒரே கோத்திரம் அல்லது பிரவரத்தைச் சேர்ந்தவர் களென்னும் காரணத்தினுல் மட்டும், அல்லது வெவ்வேறு மதங்களையோ, வெவ்வேறு ஜாதிகளையோ, ஒரே ஜாதியின் வெவ்வேறு உட்பிரிவுகளையோ சேர்ந்தவர்களென்னும் காரணத்தினுல் மட்டும் சட்ட சம்மத மற்றதாக அல்லது எப்போதாவது சட்ட சம்மதமற்றதாயிருந்திருப்பதாகக் கருதப் படமாட்டாது.

(2) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன்போ பிறகோ நிறைவேற்றப்பட்டதொரு ஹிந்து விவாகத்தை இறுதி செய்வித்துக்கொள்ள, ஆசாரத்தினுல் அங்கிகரிக்கப்பட்ட அல்லது விசேஷ சட்டத்தினுல் அளிக்கப்பட்ட எவ் வுரிமை யேனும் இச் சட்டத்தில் கண்டதெதனுலும் பாதிக்கப் படுவதாகக் கருதப்படமாட்டாது.

(3) இந்தச் சட்டம் தொடங்கிய தேதியன்று நடந்து கொண்டிருப்பதும், ஒரு விவாகம் செல்லாததாக்கி விட்டிருப்ப தாக அறிவிக்கப்படுவதற்காக அல்லது ஒரு விவாகத்தை இறுதிசெய்வதற்காக அல்லது கலைத்து விடுவதற்காக அல்லது சட்டபூர்வமாகப் பிரிந்துபோவதற்காக, பிரஸ்தாப காலத்தில் அமுலிலிருந்துவரும் எந்த ஒரு சட்டத்தின்படி நடத்தப்படுவது மானதொரு நடவடிக்கைக்கு இச் சட்டத்தில் கண்ட எதனுலும் பாதகமுண்டாகமாட்டாது. அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கையானது இச் சட்டம் நிறைவேற்றப்படாம லிருந்தால் எப்படியோ அப்படியே மேலும் தொடர்ந்து நடத்தப்பட்டுத் தீர்மானிக்கப்படலாம்.

(4) இச் சட்டம் தொடங்கியதற்கு முன்போ பிறகோ (1954-ம் ஆண்டு 43-வது சட்டமாகிய) 1954-ம் ஆண்டிய

விசேஷ விவாகச் சட்டத்தின்படி, ஹிந்துக்களிடையே நிறைவேற்றப்பட்ட விவாகங்கள் சம்பந்தமாக, அந்த சட்டத்தில் கண்ட ஷரத்துக்கள் எவையும் இந்தச் சட்டத்தில் கண்டது எதனாலும் பாதிக்கப்படுவதாகக் கருதப்படமாட்டாது.

30. ரத்து—(1946-ம் ஷூத்து XXVIII-வது சட்டமாகிய) 1946-ம் ஷூத்திய ஹிந்து விவாக தளைகள் நீக்கச் சட்டமும், (1949-ம் ஷூத்து XXI-வது சட்டமாகிய) 1949-ம் ஷூத்திய ஹிந்து விவாகங்களின் செல்திறன் சட்டமும், ஹிந்துக்களிடையே இருதார விவாகங்களைத் தடுப்பதைக் குறித்த (பம்பாய் 1946-ம் ஷூத்து XXV-வது சட்டமாகிய) 1946-ம் ஷூத்திய பம்பாய்ச் சட்டமும், (பம்பாய் 1947-ம் ஷூத்து XXII-வது சட்டமாகிய) 1947-ம் ஷூத்திய பம்பாய் ஹிந்து விவாக ரத்துச் சட்டமும், ஹிந்து (இருதார விவாகங்களைத் தடுப்பதையும், விவாக ரத்து செய்வதையும் குறித்த) (சென்னை 1949-ம் ஷூத்து VI-வது சட்டமாகிய) 1949-ம் ஷூத்திய சென்னைச் சட்டமும், ஹிந்துக்களிடையே இருதார விவாகங்களைத் தடுப்பதைக் குறித்த (1950-ம் ஷூத்து V-வது சௌராஷ்டிரச் சட்டமாகிய) 1950-ம் ஷூத்திய சௌராஷ்டிரச் சட்டமும், (1952-ம் ஷூத்து XXX-வது சௌராஷ்டிரச் சட்டமாகிய) 1952-ம் ஷூத்திய சௌராஷ்டிர ஹிந்து விவாக ரத்துச் சட்டமும் இதனால் ரத்து செய்யப்படுகின்றன.

1954-ம் வருஷத்திய விசேஷ விவாகச் சட்டம்

1954-ம் வருஷத்தில் இயற்றப்பட்ட 43-வது சட்டம்

சிலர் விஷயத்தில் விவாகத்துக்கு விசேஷமானதொரு முறையை ஏற்படுத்திக் கொடுப்பதற்கும், அத்தகைய விவாகங்களையும் மற்றும் வேறு சில விவாகங்களையும் பதிவு செய்வதற்கும், விவாக ரத்துக்கும் வகை செய்வதற்கான ஒரு சட்டம்.

இந்தியக் குடியரசின் ஐந்தாவது ஆண்டில் பார்லிமென்டால் பின் வருமாறு சட்டமியற்றப்பட்டது:—

அத்தியாயம் 1

பீடிகை

1. பெயரும், வியாபகமும், தொடக்கமும்,—(1) இந்தச் சட்டம் 1954-ம் வருஷத்திய விசேஷ விவாகச் சட்டம் எனச் சொல்லப்படலாம்.

(2) இது ஜம்மு—காஷ்மீர் ராஜ்யம் நீங்கலாக இந்தியா முழுவதிலும் வியாபிக்கிறது. மேலும் இந்தச் சட்டம் வியா

பிக்கிற பிரதேசங்களைத் தாயகமாகக் கொண்டுள்ளவர்களாக வும், அப்பிரதேசங்களுக்கு வெளியில் இருந்து வருபவர்களாக வும் உள்ள இந்தியப் பிரஜைகளுக்கும் இந்தச் சட்டம் பிரயோக மாகிறது.

(3) இந்தச் சட்டம் மத்திய சர்க்கார் அரசாங்க கெஜெட் டில் அறிவிப்பதன் மூலம் குறிப்பிடுகிறதொரு தேதியில் அமு லுக்கு வரும்.

2. வியாக்யானங்கள்.—இந்தச் சட்டத்திலே, சந்தர்ப் பத்தினால் வேறு பொருள் ஏற்படுவதாக இருந்தாலன்றி,

(a) "கான்சுலர் அதிகாரி" என்பதற்கு ஒரு கான்சல் ஜெனரல், கான்சல், வைஸ்—கான்சல், புரோ-கான்சல் அல்லது கான்சுலர் ஏஜெண்டு என்று அர்த்தம்.

(b) "தடுக்கப்பட்ட உறவு முறை"—ஒரு ஆணும் முதலா வது ஷெட்யூலின் 1-வது பாகத்தில் குறிப்பிடப் பட்டுள்ள நபர் களில் எவரும், ஒரு பெண்ணும் ஷெட்யூலின் 2-வது பாகத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களில் எவரும் தடுக்கப்பட்ட உறவு முறைக்கு உட்பட்டவர்களாவார்கள்.

விளக்கம் 1. உறவு முறையில் பின் கூறப்படுவனவும் அடங்கி யுள்ளன:—

(a) பாதி அல்லது கர்ப்பாசய ரத்தக் கலப்பினால் ஏற் பட்ட உறவும் முழு ரத்தக் கலப்பினால் ஏற்பட்ட உறவும்;

(b) முறை தவறான ரத்த உறவும், முறைப்படியான ரத்த உறவும்;

(c) சுவீகாரத்தின் மூலமாக ஏற்பட்ட உறவும்; ரத்தக் கலப்பு மூலமாக ஏற்பட்ட உறவும்;

இந்தச் சட்டத்தில் உறவு முறை பற்றிய எல்லாச் சொற் றொடர்களுக்கும் இந்தப் பிரகாரமே அர்த்தம் செய்து கொள்ள வேண்டும்.

விளக்கம் 2. "முழு ரத்தக் கலப்பு", "பாதி ரத்தக் கலப்பு" இரண்டு நபர்கள் பொதுவான ஒரு மூதாதையின் ஒரே மனைவி மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களா யிருந்தால், அவர்கள் ஒருவருக்கொருவர் முழு ரத்தக் கலப்புள்ள உறவினர் என்றும், பொதுவான ஒரு மூதாதையின் வெவ்வேறு மனைவி கள் மூலமாய் ஏற்பட்ட சந்ததிகளில் தோன்றியவர்களா யிருந் தால் பாதி ரத்தக் கலப்புள்ள உறவினர் என்றும் சொல்லப்படு வார்கள்.

விளக்கம் 3. "கர்ப்பாசய ரத்தக் கலப்பு"—இரண்டு நபர்கள் பொதுவான ஒரு பெண் மூதாதையின் வெவ்வேறு கணவர்கள் மூலமாய் ஏற்பட்ட சந்ததியில் தோன்றியவர்களாயிருந்தால், அவர்கள் ஒருவருக்கொருவர் கர்ப்பாசய ரத்தக் கலப்புள்ள உறவினரென்று சொல்லப் படுவார்கள்.

விளக்கம் 4. விளக்கங்கள் 2-லும் 3-லும் "மூதாதை" என்பதில் தகப்பனும், "பெண் மூதாதை" என்பதில் தாயாரும் அடங்கியவை.

(c) "ராஜ தந்திர அதிகாரி" (diplomatic offices) என்பதற்கு ஒரு தூதர், பிரதிநிதி, மந்திரி, உப தூதர், ஹைகமிஷனர், கமிஷனர் அல்லது வேறு ராஜதந்திர பிரதிநிதி, அல்லது ஒரு தூதர் காரியாலயம், பிரதிநிதி காரியாலயம் அல்லது ஹைகமிஷனர் காரியாலயத்தின் ஒரு கௌன்சிலர் அல்லது காரியதரிசி என்று அர்த்தம்.

(d) "ஜில்லா", என்பது ஒரு விவாக அதிகாரி சம்பந்தப்பட்ட வரையில், 3-வது பிரிவின் (1)வது உப-பிரிவு அல்லது (2)வது உப-பிரிவின் கீழ் அவர் எந்தப் பிரதேசத்துக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாரோ அந்தப் பிரதேசத்தைக் குறிப்பிடுகிறது;

(e) "ஜில்லா கோர்ட்டு" என்பது அசல் விசாரணை அதிகாரங் கொண்ட பிரதம சிவில் கோர்ட்டையும், நகர சிவில் கோர்ட்டு ஒன்று இருக்கிற இடத்தில் அந்தக் கோர்ட்டையும் குறிப்பிடுகிறது.

(f) "நிர்ணயிக்கப்பட்ட" என்பதற்கு இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்பட்ட விதிகளினால் நிர்ணயிக்கப்பட்ட என்று பொருள்.

(g) "ராஜ்ய சர்க்கார்",—ஒரு 'ஸி' பிரிவு ராஜ்யம் விஷயத்தில் அந்த ராஜ்யத்தின் லெப்டினெனென்ட் கவர்னர் அல்லது, சந்தர்ப்பத்தைப் பொறுத்து பிரதம கமிஷனர் என்று அர்த்தம்.

3. விவாக அதிகாரிகள்.—(1) இந்தச் சட்டத்தின் காரியங்களுக்காக ராஜ்ய சர்க்கார், அரசாங்க கெஜெட்டில் அறிவிப்பதன் மூலம் அந்த ராஜ்யம் முழுவதற்கோ அல்லது எந்தப் பகுதிக்கோ, ஒன்று அல்லது அதிகமான விவாக அதிகாரிகளை நியமிக்கலாம்.

(2) இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களைத் தாயகமாகக் கொண்டு, அந்தப் பிரதேசங்களுக்கு வெளியில் இருந்து வருகிற இந்தியப் பிரஜைகளுக்குப் பிரயோகமாவதில் இந்தச்

சட்டத்தின் காரியங்களுக்காக, மத்திய சர்க்கார், அரசாங்க கெஜெட்டில் அறிவிப்பதன் மூலம்,—

(a) ஜம்மு—காஷ்மீர் ராஜ்யம் விஷயத்தில், அது தகுந்தவரெனக் கருதும் மத்திய சர்க்கார் அதிகாரியை அந்த ராஜ்யத்துக்கு அல்லது அதன் ஒரு பகுதிக்கு விவாக அதிகாரியாக இருக்கும்படி குறிப்பிடலாம்.

(b) வேறு ஒரு நாடு, இடம் அல்லது பிரதேசம் விஷயத்தில், அது தகுந்தவரெனக் கருதும் ராஜதந்திர அல்லது கான்சுலர் அதிகாரிகளை, அந்த நாடு, இடம் அல்லது பிரதேசத்துக்கு விவாக அதிகாரியாக இருக்கும்படி நியமிக்கலாம்.

அத்தியாயம் 2

விசேஷ விவாகங்கள் நிறைவேறுதல்

4. விசேஷ விவாகங்களை நிறைவேற்றுவது சம்பந்தமான நிபந்தனைகள்,—விவாகங்களை நிறைவேற்றி வைப்பது சம்பந்தமாக தற்போது அமுலிலிருக்கும் வேறு எந்தச் சட்டத்திலும் எவ்வாறு கூறப்பட்டிருப்பினும், விவாக சமயத்தில் பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப் பட்டிருந்தால், இந்தச் சட்டத்தின் கீழ் எந்த இரண்டு நபர்களுக்கிடையேயும் விவாகம் செய்விக்கலாம். அந்த நிபந்தனைகளாவன:—

(a) மணமக்களில் எவருக்கும் உயிரோடுள்ள கணவராவது மனைவியாவது இருக்கக்கூடாது;

(b) மணமக்களில் எவரும் முட்டாளாகவாவது பைத்தியக்காரராகவாவது இருக்கக்கூடாது;

(c) மணமகனுக்கு இருபத்தொரு வயதும் மணமகளுக்கு பதினெட்டு வயதும் பூர்த்தியாகி யிருக்க வேண்டும்;

(d) மணமக்கள் தடுக்கப்பட்ட உறவுமுறைக்கு உட்பட்டவர்களாக இருக்கக்கூடாது;

(e) விவாகம், இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களுக்கு வெளியில் நடைபெறுவதாக இருந்தால், மணமக்கள் இருவரும் இந்தியப் பிரஜைகளாகவும் அந்தப் பிரதேசங்களைத் தாயகமாகக் கொண்டுள்ளவர்களாகவும் இருக்க வேண்டும்.

5. விவாகம் செய்து கொள்ளப் போவது பற்றிய அறிவிப்பு. ஒரு விவாகம்

(இந்தச் சட்டத்தின் கீழ்) நடைபெறவிருக்கும்போது, மணமக்கள் இருவரும் அது பற்றிய அறிவிப்பு ஒன்றை,

இரண்டாவது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள நமூனுவில் எழுத்து மூலமாக, மணமக்களில் ஒருவரேனும் அந்த அறிவிப்பு கொடுக்கப்படுகிற தேதிக்கு உடன் முன்னுல் முப்பது நாட்களுக்குக் குறையாததொரு காலத்துக்கு வசித்து வந்துள்ள ஜில்லாவின் **விவாக அதிகாரிக்கு** அனுப்ப வேண்டும்.

6. விவாக அறிவிப்பு புத்தகமும், பிரசுரமும்.—(1) அந்த விவாக அதிகாரி 5-வது பிரிவின் கீழ் கொடுக்கப்படுகிற அறிவிப்புகள் எல்லாவற்றையும் அவருடைய காரியாலயத்தின் தஸ்தாவேஜுகளுடன் வைத்திருக்க வேண்டும். மேலும், அத்தகைய ஒவ்வொரு அறிவிப்பின் சரியான பிரதியொன்றை, இந்தக் காரியத்துக்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள புத்தகம் ஒன்றில் உடனடியாகவே பதிவு செய்துவிட வேண்டும்; அந்தப் புத்தகம் விவாக அறிவிப்புப் புத்தகம் என்று சொல்லப்படும். அந்தப் புத்தகம் அதைப் பார்வையிட விரும்பும் எந்த நபரும், கட்டணமில்லாமல், நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்வையிடக் கூடியபடி வைத்திருக்கப்பட வேண்டும்.

(2) அந்த விவாக அதிகாரி அத்தகைய ஒவ்வொரு அறிவிப்பின் பிரதியையும் அவருடைய காரியாலயத்தில் - எடுப்பானதொரு இடத்தில் ஒட்டிவைப்பதன் மூலம் அத்தகைய ஒவ்வொரு அறிவிப்பையும் வெளிப்படுத்த வேண்டும்.

(3) உத்தேச விவாகத்தில் சம்பந்தப்பட்ட இருவரில் எவரேனும் ஒருவர், 5-வது பிரிவின்கீழ் எந்த அதிகாரிக்கு அந்த அறிவிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறதோ அந்த அதிகாரியின் ஜில்லாவின் ஸ்தல எல்லைகளுக்குள் நிரந்தரமாக வசித்து வருபவராக இல்லாதிருந்தால், அந்த விவாக அதிகாரி அந்த அறிவிப்பின் நகல் பிரதி ஒன்றை எந்த ஜில்லாவின் எல்லைகளுக்குள் அந்த நபர் நிரந்தரமாக வசித்து வருகிருரோ அந்த ஜில்லாவின் விவாக அதிகாரிக்கு அனுப்பி வைக்க ஏற்பாடு செய்யவேண்டும்; அந்த விவாக அதிகாரி அதன்பேரில் அந்த அறிவிப்பின் பிரதி யொன்றை அவருடைய காரியாலயத்தில் எடுப்பானதொரு இடத்தில் ஒட்டிவைக்க ஏற்பாடு செய்ய வேண்டும்.

7. விவாகத்துக்கு ஆட்சேபணை.—(1) எந்த ஒரு நபரும், 6-வது பிரிவு (2)-வது உட்பிரிவின்கீழ் அத்தகைய அறிவிப்பு கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கழிவதற்குள், 4-வது பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளில் ஒன்றையோ, ஒன்றுக்கு மேற்பட்டவற்றையோ அது மீறுவதாக ஆதாரங்காட்டி அந்த விவாகத்தை ஆட்சேபிக்கலாம்.

(2, 6-வது பிரிவு, 2-வது உட்பிரிவின்கீழ் உத்தேசவிவாகம் பற்றிய அறிவிப்பு வெளியிடப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்கள் கழிந்த பிறகு, (1)-வது உட்பிரிவின்கீழ் அது ஏற்கெனவே ஆட்சேபிக்கப்பட்டிருந்தாலொழிய அந்த விவாகம் நிறைவேற்றப் படலாம்.

(3) அந்த ஆட்சேபணையின் தன்மையை அந்த விவாக அதிகாரி விவாக அறிவிப்பு புத்தகத்தில் எழுத்து மூலமாகப் பதிவு செய்யவேண்டும்; அந்த ஆட்சேபணையைச் செய்த நபருக்கு அது படித்துக் காட்டப்பட்டு, அவசியமானால் விளக்கிக் கூறப்பட்டு, அந்த நபரால் அல்லது அந்த நபரின் சார்பில் கையொப்பமிடப்பட வேண்டும்.

8. ஆட்சேபணை கிடைக்கப்பெற்றவுடன் அனுசரிக்க வேண்டிய நடைமுறை.—(1) உத்தேச விவாகம் ஒன்றைப்பற்றி, 7-வது பிரிவின்கீழ் ஒரு ஆட்சேபணை செய்யப்பட்டால், அந்த விவாக அதிகாரி ஆட்சேபணை செய்யப்பட்ட விஷயம்பற்றி விசாரித்து, அந்த விவாகம் நிறைவேறுவதை அது தடுக்கவேண்டியதில்லை என்று தாம் திருப்தியடையும்வரை அல்லது ஆட்சேபணை செய்த நபர் அந்த ஆட்சேபணையை வாபஸ் வாங்கிக்கொள்ளுகிற வரை, அந்த விவாக அதிகாரி அந்த விவாகத்தை நிறைவேற்றி வைக்கக் கூடாது; ஆனால், அந்த விவாக அதிகாரி, ஆட்சேபணை செய்யப்பட்டவிஷயம்பற்றி விசாரிப்பதற்கும், அது பற்றி ஒரு முடிவுக்கு வருவதற்கும் அந்த ஆட்சேபணை செய்யப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்கு மேல் எடுத்துக் கொள்ளக்கூடாது.

(2) அந்த விவாக அதிகாரி அந்த ஆட்சேபணையை ஏற்றுக்கொண்டு அந்த விவாகத்தை நிறைவேற்றி வைக்க மறுத்துவிட்டால், உத்தேச விவாகத்தில் சம்பந்தப்பட்ட இருவரில் எந்த ஒருவரேனும், அவ்வாறு மறுக்கப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், அந்த விவாக அதிகாரியின் காரியாலயம் எந்த ஜில்லாக்கோர்ட்டின் அதிகாரத்துக்குட்பட்ட ஸ்தல எல்லைகளுக்குள் அமைந்திருக்கிறதோ அந்த ஜில்லாக் கோர்ட்டுக்கு அப்பீல் செய்துகொள்ளலாம். அந்த அப்பீலின்மீது ஜில்லா கோர்ட் செய்யும் தீர்ப்பே முடிவானதாக இருக்கும். அந்தக் கோர்ட்டின் தீர்ப்பை யொட்டி அந்த விவாக அதிகாரி நடந்து கொள்ளவேண்டும்.

9. விசாரணைகள் விஷயத்தில் விவாக அதிகாரிகளுக்குள்ள அதிகாரங்கள்.—(1) 8-வது பிரிவின்கீழ் எந்த ஒரு விசாரணையும் நடத்தும் காரியத்துக்கு, விவாக அதிகாரிக்கு, ஒரு சிவில்

கோர்ட்டு, பின்வரும் விஷயங்கள்பற்றிய வழக்கு ஒன்றை விசாரிக்கும்போது, 1908-ம் வருஷ சிவில் புரொஸீஜர் கோடின் (1908-ம் வருஷ 5-வது சட்டம்) கீழ் என்னென்ன அதிகாரங்களைப் பெற்றிருக்குமோ அந்த அதிகாரங்கள் அனைத்தையும் பெற்றிருப்பார். அந்த விஷயங்களாவன :—

(a) சாட்சிகளைக் கூப்பிடுவது, அவர்கள் கோர்ட்டில் பிரசன்னமாயிருக்கும்படிச் செய்வது, அவர்களை பிரமாணத்தின் மீது விசாரிப்பது;

(b) கண்டுபிடிப்பது, பார்வையிடுவது;

(c) தஸ்தாவேஜுகளை ஆஜர் செய்யும்படி கட்டாயப் படுத்துவது;

(d) "பிரமாண வாக்கு மூலம்" மீதான சாட்சியத்தை ஏற்றுக்கொள்வது;

(e) சாட்சிகளை விசாரிக்க கமிஷன்கள் நியமிப்பது;

மேலும். விவாக அதிகாரியின் முன்னிலையில் நடைபெறும் எந்த நடவடிக்கையும் இந்தியன் பீனல் கோடு (1860-ம் வருஷ 45-வது சட்டம்) 193-வது பிரிவின் பொருளுக்குட்பட்ட ஒரு ஜுடீஷியல் நடவடிக்கையாகவே கருதப்படவேண்டும்.

விளக்கம்—எந்த ஒரு நபரையும் சாட்சியங்கொடுக்க ஆஜராகவேண்டுமென்று கட்டாயப்படுத்தும் காரியத்துக்கு, விவாக அதிகாரியின் அதிகாரத்துக்குட்பட்ட பிரதேசத்தின் ஸ்தல எல்லைகள் அவருடைய ஜில்லாவின் ஸ்தல எல்லைகளாக இருக்கும். (2) உத்தேச விவாகம் ஒன்றைப்பற்றி செய்துகொள்ளப்பட்ட ஆட்சேபணையானது நியாயமற்றதென்றும், நல்லெண்ணத்துடன் செய்யப்படவில்லையென்றும் விவாக அதிகாரிக்குத் தோன்றினால், அவர் ஆட்சேபித்த நபர்மீது, ஒரு ஆயிரம் ரூபாய்க்குமேல் போகாத செலவு தொகையை நஷ்டஈடாக விதித்து, அந்தத் தொகை முழுவதையுமோ அல்லது ஒரு பகுதியையோ அந்த உத்தேச விவாகத்தின் மணமக்களுக்கு அளித்துத் தீர்ப்புக் கூறலாம்; மேலும், அவ்வாறு செய்யப்பட்ட செலவு தொகைகளுக்கான எந்த உத்தரவும் அந்த விவாக அதிகாரியின் காரியாலயம், எந்த ஜில்லாக் கோர்ட்டின் அதிகாரத்துக்குட்பட்ட ஸ்தல எல்லைக்குள் இருக்கிறதோ அந்த ஜில்லாக் கோர்ட்டால் பிறப்பிக்கப்பட்ட ஒரு டிக்ரி எவ்வாறு நிறைவேற்றி வைக்கப்படுமோ அந்தப் பிரகாரமே நிறைவேற்றி வைக்கப்படலாம்.

10. இந்தியாவுக்கு வெளியிலுள்ள விவாக அதிகாரிகளின் ஆட்சேபணை கிடைக்கப்பெற்றதும் அனுசரிக்கவேண்டிய நடைமுறை —இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களுக்கு வெளியில் உள்ள விவாக அதிகாரி ஒருவரிடம் மேற்குறிப்பிட்ட பிரதேசங்களுக்கு வெளியில் நடைபெறவிருக்கும் ஒரு விவாகத்தைப்பற்றி இந்தச் சட்டத்தின் 7-வது பிரிவின்கீழ் ஒரு ஆட்சேபணை செய்யப்படும்போது, அந்த விவாக அதிகாரி அந்த விஷயம்பற்றி அவர் உசிதமென்று கருதுகிறபடி விசாரணை நடத்திய பிறகு, அந்த விஷயம்பற்றி அவர் ஏதேனும் சந்தேகம் கொண்டிருந்தால், அவர் அந்த விவாகத்தை நிறைவேற்றக் கூடாது. ஆனால், அந்த தஸ்தாவேஜை அந்த விஷயம்பற்றி அவர் உசிதமெனக் கருதும் அறிக்கையுடன், மத்திய சர்க்காருக்கு அனுப்பிவிட வேண்டும். மத்திய சர்க்கார் அதற்கு உசிதமெனத் தோன்றுகிறபடி அந்த விஷயம்பற்றி விசாரணை செய்து, ஆலோசனை பெற்ற பிறகு அதுபற்றி தன்னுடைய முடிவை எழுத்து மூலமாக விவாக அதிகாரிக்குத் தெரிவிக்க வேண்டும். அந்த அதிகாரி மத்திய சர்க்காரின் முடிவையொட்டி நடந்துகொள்ளவேண்டும்.

11. மணமக்கள் சாட்சிகளின் பிரகடனம் —விவாகம் நிறைவேற்றப்படுவதற்கு முன்னால், மணமக்களும், மூன்று சாட்சிகளும் விவாக அதிகாரியின் முன்னிலையில், மூன்றாவது ஷெட்யூலில் குறிப்பிடப்பட்டுள்ள நமூனாவில் ஒரு பிரகடனத்தில் கையெழுத்திட வேண்டும். அந்தப் பிரகடனம் அந்த விவாக அதிகாரியால் ஒப்புதல் கையெழுத்திடப்பட வேண்டும்.

12 விவாகம் நிறைவேற்றி வைக்கப்படும் இடமும் முறையும்.—(1) விவாகம், விவாக அதிகாரியின் காரியாலயத்திலோ அல்லது அந்தக் காரியாலயத்திலிருந்து நியாயமானதொரு தூரத்துக்குள்ளிருக்கும், மணமக்கள் விரும்பும் வேறு எந்த இடத்திலோ, நிர்ணயிக்கப்படக்கூடிய நிபந்தனைகளுக்கும், அதிகப்படியான கட்டணங்கள் செலுத்தப்படுவதற்கும் உட்பட்டு, நிறைவேற்றி வைக்கப்படலாம்.

(2) விவாகம், மணமக்கள் அனுசரிக்க விரும்பும் எந்த முறைப்படியும் நிறைவேற்றி வைக்கப்படலாம்.

ஆனால், மணமக்கள் இருவரும் ஒருவர் மற்றவரிடம், "நான் (இன்னார்) உங்களை (இன்னாரை) என்னுடைய சட்டபூர்வமான மனைவியாக அல்லது கணவராக ஏற்றுக்கொள்கிறேன்" என்று விவாக அதிகாரியின் முன்னிலையிலும் அந்த மூன்று சாட்சிகளின் முன்னிலையிலும், மணமக்கள் புரிந்து

கொள்ளும் எந்த ஒரு பாஷையிலாவது சொன்னுலொழிய, அந்த விவாகம் பூர்த்தியானதாகவோ, கட்டுப்படுத்துவதாகவோ ஆகாது.

13. விவாக அத்தாட்சிப் பத்திரம்.—(1) விவாகம் நிறைவேற்றிவைக்கப்பட்டவுடன், அந்த விவாக அதிகாரி அது பற்றிய அத்தாட்சிப் பத்திரம் **(Certificate)** ஒன்றை, நான்காவது ஷெட்யூலில் குறிப்பிட்டுள்ள நமூனுவில், இந்தக் காரியத்துக்காக அவரால் வைத்திருக்கப்பட வேண்டிய விவாக அத்தாட்சிப் புத்தகம் என்று சொல்லப்படும் புத்தகம் ஒன்றில் பதிவு செய்யவேண்டும். அந்த அத்தாட்சி, அந்த மணமக்கள்களாலும், அந்த மூன்று சாட்சிகளாலும் கையெழுத்திடப்பட வேண்டும்.

(2) ஒரு அத்தாட்சி, அந்த விவாக அதிகாரியால் அந்த விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டவுடன் அந்த அத்தாட்சியானது, ஒரு விவாகம் இந்தச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்டிருக்கிறது என்பதற்கும், சாட்சிகளின் கையெழுத்துகள் சம்பந்தமாக எல்லா நடைமுறைகளும் அனுசரிக்கப்பட்டிருக்கின்றன என்பதற்கும் முடிவான சாட்சியமாகக் கருதப்பட வேண்டும்.

14. விவாகம் மூன்று மாதங்களுக்குள் நிறைவேற்றி வைக்கப் படாமற் போனுல் புதிய அறிவிப்பு:—ஒரு விவாகம் பற்றிய அறிவிப்பு 5-வது பிரிவில் கூறப்பட்டுள்ளபடி விவாக அதிகாரிக்கு அனுப்பப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அல்லது 8-வது பிரிவு (2)-வது உப-பிரிவின் கீழ் ஒரு அப்பீல் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் விஷயத்தில், அந்த அப்பீலின் மீது ஜில்லா கோர்ட் தீர்ப்புக் கூறிய தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள் அல்லது ஒரு விவாகம் பற்றிய தஸ்தாவேஜு 10-வது பிரிவின் கீழ் மத்திய சர்க்காருக்கு அனுப்பப்பட்டிருந்த விஷயத்தில், மத்திய சர்க்கார் முடிவு செய்த தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், அந்த விவாகம் நிறைவேற்றி வைக்கப்படாதிருந்தால், அந்த விவாகம் சம்பந்தமான அறிவிப்பும், அதையொட்டி ஏற்பட்ட மற்றெல்லா நடவடிக்கைகளும், காலாவதியாகி விட்டதாகக் கருதப்படும். இந்தச் சட்டத்தில் விதிக்கப்பட்டுள்ள பிரகாரம் புதிதாக ஒரு அறிவிப்பு கொடுக்கப்பட்டிருந்தாலொழிய எந்த விவாக அதிகாரியும் அந்த விவாகத்தை நிறைவேற்றி வைக்கக்கூடாது.

அத்தியாயம் 3

வேறு முறைகளில் நடத்தி வைக்கப்பட்ட விவாகங்களைப் பதிவு செய்தல்

15. வேறு முறைகளில் நடத்தி வைக்கப்பட்ட விவாகங்களைப் பதிவு செய்தல்.—1872-ம் வருஷத்து விவாகச் சட்டத்தின் கீழ் (1872-ம் வருஷத்து 3-வது சட்டம்) அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்ட ஒரு விவாகத்தைத் தவிர, இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன்னரோ அல்லது பிறகோ நடத்தி வைக்கப்பட்ட எந்த விவாகமும், பின்வரும் நிபந்தனைகள் பூர்த்தி செய்விக்கப் பட்டிருந்தால் இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களிலுள்ள ஒரு விவாக அதிகாரியால் இந்த அத்தியாயத்தின் கீழ் பதிவு செய்யப்படலாம். அந்த நிபந்தனைகளாவன.—

(a) அந்த நபர்களுக்கிடையே விவாக சடங்கொன்று செய்விக்கப் பட்டிருந்து அது முதல் அவர்கள் கணவனும் மனைவியுமாக கூடி வாழ்ந்து வந்திருக்க வேண்டும்;

(b) பதிவு செய்யப்படும் காலத்தில் அவர்களில் எவருக்கும் உயிரோடுள்ள ஒன்றுக்கு மேற்பட்ட கணவராவது மனைவியாவது இருக்கக்கூடாது;

(c) பதிவு செய்யப்படும் காலத்தில் அவர்களில் எவரும் முட்டாளாகவாவது, பயித்தியக்காரராகவாவது இருக்கக் கூடாது;

(d) பதிவு செய்யப்படும் காலத்தில் அவர்கள் இருபத்தொரு வயது பூர்த்தியடைந்தவர்களாக இருக்க வேண்டும்.

(e) அவர்கள் தடுக்கப்பட்ட உறவு முறைக்குட்பட்டவர்களாக இருக்கக்கூடாது.

ஆனால், இந்தச் சட்டம் தொடங்கியதற்கு முன்னால் நடத்தப்பட்டதான ஒரு விவாக விஷயத்தில் இந்த நிபந்தனை, அவ்விருவருக்குமிடையே விவாகத்தை அனுமதிக்கும் எந்த ஒரு சட்டம், அல்லது அவர்கள் ஒவ்வொருவரையும் கட்டுப்படுத்துவதும் ஒரு சட்டத்துக்குள்ள அதிகாரம் கொண்டதுமான ஆசாரம் அல்லது வழக்கத்துக்கு உட்பட்டதாக இருக்கும்;

(f) அவர்கள் விவாகத்தைப் பதிவு செய்து கொள்வதற்காக ஒரு விவாக அதிகாரியிடம் விண்ணப்பம் செய்து கொள்ளும் தேதிக்கு உடன் முன்னால் முப்பது நாட்களுக்குக் குறையாததொரு காலத்துக்கு அந்த விவாக அதிகாரியின் ஜில்லாவுக்குள் வசித்து வந்திருப்பவர்களாக இருக்க வேண்டும்.

16. பதிவு செய்வதற்கான நடைமுறை—இந்த அத்தியாயத்தின் கீழ் தங்கள் விவாகத்தைப் பதிவு செய்ய வேண்டுமென்று கேட்டு அந்த விவாகத்தில் சம்பந்தப்பட்ட இரு நபர்களும் கையெழுத்திட்ட விண்ணப்பம் கிடைக்கப் பெற்றவுடன் அந்த விவாக அதிகாரி, அது பற்றி நிர்ணயிக்கப்படக் கூடிய முறைப்படி பொது அறிவிப்பு ஒன்றை வெளியிடுவார். ஆட்சேபணைகளுக்கு முப்பது நாள் அவகாசம் அளித்த பிறகு, அந்தக் காலத்துக்குள் கிடைக்கப் பெற்ற ஆட்சேபணை ஏதாவது இருந்தால் அதைப் பற்றி விசாரணை செய்த பிறகு, 15-வது பிரிவில் கூறப்பட்ட எல்லா நிபந்தனைகளும் பூர்த்தி செய்விக்கப்பட்டுள்ளன என அவர் திருப்தியடைந்தால், 5-வது ஷெட்யூலில் குறிப்பிடப் பட்டுள்ள நமூனுவின்படி விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் ஒரு விவாக அத்தாட்சியைப் பதிவு செய்ய வேண்டும். அந்த அத்தாட்சி அந்த விவாகம் சம்பந்தப்பட்ட இரு நபர்களாலும் மூன்று சாட்சிகளாலும் கையெழுத்திடப்பட வேண்டும்.

17. 16-வது பிரிவின் கீழ்வரும் உத்தரவுகளின்மீது அப்பீல், இந்த அத்தியாயத்தின் கீழ் ஒரு விவாகத்தைப் பதிவு செய்ய மறுத்து விவாக அதிகாரியொருவர் கொடுக்கும் ஒரு உத்தரவினுல் பாதிக்கப்பட்ட எந்த நபரும், அந்த உத்தரவை எதிர்த்து, அந்த உத்தரவின் தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள், எந்த ஜில்லா கோர்ட்டின் அதிகாரத்துக்குட்பட்ட ஸ்தல எல்லைகளுக்குள் அந்த விவாக அதிகாரியின் காரியாலயம் இருக்கிறதோ அந்த ஜில்லா கோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொள்ளலாம். அந்த அப்பீலின் மீது, அந்த ஜில்லாக் கோர்ட்டு செய்யும் முடிவே இறுதியானதாக இருக்கும்; அந்த விண்ணப்பம் எந்த விவாக அதிகாரியிடம் செய்யப்பட்டதோ அந்த அதிகாரி அந்த முடிவையொட்டி நடந்து கொள்ள வேண்டும்.

18. இந்த அத்தியாயத்தின் கீழ் விவாகத்தைப் பதிவு செய்வதனுல் ஏற்படும் பலன்.—24-வது பிரிவின் (2)-வது உட்பிரிவில் அடங்கியுள்ள ஷரத்துக்களுக்குட்பட்டு, இந்த அத்தியாயத்தின் கீழ் விவாக அத்தாட்சியொன்று விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் இறுதியாகப் பதிவு செய்யப்பட்டிருந்தால், அந்த விவாகம், அவ்வாறு பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து, இந்தச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்ட ஒரு விவாகமாகக் கருதப்பட வேண்டும், விவாகச் சடங்கு நடைபெற்ற தேதிக்குப் பிறகு பிறந்த எல்லாக் குழந்தைகளும் (இந்தக் குழந்தைகளின் பெயர்களும் விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட

வேண்டும்) எல்லா விஷயங்களிலும் அவர்களுடைய பெற்ருேருக்கு முறைப்படியாகப் பிறந்த குழந்தைகளாக இருப்பதாகவும், எப்போதுமே அவ்வாறு இருந்துவந்திருப்பதாகவும் கருதப்படவேண்டும்.

ஆனுல், அத்தகைய குழந்தைகளுக்கு, இந்தச் சட்டம் நிறைவேற்றப் படாதிருந்தால், தங்களுடைய பெற்ருேர்களுக்கு முறைப்படியாகப் பிறந்த குழந்தைகளாக இராத காரணத்தால், அவர்களின் பெற்ருேர்கள் தவிர வேறு எந்த ஒரு நபருடைய சொத்திலும் அல்லது சொத்துக்கும் அவர்கள் எத்தகைய உரிமைகளும் சுவாதீனம் செய்து கொள்ள, அல்லது அடைந்திருக்க முடியாதோ, அத்தகைய உரிமைகள் எதையும், இந்தப் பிரிவில் கண்டுள்ளதெதுவும் அக்குழந்தைகளுக்கு அளிப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக்கூடாது.

அத்தியாயம் 4

இந்தச் சட்டத்தின்கீழ் வரும் விவாகங்களின் பின் விளைவுகள்

19. அவிபக்த குடும்பத்தைச் சேர்ந்தவர் ஒருவரை, இந்த விவாகம் எவ்வாறு பாதிக்கிறதென்பது—ஹிந்து மதம், பௌத்த மதம், சீக்கிய மதம் அல்லது ஜைன மதத்தைச் சேர்ந்த பிரிவினையாகாத குடும்பம் ஒன்றைச் சேர்ந்த நபர் ஒருவர் இந்தச் சட்டத்தின்கீழ் செய்துகொள்ளும் விவாகமானது அந்தக் குடும்பத்திலிருந்து அவரைத் துண்டித்து விடுவதாகக் கொள்ளப்பட வேண்டும்.

20 சட்டத்தால் பாதிக்கப்படாத உரிமைகளும், இடையூறுகளும்—19-வது பிரிவில் கண்டுள்ள ஷரத்துக்களுக்குட்பட்டு, இந்தச் சட்டத்தின்கீழ் விவாகம் நிறைவேற்றப்பட்டுள்ள எந்த ஒரு நபருக்கும், எந்தச் சொத்துக்கும் வாரிசாக வரும் உரிமை சம்பந்தப்பட்ட வரையில், 1850-ம் வருஷத்து ஜாதித் தடைகள் நீக்கச் சட்டம் (1850-ம் வருஷத்து 21-வது சட்டம்) பிரயோகமாகிற நபர் ஒருவருக்கு உள்ளதைப் போன்ற அதே உரிமைகள் கொண்டவராகவும் அதே போன்ற தடைகளுக்கு உட்பட்டவராகவும் இருப்பார்.

21. இந்தச் சட்டத்தின்கீழ் விவாகம் செய்துகொண்ட தம்பதிகளின் சொத்துக்கு வாரிசு—1925-ம் வருஷத்து இந்திய வாரிசுச் சட்டத்தில் (1925-ம் வருஷத்து 39-வது சட்டம்) குறிப்பிட்ட சில சமூகங்களைச் சேர்ந்த நபர்கள் விஷயத்தில் அந்தச் சட்டப் பிரயோகம் சம்பந்தமாக எத்தகைய கட்டுப்பாடுகள் அடங்கி

யிருந்த போதிலும், இந்தச் சட்டத்தின்கீழ் விவாகம் நிறை வேற்றி வைக்கப்பட்டிருக்கிற எந்த் ஒரு நபருடைய சொத்துக் கும் அத்தகைய விவாகத்தின் மூலமாகப் பிறந்த குழந்தையின் சொத்துக்கும் வாரிசு வருவது, மேற்கூறப்பட்ட அந்தச் சட்டத் தின் பிரகாரமே ஒழுங்குபடுத்தப்படும். இந்தப் பிரிவின் காரி யங்களுக்கு, அந்தச் சட்டம் 5-வது பாகத்தின் 3-வது அத்தியா யம் (உயில் வைக்காமல் இறந்துபோகும் பார்சிக்காரர்களுக்கான விசேஷ விதிகள்) அந்தச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டிருந்தால் எப்படியோ அப்படி அமுலாகும்.

அத்தியாயம் 5

தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதும் சட்ட பூர்வமாகப் பிரித்துவிடுவதும்

22. தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப் பது.—கணவராவது மனைவியாவது, நியாயமான காரணமின்றி ஒருவர் மற்றொருவருடைய சேர்க்கையினின்றும் விலகிவிட்டி ருந்தால், பாதிக்கப்பட்ட நபர் தாம்பத்திய உரிமைகளை மீண் டும் ஏற்படுத்திக் கொடுக்கும்படி, ஜில்லாக் கோர்ட்டுக்கு மனு மூலமாக விண்ணப்பம் செய்துகொள்ளலாம். அந்த மனுவில் சொல்லப்பட்டுள்ள விஷயங்கள் உண்மையானவையென்றும், அந்த விண்ணப்பத்தை அனுமதிக்கக் கூடாதென்பதற்குச் சட்ட ரீதியான காரணம் எதுவுமில்லையென்றும் சந்தேகமறத் தெரிந்து கொண்ட பிறகு அந்தக் கோர்ட்டு தாம்பத்திய உரிமைகளை அப் படியே மீண்டும் ஏற்படுத்திக் கொடுக்க டிக்ரி பிறப்பிக்கலாம்.

23 சட்ட பூர்வமாகப் பிரிந்து போவது.—(1) கணவரா வது மனைவியாவது அடியிற் கண்ட காரணத்தினால் சட்ட பூர்வ மாகப் பிரிந்து போக ஜில்லாக் கோர்ட்டுக்கு மனுச் செய்து கொள்ளலாம்,

(a) 27-வது பிரிவில் குறிப்பிட்டுள்ள காரணங்களில் ((i), (j) ஷரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள காரணங்கள் நீங்க லாக), விவாக ரத்துக்கான மனு ஒன்று கொடுத்திருக்கப்படக் கூடிய எந்த ஒரு காரணத்தின் பேரிலும், அல்லது

(b) தாம்பத்திய உரிமையை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதான டிக்ரி ஒன்றுக்குக் கீழ்ப்படியத் தவறிவிட்ட காரணத்தின் பேரில்;

அத்தகைய மனுவில் கண்டுள்ள வாக்குமூலங்கள் உண்மை யானவையென்றும், அந்த விண்ணப்பத்தை அனுமதிக்கக்கூடா

தென்பதற்குச் சட்ட ரீதியான காரணம் எதுவுமில்லையென்றும் தெரிந்துகொண்ட பிறகு அந்தக் கோர்ட்டு அப்படியே சட்ட பூர்வமாகப் பிரிந்து போக டிக்ரி பிறப்பிக்கலாம்.

(2) சட்ட பூர்வமாகப் பிரிந்துவிடுவதற்கான ஒரு டிக்ரியை அந்தக் கோர்ட்டு பிறப்பித்துவிட்டால், மனுதாரர் பிரதிவாதியுடன் அதன்பின் கூடி வாழவேண்டுமென்ற நிர்ப்பந்தம் கிடையாது. ஆனால் அந்த தம்பதிகளில் ஒருவர் மனு மூலமாக, அந்த கோர்ட்டுக்கு விண்ணப்பம் செய்துகொண்டால், அந்தக் கோர்ட்டு, அந்த மனுவில் சொல்லப்பட்டிருக்கிற விஷயங்களின் உண்மைபற்றி திருப்தியடைந்திருந்து, டிக்ரியை ரத்து செய்வது நேர்மையென்றும் நியாயமென்றும் கருதினால், அந்த டிக்ரியை அந்தக் கோர்ட்டு ரத்து செய்யலாம்.

அத்தியாயம் 6

விவாகத்தையும் விவாக ரத்தையும் செல்லாதவையாக்குவது

24. செல்லாத விவாகங்கள்.—(*1*) இந்தச் சட்டத்தின்கீழ் நிறைவேற்றிவைக்கப்பட்ட எந்த விவாகமும்,

(i) 4-வது பிரிவின் (a), (b), (c), (d) ஷரத்துக்களில் குறிப்பிட்ட நிபந்தனைகளில் எந்த ஒன்றும் பூர்த்தி செய்விக்கப்படாமலிருந்தால்; அல்லது

(ii) எதிர் மனுதார் விவாகம் நடைபெற்ற போதும், வழக்குத் தாக்கல் செய்யப்பட்ட சமயத்திலும் நபும்சகராக இருந்தால்,

செல்லாததாகிவிடும்; செல்லத்தகாததாக்கும் ஒரு டிக்ரியின் மூலம் அவ்வாறு அறிவிக்கப்படலாம்.

(2) இந்தப் பிரிவில் கண்டுள்ள எதுவும் இந்தச் சட்டத்தின்கீழ் 18-வது பிரிவின் பொருளுக்குட்பட்டு நிறைவேற்றி வைக்கப்படும் எந்த ஒரு விவாகத்துக்கும் பிரயோகமாகாது. ஆனால் 15-வது பிரிவின் (a)யிலிருந்து (e வரையுள்ள ஷரத்துக்களில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை மீறியதாக இருந்தால், அத்தகைய விவாகம் எதுவும் (23-வது அத்தியாயத்தின்கீழ் பதிவு செய்யப்பட்டது) பலனற்றதாக அறிவிக்கப்படலாம். ஆனால், 17-வது பிரிவின்கீழ் அப்பீல் ஒன்று செய்துகொள்ளப்பட்டிருந்து, ஜில்லாக் கோர்ட்டின் முடிவு இறுதியானதாக ஆகிவிட்டிருந்த எந்த ஒரு விஷயத்திலும் அத்தகையதொரு அறிவிப்பு செய்யப்படக் கூடாது.

25. செல்லாமல் போகத்தக்க விவாகங்கள்.—இந்தச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றப்பட்ட எந்த ஒரு விவாகமும்,

(i) விவாகத்தைப் பூர்த்தி செய்து வைக்க எதிர் மனுதார் வேண்டுமென்றே மறுத்து வந்தது காரணமாக அந்த விவாகம் பூர்த்தி செய்யப்படாமலிருந்தால், அல்லது,

(ii) எதிர் மனுதார் விவாக காலத்தில் மனுதாரர் அல்லாத வேறு ஒரு நபரால் கர்ப்பமாகியிருந்தால், அல்லது,

(iii) தம்பதிகளில் ஒருவருடைய சம்மதமானது, *1872*-ம் வருஷத்து இந்திய ஒப்பந்தச் சட்டத்தில் (*1872*-ம் வருஷத்து *9*-வது சட்டம்) விவரிக்கப்பட்டபடி, பலவந்தமாகவோ, மோசடியாகவோ பெறப்பட்டிருந்தால்,

செல்லத் தகாததாகச் செய்யப்படத் தக்கதாகும். செல்லத் தகாததாக்கும் ஒரு டிக்ரியின் மூலம் ரத்து செய்யப்படலாம். ஆனால், (ii)-வது ஷரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விஷயத்தில்,

(a) மனுதாரர் புகார் செய்துள்ள விஷயங்கள் பற்றி விவாக காலத்தில் அறிந்திருக்கவில்லை யென்றும்;

(b) விவாகம் நடைபெற்ற தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குள் நடவடிக்கை தொடரப்பட்டுள்ள தென்றும்.

(c) ஒரு டிக்ரி பிறப்பிக்கப்படுவதற்கான காரணங்கள் இருப்பதை மனுதாரரால் கண்டுபிடிக்கப்பட்ட பிறகு மனுதாரரின் சம்மதத்தின் பேரில் கணவனுக்குரிய ஊடாட்டம் நடைபெற்றிருக்க வில்லை யென்றும்,

கோர்ட்டு திருப்தியடைந்தாலொழிய ஒரு டிக்ரியைப் பிறப்பிக்கக் கூடாது. ஆனால் மேலும், (iii)-வது ஷரத்தில் குறிப்பிடப் பட்டுள்ளதொரு விஷயத்தில்,

(a) அந்த பலவந்தம் அற்றுப் போனபிறகு அல்லது சந்தர்ப்பத்துக் கேற்ப அந்த மோசடி சண்டுபிடிக்கப்பட்ட பிறகு, ஒரு வருஷ காலத்துக்குள் நடவடிக்கை தொடரப்பட்டிராமலிருந்தாலும், அல்லது,

(b) அந்த பலவந்தம் அற்றுப் போன பிறகு அல்லது சந்தர்ப்பத்துக் கேற்ப அந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, மனுதாரர் தமது சுயேச்சையான சம்மதத்துடன், அந்த விவாக தம்பதிகளில் மற்றவருடன் கணவரும் மனைவியுமாக வாழ்ந்திருந்தாலும், அந்தக் கோர்ட்டு ஒரு டிக்ரியை வழங்கக் கூடாது.

26. செல்லாத விவாகங்கள் மூலமாகவும், செல்லாமல் போகத் தக்க விவாகங்கள் மூலமாகவும் பிறந்த குழந்தைகள் கிரமப்படி பிறந்தவர்கள் ஆவது—எந்த ஒரு விவாகம் சம்பந்தமாகவாவது, அவ்விவாகம் செல்லாததென அறிவிக்கும் டிக்ரி ஒன்று 24-வது அல்லது 25 வது பிரிவின் கீழ் கொடுக்கப்படுகிறபோது, அந்த டிக்ரி கொடுக்கப்பட்டதற்கு முன்னால் பிறந்ததும் அந்த விவாக மானது செல்லாததாக ஆக்கும் டிக்ரி ஒன்றினால் ரத்து செய்யப் பட்டதற்குப் பதிலாக அல்லது செல்லாததென அறிவிக்கப் பட்டதற்குப் பதிலாக கலைத்துவிடப்பட்டிருக்குமானால், அந்த தம்பதிகளுக்கு, முறைப்படி பிறந்ததாக இருந்திருக்கக்கூடியது மான எந்த ஒரு குழந்தையும், விவாகம் செல்லாததாக ஆக்கும் டிக்ரி கொடுக்கப்பட்டிருந்த போதிலும், அவர்களுக்கு முறைப் படிப் பிறந்த குழந்தையாகவே கருதப்பட வேண்டும்.

ஆனால், டிக்ரி ஒன்றினால் ரத்து செய்யப்பட்டிருக்கிற அல்லது செல்லாததென அறிவிக்கப்பட்டிருக்கிற ஒரு விவாகம் மூலமாய் பிறந்த ஒரு குழந்தை, இந்தச் சட்டம் நிறைவேற்றப் படாதிருக்குமானால், தனது பெற்றோர்களுக்கு முறைப்படியாகப் பிறந்த குழந்தையாக இராதது காரணமாக அதன் பெற்றோர்கள் தவிர வேறு எந்த ஒரு நபருடைய சொத்திலும் அல்லது சொத்துக்கும் எத்தகைய உரிமைகளும் சுவாதீனம் செய்து கொள்ளவோ அல்லது அடைந்திருக்கவோ முடியாதோ, அத் தகைய உரிமைகள் எவற்றையும் இந்தப் பிரிவில் கண்டுள்ளது எதுவும் அக்குழந்தைக்கு அளிப்பதாக அர்த்தப்படுத்திக் கொள்ளக் கூடாது.

27. விவாக ரத்து.—இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களுக்குட் பட்டும், இந்தச் சட்டத்தின் கீழ் செய்யப்படும் விதிகளுக்குட் பட்டும். கணவரோ அல்லது மனைவியோ, கீழ்க்கண்ட காரணங் களில் ஏதேனுமொன்றை ஆதரவு காட்டி விவாக ரத்து கோரும் மனு ஒன்றை ஜில்லா கோர்ட்டிடம் சமர்ப்பிக்கலாம்—அவை யாவன.

(a) எதிர் மனுதார், விவாகம் நிறைவேற்றப்பட்ட பிறகு சோரம் செய்திருக்கிறார்; அல்லது,

(b) எதிர் மனுதார், அந்த மனு கொடுக்கப்பட்டதற்கு உடன் முன்னால் குறைந்தது மூன்று வருஷங்களுக்கேனும், காரணமின்றி மனுதாரரைக் கைவிட்டிருக்கிறார், அல்லது,

(c) எதிர் மனுதார் இந்தியன் பீனல் கோடில் (1860-ம் வருஷத்து 45-வது சட்டம்) விவரிக்கப்பட்டுள்ள குற்றம் ஒன்றிற்காக ஏழு வருஷங்களுக்கோ அதற்கு அதிகமான காலத் துக்கோ சிறை தண்டனை அனுபவித்து வருகிறார்;

ஆனால் மேற்கூறப்பட்ட ஏழு வருஷ காலத்தில் குறைந்தது மூன்று வருஷ சிறை வாசத்தையேனும் அந்த மனு கொடுக்கப்பட்டதற்கு முன்னால் எதிர் மனுதாரர் அனுபவித்திருந்தாலொழிய, இந்தக் காரணத்தின் பேரில் விவாக ரத்து அனுமதிக்கப்படக் கூடாது; அல்லது,

(d) எதிர் மனுதாரர், அந்த விவாகம் நிறைவேற்றப்பட்ட பிறகு மனுதாரரைக் கொடுமைப்படுத்தி வந்திருக்கிறார்; அல்லது,

(e) அந்த மனு கொடுக்கப்பட்டதற்கு உடன் முன்னால் மூன்று வருஷங்களுக்குக் குறையாத காலத்துக்கு தொடர்ச்சியாக திராத சித்த சுவாதீனமற்றவராக இருந்திருக்கிறார்; அல்லது,

(f) மனுச் செய்து கொண்டதற்கு உடன் முந்திய மூன்று வருஷங்களுக்குக் குறையாத காலத்துக்கு தொத்திக் கொள்ளத் தக்க மேக வியாதியால், எதிர் மனுதாரர் பீடிக்கப்பட்டிருந்திருக்கிறார் (அந்த வியாதி மனுதாரரிடமிருந்து அவருக்கு வந்ததாக இருக்கக் கூடாது) அல்லது,

(g) மனுச் செய்து கொண்டதற்கு உடன் முந்திய மூன்று வருஷங்களுக்குக் குறையாத காலத்துக்கு எதிர் மனுதாரர், குஷ்டரோகத்தினால் பீடிக்கப்பட்டிருந்திருக்கிறார் (இந்த ரோகம் மனுதாரரிடமிருந்து அவருக்கு வந்ததாக இருக்கக் கூடாது) அல்லது,

(h) எதிர் மனுதாரர் உயிரோடிருந்தால் அதைப்பற்றி எந்த நபர்கள் இயற்கையாகவே கேள்விப்பட்டிருப்பார்களோ அந்த நபர்கள், அவர் உயிரோடிருப்பதாக ஏழு வருஷம் அல்லது அதற்கு மேற்பட்ட காலம் வரையில் கேள்விப்படவில்லை. அல்லது

(i) சட்ட ரீதியாய்ப் பிரிந்து போக எதிர் மனுதாரருக்கு விரோதமாக ஒரு டிக்ரி கொடுக்கப்பட்ட பிறகு இரண்டு வருஷ காலத்துக்காவது அல்லது அதற்கு மேற்பட்டாவது கூடி வாழ்வதை மீண்டும் தொடங்கவில்லை. அல்லது

(j) தாம்பத்திய உரிமைகளை மீண்டும் ஏற்படுத்திக் கொடுப்பதற்கான ஒரு டிக்ரி எதிர் மனுதாரருக்கு விரோதமாகக் கொடுக்கப்பட்ட பிறகு அந்த எதிர் மனுதாரர் இரண்டு வருஷ காலத்துக்கோ அதற்கு மேற்பட்டோ அதற்கு இணங்க மறுத்து விட்டார்,

விவாகம் ஆன பிறகு கணவர் பலாத்காரமாய் கற்பழிக்கும் அல்லது பும்மைதுன அல்லது மிருக வெறி இச்சை கொண்ட குற்றம் செய்திருக்கிறூர் என்ற காரணத்தின்பேரில் மனைவி மனுக் கொடுத்துக் கொள்ளலாம்.

28. பரஸ்பர சர்மதக்தின்பேரில் விவாக ரத்து—*(1)* இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களுக்கும் இந்தச் சட்டத்தின் கிழ் செய்யப்பட்ட விதிகளுக்கும் உட்பட்டு கணவரும் மனைவியும் ஒன்ருகச் சேர்ந்து, தாங்கள் ஒரு வருஷ காலத்துக்கு அல்லது அதற்கு மேற்பட்டு தனியாகப் பிரிந்து வாழ்ந்து வந்திருப்பதாகவும், தாங்கள் இருவரும் கூடி வாழ முடியவில்லையென்றும், விவாகம் கலைக்கப்பட்டு விடவேண்டுமென்று தாங்கள் இருவரும் பரஸ்பரம் சம்மதித்திருப்பதாகவும் காரணம் காட்டி, விவாக ரத்துக்கான மனு ஒன்றை ஜில்லாக் கோர்ட்டுக்கு சமர்ப்பிக்கலாம்.

2. (1)-வது உட்பிரிவில் பிரஸ்தாபிக்கப்பட்ட மனு கொடுக்கப்பட்ட தேதியிலிருந்து ஒரு வருஷத்துக்குக் குறையாத காலத்துக்குப் பிறகு அந்தத் தேதியிலிருந்து இரண்டு வருஷ காலத்துக்குள், இந்த இடைக் காலத்தில் அந்த மனு வாபஸ் வாங்கிக் கொள்ளப்படாதிருந்தால், கணவர் மனைவி இருவரும் செய்து கொள்ளும் விண்ணப்பத்தின் பேரில், அந்த ஜில்லாக் கோர்ட்டு அவ்விருவருடைய விண்ணப்பங்களையும் கேட்ட பிறகு, தனக்குச் சரி யென்று தோன்றுகிறபடி விசாரணை நடத்திய பிறகு, அந்த விவாகம் இந்தச் சட்டத்தின் கிழ் நிறைவேற்றப்பட்டதென்றும், மனுவில் கூறப்பட்டுள்ள புகார்கள் உண்மையே என்றும் திருப்தி யடைந்ததன்பேரில் அந்த விவாகம் டிக்ரி கொடுக்கப்படும் தேதியிலிருந்து கலைக்கப்பட்டு விட்டதாக அறிவித்து ஒரு டிக்ரி பிறப்பிக்கவேண்டும்.

29. விவாகமான மூன்று வருஷங்களுக்குள் விவாக ரத்துக்கு மனுச் செய்துகொள்ளக் கூடாது *(1)* மனுச் செய்துகொள்ளும் தேதியன்று, விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் விவாக அத்தாட்சி பதிவு செய்யப்பட்ட தேதியிலிருந்து மூன்று வருஷம் கழிந்திருந்தாலொழிய விவாக ரத்துக்கான மனு எதுவும் கொடுக்கப்படக் கூடாது.

ஆனல், பிரஸ்தாப விஷயம் மனுதாரருக்குப் பெரிதும் துன்பம் தருவதாயிருக்கின்றது அல்லது எதிர் மனுதாரர் மோசமான கெட்ட நடத்தையுள்ளவராயிருக்கின்ரூர் என்னும்

காரணத்தினுல், மூன்று வருஷங்கள் கழிவதற்கு முன்பே ஒரு மனுவைக் கொடுப்பதற்கு ஜில்லாக் கோர்ட்டு அனுமதிக்கலாம். ஆனுல் அந்தக் கோர்ட்டு அந்த மனுவை விசாரிக்கையில், பிரஸ்தாப விஷயத்தின் தன்மையைக் குறித்து மனுதாரர், தவறுதலாகச் சொல்லியோ அல்லது மறைத்தோ, அந்த மனுவைக் கொடுத்துக் கொள்வதற்கு அனுமதி பெற்றிருக்கிருர் என அக் கோர்ட்டு அபிப்பிராயப்பட்டால், அந்தக் கோர்ட்டு டிக்ரி ஒன்றைப் பிறப்பிப்பதாயிருந்தால், விவாகத் தேதியிலிருந்து மூன்று வருஷம் கடந்து போகிறவரையில் அந்த டிக்ரி அமுலுக்கு வரக் கூடாதென்னும் நிபந்தனைக்குட்பட்டு அவ்வாறு டிக்ரி பிறப்பிக்கலாம்; அல்லது தள்ளிவிடப்பட்ட அந்த மனுவுக்கு ஆதாரமாக ருசுப்பிக்கப்பட்ட அதே விஷயங்களைக்கொண்டு, அல்லது சாராம்சத்தில் அதே விஷயங்களைக் கொண்டு, மேற்கூறப்பட்ட மூன்று வருஷம் கழிந்த பிறகு செய்துகொள்ளப்படக்கூடிய எந்த ஒரு மனுவுக்கும் பாதகமில்லாதபடி, அந்த மனுவைத் தள்ளி விடலாம்.

(2) விவாகத் தேதியிலிருந்து மூன்று வருஷம் கழிவதற்கு முன்னுல் விவாக ரத்துக்கான மனு ஒன்றைக் கொடுக்க அனுமதி கோரிச் செய்துகொள்ளப்பட்ட எந்த ஒரு மனுவையும் பைசல் செய்கையில், அந்த விவாகம் மூலமாகப் பிறந்த குழந்தைகளின் நலனையும், மேற்கூறப்பட்ட மூன்று வருஷங்கள் கழிவதற்கு முன்னுல் தம்பதிகளிடையே சமரசம் ஏற்படுவதற்கு நியாயமான சாத்தியமெதுவும் இருக்கிறதா என்பதையும், அந்த ஜில்லாக் கோர்ட்டு கவனித்துப் பார்க்க வேண்டும்.

30. விவாக ரத்தான நபர்களின் மறுமணம்—விவாக ரத்து டிக்ரி மூலமாக ஒரு விவாகம் கலைக்கப்பட்டிருந்து, அந்த டிக்ரியை எதிர்த்து அப்பீல் செய்து கொள்ள உரிமை இல்லாதிருந்தாலும், அல்லது அப்பீல் செய்து கொள்வதற்கு அத்தகைய உரிமையொன்று இருந்து அப்பீல் ஒன்று செய்து கொள்ளப்படாமலேயே, அப்பீல் செய்து கொள்வதற்கான காலம் கடந்து போயிருந்தாலும், அல்லது ஒரு அப்பீல் செய்து கொள்ளப்பட்டிருந்து அது தள்ளி விடப்பட்டிருந்து அதற்குப் பிறகு ஒரு வருஷம் கழிந்து போயிருந்தாலும் அந்த விவாக தம்பதிகளில் எவரும் மீண்டும் விவாகம் செய்து கொள்ளலாம்.

அத்தியாயம் 7

31. மனுக் கொடுக்கப்படவேண்டிய கோர்ட்டு.—(1) அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6-ன்கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும், எந்த ஜில்லாக் கோர்ட்டின் அதிகாரத்துக்குட்பட்ட ஸ்தல எல்லைகளுக்குள் விவாகம் நிறைவேற்றப்பட்டதோ அல்லது கணவரும் மனைவியும் வசித்துவருகிறார்களோ அல்லது கடைசியாக சேர்ந்து வசித்தார்களோ அந்த ஜில்லாக் கோர்ட்டுக்கே கொடுக்கப்படவேண்டும்.

(2) (1)-வது உட்பிரிவின்கீழ் அந்தக் கோர்ட்டு செலுத்தக்கூடிய அதிகாரம் எதையும் பாதிக்காமல், அந்த ஜில்லாக் கோர்ட்டு, இந்த உட்பிரிவின் மூலம் அதற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின்கீழ், இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களைத் தாயகமாகக் கொண்டுள்ள மனைவி யொருவரிடமிருந்து, இந்தப் பிரதேசங்களில் அவர் வசித்து வருபவராகவும், மனுக்கொடுக்கப்பட்டதற்கு முன்னால் மூன்றுவருஷ காலத்துக்கு இந்தப்பிரதேசங்களில் சாதாரணமாக வசித்து வந்துள்ளவராகவும் இருந்து, கணவர் இந்தப் பிரதேசங்களில் வசித்துவராமலிருந்தாலும், விவாகத்தை செல்லாததாக்குவதற்கு அல்லது ரத்து செய்வதற்காக கொடுக்கும் ஒரு மனுவை ஏற்றுக்கொள்ளலாம்.

32 மனுவில் கூறப்படவேண்டிய விஷயங்களும், மனுக்களைச் சரிபார்த்தலும். (1) அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6-ன்கீழ் கொடுக்கப்படும் ஒவ்வொரு மனுவும், பரிகாரம் கோருவதற்கு ஆதாரமாகக் கொண்டுள்ள விஷயங்களை வழக்கின் தன்மை அனுமதிக்கிற அளவுக்குத் தெளிவாக எடுத்துக் கூறவேண்டும்; மேலும் மனுதாரருக்கும் அந்த விவாக தம்பதிகளில் மற்றவருக்குமிடையே ரகசிய சம்பந்தம் எதுவும் இல்லையெனவும் அந்த மனுவில் கூறப்பட்டிருக்கவேண்டும்.

(2) அத்தகைய ஒவ்வொரு மனுவிலும் கண்டுள்ள வாக்குமூலங்களை, பிராதுகளைச் சரிபார்ப்பதற்குச் சட்டத்தில் சொல்லப்பட்டுள்ள விதமாக, மனுதாரர் அல்லது தகுதி வாய்ந்த வேறொரு நபர் சரிபார்க்க வேண்டும்; மேலும், விசாரணையின் போது அவை சாட்சியமாகக் குறிப்பிடப் படலாம்.

33 நடவடிக்கைகள் ரகசியமாக நடத்தப்படலாம்.—இந்தச் சட்டத்தின்படிக்கான ஒரு விசாரணை ரகசியமாக நடத்தப்படவேண்டுமென்று தம்பதிகளில் எவராகிலும் விரும்பினாலும்,

அல்லது அப்படிச் செய்வது சரியென ஜில்லாக் கோர்ட்டு கருதினாலும், அந்த விசாரணை நடவடிக்கை ரகசியமாக நடத்தப்பட வேண்டும்.

34. டிக்ரிகள் பிறப்பிப்பதில் கோர்ட்டின் கடமை—(1) அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6 ன்கீழ் வரும் எந்த ஒரு நடவடிக்கையிலும், அதற்குப் பிரதிவாதம் இருந்தாலும் இல்லாவிட்டாலும், அத்தகைய நடவடிக்கையிலே—

(a) பரிகாரமளிப்பதற்கான காரணங்களில் ஏதேனும் ஒன்று இருக்கின்றது என்றும்,

(b) மனுச் செய்துகொண்டதன் காரணம், விபசாரமாக இருந்து அதற்கு மனுதாரர் எந்த விதமாகவும் உடந்தையாயிருக்கவில்லையென்றும், அல்லது அதைக் கண்டும் காணாதது போலிருக்கவில்லையென்றும், அல்லது மன்னித்துவிடவில்லை என்றும், அல்லது மனுச் செய்துகொண்டதன் காரணம், கொடுமையாக நடத்தப்பட்டமை என்று சொல்லப்பட்டிருந்தால், மனுதாரர் அக்கொடுமையை எவ்விதமாகவேனும் மன்னிக்கவில்லையென்றும்,

(c) விவாக ரத்து பரஸ்பர சம்மதத்தின் பேரில் கோரப்படுவதாக இருந்தால், அந்த சம்மதம் பலவந்தமாகவோ, மோசடியாகவோ, அல்லது நியாயமற்ற செல்வாக்கை பிரயோகித்தோ பெறப்பட்டதல்ல என்றும்,

(d) அந்த மனு எதிர் மனுதாரருடன் ரகசிய சம்மதத்தின் பேரில் கொடுக்கப்பட்டதல்ல என்றும்,

(e) நடவடிக்கை தொடருவதில் அனாவசியமான அல்லது ஒழுங்கற்ற கால தாமதம் எதுவும் ஏற்படவில்லை என்றும்,

(f) பரிகாரம் அளிக்கக் கூடாதென்பதற்குச் சட்ட ரீதியான காரணம் வேறு எதுவும் இல்லையென்றும் கோர்ட்டு திருப்திப்பட்டால் அப்போது, அத்தகையதொரு விஷயத்தில் மாத்திரமே, அவ்வாறு பரிகாரம் அளித்து கோர்ட்டு டிக்ரி பிறப்பிக்கலாம்.

(2) இந்தச் சட்டத்தின் கீழ் நிவாரணம் எதுவும் கொடுக்கப் புகுவதற்கு முன்னால், வழக்கின் தன்மையையும், சூழ்நிலைமையையும் பொருத்து அவ்வாறு செய்வது சாத்தியமாக இருக்கிற ஒவ்வொரு வழக்கிலும் சம்பந்தப்பட்ட தரப்பினரிடையே சமரசத்தை ஏற்படுத்த எல்லா வகையிலும் முதலில் முயன்று பார்ப்பது அந்தக் கோர்ட்டின் கடமையாகும்.

35. விவாக ரத்துக்கான மனுவின்பேரில் எதிர் மனுதாரருக்குப் பரிகாரம்—விவாக ரத்துக்கான எந்த ஒரு நடவடிக்கையிலும் விண்ணப்பதாரர் விபசாரம் போனதாகவோ, கொடுமைப்படுத்தியதாகவோ அல்லது கைவிட்டுவிட்டதாகவோ, எதிர் மனுதாரர் காரணம் காட்டி அந்த மனுவில் கோரப்படுகிற பரிகாரத்தை எதிர்ப்பதாக இருந்தால் அந்த எதிர் மனுதாரர் அத்தகைய பரிகாரம் கோர ஒரு மனுக் கொடுத்திருந்தால் எந்த விதமானப் பரிகாரத்தைப் பெற அவருக்கு உரிமை இருந்திருக்குமோ அதே பரிகாரத்தை அந்த எதிர் மனுதாரருக்கு கோர்ட்டு அளிக்கலாம்.

36. வழக்கின் முடிவு தெரியும் வரையில் ஜீவனும்சம்.—அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6-ன்கிழ் வரும் எந்த நடவடிக்கையிலும் மனைவிக்கு தமது ஜீவனத்துக்கும் நடவடிக்கைக்குப் பிடிக்கும் அவசியமான செலவுகளுக்கும் தனிப்பட்ட வருமானம் எதுவுமில்லையென்றும் கோர்ட்டுக்குத் தோன்றினால், அந்த மனைவி விண்ணப்பம் செய்துகொண்டதன் பேரில், நடவடிக்கைக்குப் பிடிக்கும் செலவுகளையும் கணவரின் வருமானத்தைப் பொறுத்து நியாயமானதென்றும் கோர்ட்டுக்குத் தோன்றுகிற ஒரு தொகையை வாரா வாரமோ அல்லது மாதா மாதமோ கணவர் அந்த மனைவிக்குக் கொடுத்து வரவேண்டுமென்று ஜில்லா கோர்ட்டு உத்தரவிடலாம்.

37 நிலையான மொத்த ஜீவனும்சமும் குறிந்த காலத்துக்கொருமுறை கொடுக்கப்படுகிற ஜீவனும்சமும் :—(1) அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6-ன் கிழ் அதிகாரம் செலுத்துகிற எந்தக் கோர்ட்டும், டிக்ரி பிறப்பிக்கும் போதாவது அல்லது அதற்குப் பிறகு எப்போதாவது இந்தக் காரியத்துக்காக அதனிடம் விண்ணப்பம் கொடுக்கப்பட்டதன் பேரில், மனைவிக்கு சொந்தச் சொத்து ஏதேனுமிருந்தால் அந்தச் சொத்து, அவருடைய கணவரின் சொத்து, சக்தி, தம்பதிகளின் நடத்தை ஆகியவைகளைப் பொறுத்து நியாயமானதெனக் கோர்ட்டுக்குத் தோன்றுகிற ஒரு மொத்தத் தொகையையோ அல்லது மாதா மாதம், அல்லது குறிப்பிட்ட தொரு காலத்துக்கொருமுறை கொடுக்கப்படுகிற தொகையையோ, மனைவியின் ஜீவனத்துக்கும் ஆதரவுக்கும் கணவர் கொடுக்கவேண்டுமென உத்தரவிடலாம். அதற்கு, அவசியமானல், கணவரின் சொத்தின் மேல் பொறுப்பேற்படுத்தலாம்.

(2) உட்பிரிவு (1)-ன் கிழ் உத்தரவு ஒன்றைப் பிறப்பித்த பிறகு, எப்போதாகிலும் தம்பதிகளில் எவருடைய நிலைமை

யிலேனும் மாறுதல் ஏற்பட்டிருக்கிறதென்று ஜில்லாக் கோர்ட்டுக்கு திருப்தியளிக்கும் வகையில் தெரியவந்தால், தம்பதிகள்ல் எவருடைய கோரிக்கையின் பேரிலும் அந்தக் கோர்ட்டு, அதற்கு நியாயமெனத் தோன்றக்கூடிய முறையில் அந்த உத்தரவை வேறுபடுத்தவோ, மாற்றவோ அல்லது ரத்துப் பண்ணவோ செய்யலாம்.

(3) இந்தப் பிரிவின் கீழ் சாதகமாக உத்தரவு அளிக்கப் பட்டிருக்கிற ஒரு மனைவி, மறு விவாகம் செய்துகொண்டுவிட்ட தாகவோ அல்லது கற்பொழுக்கமான வாழ்க்கை நடத்திவர வில்லை என்றோ ஜில்லாக் கோர்ட்டுக்குத் திருப்தியளிக்கும் வகையில் தெரியவந்தால், அந்தக் கோர்ட்டு அந்த உத்தரவை ரத்துச் செய்துவிட வேண்டும்.

38. குழந்தைகளின் பாதுகாப்பு.— அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6-ன் கீழ் வரும் எந்த ஒரு நடவடிக்கையிலும், யுக்த வயது அடையாத குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி ஆகியவை சம்பந்தமாக, சாத்தியமான போதெல்லாம் அவர்களுடைய விருப்பத்துக் குகந்தபடி, ஜில்லாக் கோர்ட்டு, நியாயமானதென்றும் சரியானதென்றும் தாம் கருதுகிற இடைக்கால உத்தரவுகளை அப்போதைக்கப்போது பிறப்பிக்கலாம். டிக்ரியில் அதற்கான ஏற்பாடுகளைச் செய்யலாம். மேலும் டிக்ரியைப் பிறப்பித்த பிறகு, இதற்காக மனு மூலமாக விண்ணப்பம் செய்து கொள்ளப்படுவதன் பேரில், மேற்குறிப்பிட்ட டிக்ரியைப் பெறுவதற்கான நடவடிக்கை பைசலாகாமல் நடந்து கொண்டிருப்பதாக இருந்தால் அந்தக் குழந்தைகளின் பாதுகாப்பு, பராமரிப்பு, கல்வி ஆகியவை சம்பந்தமாக, அந்த டிக்ரி அல்லது இடைக்கால உத்தரவுகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் கூடிய சகல உத்தரவுகளையும் ஏற்பாடுகளையும், அப்போதைக்கப்போது ஏற்படுத்தவோ, ரத்துச் செய்யவோ, நிறுத்தி வைக்கவோ அல்லது மாற்றவோ செய்யலாம்.

39 டிக்ரிகளையும் உத்தரவுகளையும் அமுல் நடத்துவதும் அவற்றின்பேரில் அப்பீல் செய்து கொள்வதும்.—அத்தியாயம் 5 அல்லது அத்தியாயம் 6-ன் கீழ் வரும் எந்த ஒரு நடவடிக்கையிலும் கோர்ட்டு பிறப்பிக்கும், எல்லா டிக்ரிகளும் உத்தரவுகளும், அந்தக் கோர்ட்டின் அசல் சிவில் விசாரணை அதிகாரத்தைக் கொண்டு அந்தக் கோர்ட்டால் பிறப்பிக்கப்பட்ட டிக்ரிகளும் உத்தரவுகளும் எவ்விதமாக அமுல் நடத்தப்படுமோ

அவ்விதமாகவே அமுல் நடத்தப்பட வேண்டும். மேலும் அந்த சமயத்தில் அமுலிலிருந்து வருகிற சட்டத்தின்படி அவற்றின் பேரில் அப்பீல் செய்து கொள்ளப்படலாம்.

ஆனல், அத்தகைய அப்பீல் ஒவ்வொன்றும் டிக்ரி அல்லது உத்தரவு பிறப்பிக்கப்பட்ட தேதியிலிருந்து தொண்ணூறு நாட்களுக்குள் தாக்கல் செய்யப்பட வேண்டும்.

40. 1908-ம் வருஷத்து 5-வது சட்டத்தின் பிரயோகம்.— இந்தச் சட்டத்தில் கண்டுள்ள மற்ற ஷரத்துக்களுக்கும் இது விஷயமாக ஹைகோர்ட்டு செய்யக்கூடிய விதிகளுக்கும் உட்பட்டு, இந்தச் சட்டத்தின் கீழ் எடுத்துக் கொள்ளப்படும் எல்லா நடவடிக்கைகளும், சாத்தியமாயுள்ள வரையில், 1908-ம் வருஷத்து சிவில் புரொசிஜர் கோடினல் (1908-ம் வருஷத்து 5 வது சட்டம்) ஒழுங்குபடுத்தப்பட வேண்டும்.

41. நடைமுறையை ஒழுங்குபடுத்தி விதிகள் செய்ய ஹை கோர்ட்டுக்கு அதிகாரம்.—(1) ஹை கோர்ட்டு, அரசாங்க கெஜெட்டில் அறிவிப்பதன் மூலம், இந்தச் சட்டத்தில் கண்டுள்ள ஷரத்துக்களுக்கும், 1908-ம் வருஷத்து சிவில் புரொசீஜர் கோடு (1908-ம் வருஷத்து 5-வது சட்டம்)-க்கும் பொருத்தமானபடி அத்தியாயங்கள், 5, 6, 7 ஆகியவற்றில் கண்டுள்ள ஷரத்துக்களை அமுல் நடத்தும் காரியத்துக்குத் தேவையானவையென்று ஹை கோர்ட்டுக்குத் தோன்றுகிற விதிகளைச் செய்யலாம்

(2) அந்த விதிகள், முந்திய ஷரத்தில் பொதுவாகக் கூறப்பட்டுள்ளவற்றிற்கு விரோதமில்லாமல், குறிப்பாக பின்வரும் விஷயங்களுக்கு வகை செய்ய வேண்டும்,

(a) விபசாரத்தைக் காரணமாகக் காட்டி விவாக ரத்துக் கோரப்படும் ஒரு மனுவின் பேரில், விபசாரம் செய்தவரையும் ஒரு கூட்டு எதிர் மனுதாரராக மனுதாரர் சேர்த்துக்கொள்வது, எந்த சந்தர்ப்பங்களில் அவ்வாறு செய்வதினின்றும் மனுதாரர் மன்னிக்கப்படலாம்;

(b) அத்தகைய கூட்டு எதிர் மனுதார் ஒருவருக்கு எதிராக நஷ்டஈடுக்குத் தீர்ப்பளித்தல்,

(c) அத்தியாயம் 5-அல்லது அத்தியாயம் 6-ன் கீழ் வரும் எந்த நடவடிக்கையிலும், அந்த நடவடிக்கையில் ஏற்கெனவே ஒரு கட்சிக்காரராக இல்லாத நபர் எவரும், அந்த நடவடிக்கையில் தலையிடுதல்,

(d) விவாகத்தைச் செல்லாததாக ஆக்குவதற்கு அல்லது விவாக ரத்துக்கு ஆன மனுக்கள் எந்த விதமாக இருக்க வேண்டும்; அவற்றில் என்னென்ன விஷயங்கள் அடங்கியிருக்க வேண்டும்; அத்தகைய மனுக்களில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஏற்பட்ட செலவு தொகைகளைச் செலுத்துவது;

(e) இந்தச் சட்டத்தில் எவ்வித ஏற்பாடும் செய்யப்பட்டிராத அல்லது போதிய ஏற்பாடு செய்யப்பட்டிராத ஆனல் 1869-ம் வருஷத்து இந்திய விவாக ரத்துச் சட்டத்தில் (1869-ம் வருஷத்து 4-வது சட்டம்) ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிற வேறு எந்த விஷயமும்.

அத்தியாயம் 8

இதர விஷயங்கள்

42. விலக்கு.—இந்தச் சட்டத்தில் கண்டுள்ள எதுவும் இந்தச் சட்டத்தின் ஷரத்துக்களின் கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்டிராத எந்த ஒரு விவாகத்தின் செல்லும் தன்மையையும் பாதிக்காது; விவாகம் செய்துகொள்ளும் வேறு எந்த முறையின் செல்லும் தன்மையையும் இந்தச் சட்டம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ பாதிப்பதாகக் கொள்ளக்கூடாது.

43. விவாகமான நபர் ஒருவர் இந்தச் சட்டத்தின் கீழ் மறுபடியும் விவாகம் செய்து கொண்டால் அவருக்கு விதிக்கப்படும் தண்டனை.—அத்தியாயம் 3-ல் கூறப்பட்டுள்ளதைத்தவிர வேறு விதமாக, எந்த ஒரு நபராவது ஏற்கெனவே விவாகமானவராக இருந்து இந்தச் சட்டத்தின் கீழ் தனக்கு ஒரு விவாகம் நிறைவேற்றி வைக்கப்படும்படி செய்து கொண்டிருந்தால், அந்த நபர், இந்தியன் பீனல் கோடு (1860-ம் வருஷத்து 45-வது சட்டம்) 494-வது பிரிவு அல்லது 495-வது பிரிவின் கீழ் ஒரு குற்றம் புரிந்துள்ளவராகக் கருதப்படுவார்.

44. இரு தார விவாகத்திற்குத் தண்டனை.—இந்தச் சட்டத்தின் கீழ் விவாகம் நிறைவேற்றி வைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு நபரும், அவருடைய கணவர் அல்லது மனைவி உயிரோடிருக்கும் காலத்தில் வேறு விவாகம் செய்துகொண்டால் (கணவர் அல்லது மனைவி உயிரோடிருக்கும்போது மறுபடியும் விவாகம் செய்து கொண்ட குற்றத்துக்காக) இந்தியன் பீனல் கோடின் (1860-ம் வருஷத்து 45-வது சட்டம்) 494-வது பிரிவு அல்லது 495-வது பிரிவில் கண்டுள்ள தண்டனைகளுக்கு உட்பட்டவ

ராவார். அவ்வாறு செய்து கொள்ளப்பட்ட விவாகம் செல்லத் தகாததாகிவிடும்.

45. பொய்யான அறிவிப்பு அல்லது அத்தாட்சியில் கையெழுத்திடுவதற்குத் தண்டனை.—இந்தச் சட்டத்தின் மூலம் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் கோரப்படுகிற ஒரு அறிவிப்பு அல்லது அத்தாட்சியில் கூறப்பட்டுள்ள விஷயங்கள் பொய்யானவையாகவும், பொய்யானவை யென்று அவருக்குத் தெரிந்திருப்பதாகவும் அல்லது உண்மையானவை யென்று அவர் நம்பாததாகவும் இருந்து, அந்த அறிவிப்பு அல்லது அத்தாட்சியில் கையெழுத்திடுகிற அல்லது, சாட்சியாகக் கையெழுத்திடுகிற ஒவ்வொரு நபரும், இந்தியன் பீனல் கோடின் (1860-ம் வருஷத்து 45-வது சட்டம்) 199-வது பிரிவில் விவரிக்கப்பட்டுள்ள குற்றத்தைப் புரிந்தவராவார்.

46. விவாக அதிகாரியின் தவறான செய்கைக்கு தண்டனை.—எந்த ஒரு விவாக அதிகாரியும் தெரிந்தும், வேண்டுமென்றும்,

(a) 5-வது பிரிவில் கூறப்பட்டுள்ள பிரகாரம் விவாகத்தைப் பற்றிய அறிவிப்பைப் பிரசுரிக்காமல், அல்லது

(b) அத்தகைய அறிவிப்பு பிரசுரிக்கப்பட்டு முப்பது நாட்களுக்குள், அல்லது

(c) இந்தச் சட்டத்தில் அடங்கியுள்ள வேறு எந்த ஷரத்துக்கும் விரோதமாக,

ஒரு விவாகத்தை, தெரிந்திருந்தும், வேண்டுமென்றும் நிறைவேற்றி வைத்தால், அவருக்கு ஒரு வருஷம் வரை நீடிக்கக் கூடிய சாதாரண சிறைவாசமோ அல்லது ஐந்நூறு ரூபாய் வரை போகக்கூடிய அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படலாம்.

47. விவாக அத்தாட்சிப் புத்தகத்தை எவரும் பார்வையிடலாம்—(1) இந்தச் சட்டத்தின் கீழ் வைத்திருக்கப்படுகிற விவாக அத்தாட்சிப் புத்தகம் நியாயமான எல்லாக் காலங்களிலும் பார்வையிடக்கூடியபடி வைத்திருக்கப்படவேண்டும்; அதில் அடங்கியுள்ள வாக்கு மூலங்களுக்கு சாட்சியமாக அது அனுமதிக்கப்படக் கூடியதாகும்.

(2) விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் கண்டுள்ள விவரங்களின் அத்தாட்சி பெற்ற நகல்கள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பித்துக் கொள்ளப்படுவதின் பேரில் அந்த விவாக அதிகாரியால் கொடுக்கப்படவேண்டும்.

48. விவாக தஸ்தாவேஜுகளில் பதிவு செய்யப்பட்டுள்ள விவரங்களின் நகல் பிரதிகளை அனுப்புதல்—ஒரு ராஜ்யத்திலுள்ள விவாக அதிகாரி ஒவ்வொருவரும் விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் அவரால் பதிவு செய்யப்பட்ட எல்லா விவரங்களினுடையவும் உண்மைப் பிரதி யொன்றை நிர்ணயிக்கப்படுகிற முறையிலும், காலங்களிலும், அந்த ராஜ்யத்தின் ஜனன—மரண, விவாக ரிஜிஸ்டிரார்—ஜெனரலுக்கு அனுப்பி வரவேண்டும்; இந்தச் சட்டம் வியாபிக்கிற பிரதேசங்களுக்கு வெளியில் இருக்கிற விவாக அதிகாரிகள் விஷயத்தில் அந்த உண்மைப் பிரதி, இது விஷயமாக மத்திய சர்க்கார் நிர்ணயிக்கும் அதிகாரிக்கு அனுப்பப்படவேண்டும்.

49 தவறுகளைத் திருத்தல்—(1) விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள எந்த ஒரு விஷயத்தின் முறையிலாவது அல்லது விவரத்திலாவது ஏதேனும் தவறு இருப்பதாக எந்த விவாக அதிகாரியாவது கண்டுபிடித்தால், அவ்வாறு கண்டுபிடிக்கப்பட்ட பிறகு ஒரு மாதத்துக்குள் விவாகம் செய்து கொண்ட நபர்களின் முன்னிலையிலோ, அல்லது அவர்கள் இறந்து போயிருந்தால் அல்லது இல்லாதிருந்தால், நம்பகமான வேறு இரண்டு சாட்சிகளின் முன்னிலையில் அவர் அசல் பதிவில் மாறுதல் எதுவும் செய்யாமல், ஓரத்தில் பதிவு செய்வதன் மூலம் அந்தத் தவறைத் திருத்தலாம்; அந்த ஓரப் பதிவில் அவர் கையெழுத்திடவேண்டும்; அந்தத் திருத்தம் செய்யப்பட்ட தேதியையும் அதில் குறிப்பிடவேண்டும். அத்தாட்சிப் புத்தகத்திலும் அதேமாதிரி ஓரப் பதிவு ஒன்றை விவாக அதிகாரி செய்யவேண்டும்.

(2) இந்தப் பிரிவின் கீழ் செய்யப்படும் ஒவ்வொரு திருத்தமும், எவர்களின் முன்னிலையில் அவை செய்யப்பட்டனவோ அந்த சாட்சிகளால் அத்தாட்சிக் கையெழுத்திடப்படவேண்டும்.

(3) 48-வது பிரிவின் கீழ் ரிஜிஸ்டிரார் ஜெனரலுக்கோ அல்லது வேறு அதிகாரிக்கோ பதிவின் நகல் பிரதி ஒன்று ஏற்கெனவே அனுப்பப்பட்டிருந்தால், அந்த விவாக அதிகாரி தவருக இருந்த அசல் பதிவின் அத்தாட்சிப் பத்திரம் ஒன்றையும், அவற்றில் செய்யப்பட்டுள்ள ஓரத் திருத்தங்களின் அத்தாட்சிப் பத்திரம் ஒன்றையும் தயாரித்து அதேபோல அனுப்பி வைக்கவேண்டும்.

50. விதிகள் செய்ய அதிகாரம்—(1) ராஜதந்திர அதிகாரிகள், கான்சூலர் அதிகாரிகள் ஆகியோர்கள் விஷயத்திலும் மத்திய சர்க்காரின் மற்ற அதிகாரிகள் விஷயத்திலும் மத்திய சர்க்காரும், மற்றெல்லா விஷயங்களிலும் ராஜ்ய சர்க்காரும், அரசாங்க கெஜட்டில் அறிவிப்பதன் மூலம், இந்தச் சட்டத்தின் காரியங்களை நிறைவேற்றி வைப்பதற்கு விதிகள் செய்யலாம்.

(2) அந்த விதிகள் குறிப்பாகவும், முன் கூறப்பட்ட பொதுவான அதிகாரத்துக்கு விரோத மில்லாமலும். பின் வரும் விஷயங்கள் எல்லாவற்றிற்குமோ அல்லது ஏதாவதொன்றுக்கோ ஏற்பாடு செய்வதாக இருக்கலாம், அவையாவன :—

(a) விவாக அதிகாரிகளின் கடமைகளும் அதிகாரங்களும் அவர்கள் அதிகாரம் செலுத்தவல்ல பிரதேசங்களும்.

(b) விவாக அதிகாரி யொருவர் இந்தச் சட்டத்தின் கீழ் விசாரணைகள் நடத்துவதற்கான விதமும், அதற்கான நடைமுறையும்.

(c) இந்தச் சட்டத்தினல் அல்லது இந்தச் சட்டத்தின் கீழ் கோரப்படுகிற புத்தகங்கள் வைத்துக் கொள்ளப்பட்டு வர வேண்டிய மாதிரியும் விதமும்.

(d) இந்தச் சட்டத்தின் கீழ் விவாக அதிகாரி ஒருவருக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள எந்தக் கடமையையும் செய்வதற்கு விதிக்கப்படக் கூடிய கட்டணங்கள்.

(e) 16-வது பிரிவின் கீழ் பொது அறிவிப்பு கொடுக்கப் படவேண்டிய முறை.

(f) 48-வது பிரிவின்படி விவாக அத்தாட்சிப் புத்தகத்தில் செய்யப்பட்டுள்ள பதிவுகளின் நகல்கள் அனுப்பப்பட வேண்டிய விதமும், கால அளவுகளும்.

(g) நிர்ணயிக்கப்படக்கூடிய அல்லது நிர்ணயிக்கப்பட வேண்டிய வேறு எந்த விஷயமும்.

51. ரத்துகளும், விலக்குகளும்:— (1) 1872-ம் வருஷத்து விசேஷ விவாகச் சட்டமும் (1872-ம் வருஷத்து 3-வது சட்டம்) இந்தச் சட்டம் தொடங்கியதற்கு உடன் முன்னல் 'பி' பிரிவு ராஜ்யங்களில் அமுலிலிருந்த 1872-ம் வருஷத்து விசேஷ விவாகச் சட்டத்துக்குச்சரியான எந்தச் சட்டமும், இதன் மூலம் ரத்து செய்யப்படுகின்றன.

(2) அவ்வாறு ரத்து செய்யப்பட்ட போதிலும்,

(a) 1872-ம் வருஷத்து விசேஷ விவாகச் சட்டத்தின் கீழோ அல்லது அதற்குச் சரியான வேறு சட்டத்தின் கீழோ முறைப்படி நிறைவேற்றி வைக்கப்பட்ட எல்லா விவாகங்களும் இந்தச் சட்டத்தின் கீழ் நிறைவேற்றி வைக்கப்பட்டதாகக் கருதப்படவேண்டும்.

(b) இந்தச் சட்டம் அமுலுக்கு வரும்போது, விவாக சம்பந்தமான விவகாரங்கள் பற்றயும், விஷயங்கள் பற்றியும் எந்தக் கோர்ட்டிலும் விசாரணையிலிருந்து வரும் எல்லா வழக்குகளும் நடவடிக்கைகளும், சாத்தியமானவரை அவை ஆரம்பத்திலேயே இந்தச் சட்டத்தின் கீழ் தொடரப்பட்டவை போல பாவித்து, அந்தக் கோர்ட்டினுல் பைசல் செய்யப்பட வேண்டும்.

(3) உட்பிரிவு (2)-ல் கண்டுள்ள ஷரத்துகள், 1857-ம் வருஷத்து, பொது ஷரத்துகள் சட்டத்தின் 6-வது பிரிவில் கண்டுள்ள ஷரத்துக்களுக்கு விரோதமில்லாமல் இருக்கும்; அதற்குச் சரியான சட்டம் இயற்றப்பட்ட சட்டமாக இருந்தால் எப்படியோ, அப்படியே, அதற்குச் சரியான அந்தச் சட்டத்தை ரத்து செய்வதற்கும் பிரயோகமாகும்.

முதலாவது ஷெட்யூல்

(2 (b) பிரிவு, "தடுக்கப்பட்ட உறவு முறை" பார்க்கவும்.)

பாகம் 1

1. தாயார்.
2. தகப்பனரின் விதவை (மாற்றுந் தாய்).
3. தாயாரின் தாயார்.
4. தாயாருடைய தகப்பனரின் மனைவி.
5. தாயாருடைய தாயாரின் தாயார்.
6. தாயாருடைய தாயாரின் தகப்பனருடைய விதவை.
7. தாயாருடைய தகப்பனரின் தாயார்
8. தாயாருடைய தகப்பனரின் தகப்பனருடைய விதவை.
9. தகப்பனரின் தாயார்
10. தகப்பனருடைய தகப்பனரின் விதவை.
11. தகப்பனருடைய தாயாரின் தாயார்.
12. தகப்பனருடைய தாயாரின் தகப்பனருடைய விதவை.

13. தகப்பனுருடைய தகப்பனுரின் விதவை.
14. தகப்பனுருடைய தகப்பனுரின் தகப்பனுருடைய விதவை.
15. மகள்.
16. மகனின் விதவை.
17. மகளுடைய மகள்.
18. மகளுடைய மகனின் விதவை.
19. மகனுடைய மகள்.
20. மகனுடைய மகனின் விதவை.
21. மகளுடைய மகளின் மகள்.
22. மகளுடைய மகளின் மகனுடைய விதவை
23. மகளுடைய மகனின் மகள்.
24. மகளுடைய மகனின் மகனுடைய விதவை
25. மகனுடைய மகளின் மகள்.
26. மகனுடைய மகளின் மகனுடைய விதவை
27. மகனுடைய மகனின் மகள்.
28. மகனுடைய மகனின் மகனுடைய விதவை.
29. சகோதரி.
30. சகோதரியின் மகள்.
31. சகோதரனின் மகள்.
32. தாயாரின் சகோதரி.
33. தகப்பனுரின் சகோதரி.
34. தகப்பனுருடைய சகோதரனின் மகள்.
35. தகப்பனுருடைய சகோதரியின் மகள்.
36. தாயாருடைய சகோதரியின் மகள்.
37. தாயாருடைய சகோதரனின் மகள்.

விளக்கம்:—இந்தப் பாகத்தின் காரியங்களுக்கு, "விதவை" என்ற சொல்லில் விவாக ரத்து செய்யப்பட்ட மனைவியும் அடங்கியிருக்கிறது.

பாகம் 2

1. தகப்பனுர்
2. தாயாருடைய கணவர்
3. தகப்பனுருடைய தகப்பனுர்
4. தகப்பனுருடைய தாயாரின் கணவர்
5. தகப்பனுருடைய தகப்பனுரின் தகப்பனுர்
6. தகப்பனுருடைய தகப்பனுரின் தாயாருடைய கணவர்

7. தகப்பனுருடைய தாயாரின் தகப்பனுர்
8. தகப்பனுருடைய தாயாரின் தாயாருடைய கணவர்
9. தாயாருடைய தகப்பனுர்
10. தாயாருடைய தாயாரின் கணவர்
11. தாயாருடைய தகப்பனுரின் தகப்பனுர்
12. தாயாருடைய தகப்பனுரின் தாயாருடைய கணவர்
13. தாயாருடைய தாயாரின் தகப்பனுர்
14. தாயாருடைய தாயாரின் தாயாருடைய கணவர்
15. மகன்
16. மகளுடைய கணவர்
17. மகனுடைய மகன்
18. மகனுடைய மகளின் கணவர்
19. மகளுடைய மகன்
20. மகளுடைய மகளின் கணவர்
21. மகனுடைய மகனின் மகன்
22. மகனுடைய மகனின் மகளுடைய கணவர்
23. மகனுடைய மகளின் மகன்
24. மகனுடைய மகளின் மகளுடைய கணவர்
25. மகளுடைய மகனின் மகன்
26. மகளுடைய மகனின் மகளுடைய கணவர்
27. மகளுடைய மகளின் மகன்
28. மகளுடைய மகளின் மகளுடைய கணவர்
29. சகோதரர்
30. சகோதரரின் மகன்
31. சகோதரியின் மகன்
32. தாயாரின் சகோதரர்
33. தகப்பனுரின் சகோதரர்
34. தகப்பனுருடைய சகோதரரின் மகன்
35. தகப்பனுருடைய சகோதரியின் மகன்
36. தாயாருடைய சகோதரியின் மகன்
37. தாயாருடைய சகோதரரின் மகன்

விளக்கம் இந்தப் பாகத்தின் காரியங்களுக்கு "கணவர்" என்ற சொல்லில் விவாக ரத்துச் செய்யப்பட்ட கணவரும் அடங்கி யிருக்கிறது.

2-வது ஷெட்யூல்

(5-வது பிரிவு பார்க்கவும்)

விவாகம் செய்து கொள்ள உத்தேசித்திருப்பது பற்றிய அறிவிப்பு

.................ஜில்லா விவாக அதிகாரிக்கு

நாங்கள், இந்தத் தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்குள், 1954-ம் வருஷத்து விசேஷ விவாகச் சட்டத்தின் கீழ் விவாகம் செய்து கொள்ள உத்தேசங் கொண்டிருக்கிறோம் என்பதை இதன் மூலம் உங்களுக்கு அறிவித்துக் கொள்கிறோம்.

பெயர்	நிலைமை	தொழில்	வயது	வசிக்கும் இடம்	தற்போது வசிக்கும் இடம் நிரந்தரமற்றதாக இருந்தால் நிரந்தரமான வாசஸ்தலம்	வசித்து வந்துள்ள கால அளவு
மணமகன்	விவாகமாகாதவர் தாரம் இழந்தவர் விவாகரத்து செய்து கொண்டவர்					
மணமகள்	விவாகமாகாதவர் விதவை விவாகரத்து செய்து கொண்டவர்					

..........(தேதி) நாங்கள் இதில் கையொப்பமிடுகிறோம்.

(ஒப்பம்) (மணமகன்)

(மணமகள்)

3-வது ஷெட்யூல்

(11-வது பிரிவு பார்க்கவும்)

மணமகன் கொடுக்க வேண்டிய உறுதி மொழிப் பத்திரம்

(இன்னாராகிய) நான் இதன் மூலம் உறுதியாகக் கூறுவதாவது:—

1. எனக்கு தற்சமயம் விவாகம் ஆகியிருக்கவில்லை (அல்லது, சந்தர்ப்பத்தைப் பொறுத்து, நான் தாரம் இழந்தவர் அல்லது விவாக ரத்துச் செய்து கொண்டவர்).

2. எனக்கு...... ...வயது நிரம்பி யிருக்கிறது.

3. நான் (மணமகளின் பெயர்) உடன், தடுக்கப்பட்ட உறவு முறைக்குட்பட்ட உறவினன் அல்ல.

4. இந்த உறுதி மொழிப் பத்திரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதெதுவும் பொய்யாக இருந்தாலும், அதைக் கூறுகையில் அது பொய்யென்று எனக்குத் தெரிந்திருந்தாலும், அல்லது அது பொய்யென்று நான் நம்பி யிருந்தாலும், அல்லது அது உண்மையென்று நான் நம்பாமலிருந்தாலும், எனக்கு சிறை தண்டனையும், அபராதமும் விதிக்கப்படக்கூடும் என்பதை நான் அறிவேன்.

(ஒப்பம்) (மணமகன்)

மணமகள் கொடுக்க வேண்டிய உறுதி மொழிப் பத்திரம்

(இன்னாராகிய) நான் இதன் மூலம் உறுதியாகக் கூறுவதாவது:—

1. எனக்கு தற்சமயம் விவாகம் ஆகியிருக்கவில்லை (அல்லது, சந்தர்ப்பத்தைப் பொறுத்து, நான் ஒரு விதவை அல்லது விவாக ரத்துச் செய்து கொண்டவர்).

2. எனக்கு.........வயது நிரம்பி யிருக்கிறது.

3. நான் (மணமகனின் பெயர்) உடன், தடுக்கப்பட்ட உறவு முறைக்குட்பட்ட உறவினள் அல்ல.

4. இந்த உறுதி மொழிப் பத்திரத்தில் அறிவிக்கப்பட்டுள்ளதெதுவும் பொய்யாக இருந்தாலும், அதைக் கூறுகையில் அது பொய்யென்று எனக்குத் தெரிந்திருந்தாலும், அல்லது

அது பொய்யென்று நான் நம்பியிருந்தாலும், அல்லது அது உண்மையென்று நான் நம்பாமலிருந்தாலும் எனக்கு சிறை தண்டனையும், அபராதமும் விதிக்கப்படக் கூடும் என்பதை நான் அறிவேன்.

(ஒப்பம்) (மணமகள்)

மேற்கூறப்பட்ட (மணமகன்—மணமகளின் பெயர்கள்) வர்களால் எங்கள் முன்னிலையில் கையொப்பமிடப்பட்டது. எங்களுக்குத் தெரிந்துள்ள வரையில், இந்த விவாகத்துக்கு சட்டப்படியான தடங்கல் எதுவும் இருக்கவில்லை.

(ஒப்பம்) சாட்சிகள்
(3 பேர்)

தேதி...... ..

(ஒப்பம்) விவாக அதிகாரி

4-வது ஷெட்யூல்

(13-வது பிரிவு பார்க்கவும்)

விவாக அத்தாட்சிப் பத்திரம்

.........வருஷம்.........மாதம்.........தேதியன்று *

(மணமகனின் பெயர்)ரும்............(மணமகளின் பெயர்)ரும் என் முன்னிலையில் ஆஜரானார்கள் என்றும், அவர்கள் ஒவ்வொருவரும், என் முன்னிலையிலும், இதன்கீழ், கையொப்பமிட்டிருக்கும் மூன்று சாட்சிகளின் முன்னிலையிலும், 11-வது பிரிவின்படியான உறுதி மொழிகளைக் கூறியிருக்கிறார்கள் என்றும், அவர்கள் இருவருக்குமிடையே என் முன்னிலையில், இந்தச் சட்டத்தின் கீழ் விவாகம் நிறைவேற்றி வைக்கப்பட்டது என்றும், (இன்னாராகிய விவாக அதிகாரியின் பெயர்)—நான் இதன் மூலம் அத்தாட்சியளிக்கிறேன்.

(ஒப்பம்) ஜில்லா விவாக அதிகாரி

(ஒப்பம்) (மணமகன்)
(மணமகள்)

சாட்சிகள்
(3 பேர்)

வருஷம்........மாதம்.........தேதி ....

* மணமக்கள் பற்றிய விவரங்களைக் குறிப்பிடவும்.

5-வது ஷெட்யூல்

(16-வது பிரிவு பார்க்கவும்)

வேறு முறைகளில் செய்து கொள்ளப்பட்ட விவாகத்துக்கான அத்தாட்சிப் பத்திரம்

........வருஷம்.........மாதம்........தேதியன்று *

(மணமகனின் பெயர்)ரும்...............(மணமகளின் பெயர்)ரும் என் முன்னிலையில் ஆஜரானார்கள் என்றும், அவர்களுக்கிடையே விவாகச் சடங்கொன்று நடைபெற்றிருக்கிறதென்றும், அவர்கள் விவாகம் செய்து கொண்டதிலிருந்து அவர்கள் கணவனும் மனைவியுமாகச் சேர்ந்து வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்றும், அவர்கள் ஒவ்வொருவரும், என் முன்னிலையிலும், இதன் கீழ் கையொப்பமிட்டிருக்கும் மூன்று சாட்சிகளின் முன்னிலையிலும், உறுதியாகக் கூறி யிருக்கிறார்கள் என்றும், இந்தச் சட்டத்தின் கீழ் தங்களுடைய விவாகத்தைப் பதிவு செய்து கொள்ள அவர்கள் கொண்டுள்ள விருப்பத்திற்கிணங்க, அந்த விவாகம்........ வருஷம்—மாதம்—தேதியாகிய இன்றைய தினம், இந்தச் சட்டத்தின் கீழ் பதிவு செய்யப்பட்டிருக்கிறதென்றும், அது... தேதியிலிருந்து அமுலுக்கு வந்ததாக இருக்குமென்றும்,........ (இன்னாராகிய) நான் இதன் மூலம் அத்தாட்சி யளிக்கிறேன்.

(ஒப்பம்) ஜில்லாவின் விவாக அதிகாரி

(ஒப்பம்) கணவர்
மனைவி

சாட்சிகள்
(3 பேர்)

........வருஷம்........மாதம்........தேதி.

* கணவர் மனைவி பற்றிய விவரங்களைக் குறிப்பிடவும்.

PRINTED AT THE SUNDAY TIMES PRESS, MADRAS-6.

அண்ணல்
காந்தி அடிச்சுவட்டில்

ராஷ்டிரபதி

டாக்டர் ராஜேந்திர பிரஸாத்

எழுதியது

மகாத்மாவின் உத்தம சீடர் ராஜன் பாபு. சுதந்திரப் போராட்ட காலம் முழுவதிலும் தேசத் தந்தையுடன் நெருங்கி ஒன்றுக இருந்தவர். காந்திய தத்துவங்களை நன்கு அறிந்து அனுசரித்தவர்.

சம்பரான் போராட்ட காலத்திலிருந்து அநேகமாக மகாத்மாவுடன் கூடவே இருந்தவரான டாக்டர் ராஜேந்திர பிரஸாத், தமது அனுபவங்களை, தாம் கண்டு களித்த புதுமைகளை, காந்திய தத்துவத்தின் நுட்பங்களை, அற்புதமாக எழுதியிருக்கிறார். எத்தனையோ ருசிகரமான சம்பவங்களை அழகாகச் சொல்லுகிறுர்.

எல்லோரும் படிக்க வேண்டிய சிறந்த நூல். மகாத்மாவின் உள்ளத்தை உள்ளபடி அறிவதற்கு ஒப்பற்ற புத்தகம்.

தமிழில் இப்பொழுதுதான் வெளிவந்திருக்கிறது.

விலை ரூ. 8

தபாற்செலவு ரூ. 1

வேல் புத்தக நிலையம்

69, பீட்டர்ஸ் ரோடு :: சென்னை-6

WRAPPER PRINTED AT THE SOLAR PRINTERS, MADRAS-2